# விடுதலைப்புலிகள்

குரல் : 107 தை – மாசி, 2003 அன்பளிப்பு : 10/=



03 "மெய்ப்பொருள் காண்பதறிவு"

05 சமாதான காலம் குறித்து மட்டு - அம்பாறை மண்

06 "சமாதானம் முதலில் எமது வீடுகளையாவது திருப்பித் தரட்டும்"

08 நோயில் வட-கிழக்கும் வாழ்வில் தெற்கும்


# ஒருவருட யுத்த நிறுத்தம் ஏமாற்றம் தந்து கடக்கிறது!

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒருவருடம் பூர்த்தியாகியுள்ள நிலையில் அதன் முதலாவது பிறந்த ஆண்டைத் தமிழ்மக்கள் கறுப்புக் கொடி கட்டித் துக்கம் கொண்டாடவேண்டியதாக அதன் ஒருவருட வாழ்வு உள்ளடக்கத்தில் பயனின்றிக் கழிந்து போயிற்று.

இதற்கு இந்தப் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இலங்கை அரசாங்கம் தான் ஏற்றுக்கொண்ட ஒப்பந்த விதிமுறைகளை முழுமையாக அமுல்படுத்தாது தனது இராணுவத்தின் கடும் போக்குக்கொண்ட இராணுவ நிலைப்பாட்டிற்கு விட்டுக்கொடுத்துச் செயற்பட்டு வருவதே காரணமெனலாம். அத்தோடு, மக்களைத் தினமும் வாட்டுகின்ற மனிதாபிமானப் பிரச்சினைகளை விட தனது இராணுவத்தின் இராணுவ நலன்களுக்கு இந்த அரசாங்கம் முதன்மை கொடுப்பதுமே காரணம் எனலாம்.

இவற்றால் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள இயல்புநிலை தமிழ் மண்ணில் தோற்றம் பெறவில்லை. இராணுவ அழுத்தங்களும் நெருக்குவாரங்களும் தொடர்கின்றன. மக்களது வாழ்வில் அமைதி ஏற்படவில்லை. போர் ஓய்ந்த சூழலிலும் மக்கள் தமது வாழிடங்களுக்குத் திரும்ப முடியாதவாறு அவர்களை இராணுவம் தடுத்து நிற்கிறது. மக்கள் சுதந்திரமாக தொழில் செய்ய முடியாது தடுக்கப்படுகிறார்கள். அபிவிருத்திப் பணிகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

சமாதானத்தை நோக்கிய திசையில்தான் இந்த அரசாங்கம் செல்கிறதா என்ற மனக்கலக்கம் தமிழ் மக்களது மனங்களில் தோற்றம் பெறுகிறது. கடந்த அரசாங்கங்கள் சென்ற பாதையில்தான் இந்த அரசாங்கமும் செல்கிறதா என்ற அச்சமும் மக்கள் மனங்களில் குடிகொள்ள ஆரம்பிக்கிறது. தாம் மீளவும் சிங்கள அரசாங்கத்தால் ஏமாற்றப்பட்டுவிடுவோமோ என்ற பரிதவிப்பும் மக்கள் மனங்களில் ஏற்படுகிறது.

மொத்தத்தில் அரசாங்கத் தினதும் அதன் படைகளினதும் செயற்பாடுகள் மக்களை சமாதானத்தில் நம்பிக்கையிழக்கச் செய்கின்றன.

பல சாதனைகளைக்கண்டு, சமாதானம் யுத்தத்திற்குத் திரும்பவியலாத பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்பவேண்டிய நிலையில், கண்காணிப்புக் குழுவின் தேவைப்பாடு தேவையற்றது என உணரக்கூடியவாறு புரிந்துணர்வு வலுத்திருக்கவேண்டிய நிலையில் சமாதானமோ, பல சோதனைக் கட்டங்களைத் தாண்டியதாக, ஆரம்ப நிலையிலிருந்து அடுத்த கட்டத்திற்கு எதுவும் அசைய முடியாததாக நிற்கின்றது.

இராணுவத்தின் சமாதான விரோதச் செயற்பாடுகளினால் இயல்புச் சூழலை உருவாக்குவது மிகக் கடினமான பணியாக மாற்றப்பட்டிருக்கிறது. சமாதானத்தின் ஒருவருடச்சூழல் வீடுகளிலிருந்து, ஊர்களிலிருந்து, தங்கள் தொழில் நிலங்களிலிருந்து பெயர்த்தெறியப்பட்டு அலையும் தங்கள் வாழ்வை தங்கள் சொந்த வீடுகளுக்குத் திருப்பும் என்ற மக்களின் நம்பிக்கையில் நம்பிக்கை யீனங்களை விதைத்துள்ளது.

இவ்விவகாரம் மனிதாபிமானக் கண்ணின்றி யுத்தக் கண்ணோடு நோக்கப்படுகிறது. இப்படியான சூழலில் இந்த யுத்தக் கண்ணிலிருந்து சமாதானம் தப்பிப் பிழைப்பது இலகுவானதல்ல. இதன் வெளிப்பாடாகவே நெடுந்தீவுச் சம்பவமும் மானிப்பாய்ச் சம்பவமும் அமைந்தன.

நெடுந்தீவிலே சமாதானச் சூழலைப் பேணுவதற்காக புலிகள் தமது மூன்று இன்னுயிர்களை அர்ப்பணித்து அதியுச்சமான தியாகத்தைப் புரிந்தார்கள். மானிப்பாயிலே இராணுவத்தால் இளைக்கப்பட்ட பெரும் அவமானத்தைத் தாங்கிக்கொண்டு பொறுமை காத்தார்கள். மொத்தத்தில் புலிகள் தமது பெரும் தியாகத்தால் சமாதானச் சூழலைக் காத்துக்கொண்டார்கள்.

உண்மையிலேயே சமாதானம் சில மைல் கற்களையாவது கடந்திருக்கவேண்டிய இன்றைய சூழலில் சொந்த இடங்களிலிருந்து பெயர்க்கப்பட்ட மக்களுக்கு மீள்வாழ்வளித்து நம்பிக்கையூட்டத் தவறி, பேராபத்துக்களைச் சந்தித்து நிற்கிறது. இவை சமாதானத்திற்காக ஏங்கும் எவருக்கும் மகிழ்வூட்டக் கூடியவையல்ல.




தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# பயனற்றுப்போன பாதுகாப்பு உபகுழு

உருவாக்கப்பட்ட தன் நோக்கத்திற்கு குந்தகம் விளைவிக்க முற்பட்ட பாதுகாப்பு உபகுழு இப்போது செயலிழந்துள்ளது.

தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின் பெறுபேறாக அமைக்கப்பட்ட இந்த உபகுழுவின் ஆயுள் – நான்காம் கட்ட பேச்சுவார்த்தையின் முடிவுடன், முடிந்துபோகும் அவலமும் ஏற்பட்டுள்ளது.

Liberation Tigers Of TAMIL EELAM

புலிகளின் குரல்

சிறிலங்கா தரப்பில் பாதுகாப்பு உபகுழுவில் அங்கம் வகித்த இராணுவத் தளபதிகளின் அநீதியான – கடும்போக்கான இராணுவ நிலைப்பாடுகளே உபகுழுவிற்கு மரணத்தைத் தேடிக்கொடுத்துள்ளன.

தமிழர் நிலத்தில் இயல்பு நிலையை உருவாக்குதல் என்ற விடயம், சமாதானத்தின் முன்நிகழ்வாக இடம்பெறவேண்டும் என்பது புலிகள் இயக்கத்தின் உறுதியான அரசியல் நிலைப்பாடாக இருந்து வருகின்றது.

ஒருவருட வயதை அடைந்துவிட்ட போர்நிறுத்த ஒப்பந்த விதிகளின் பிரகாரம் இராணுவ பிரசன்னம் நீக்கப்பட்டு, தமிழ்மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ்வதற்கு அரசாங்கம் வழியேற்படுத்திக் கொடுத்திருக்க வேண்டும்.

ஆயினும், இன்றுவரை அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தமிழ் மக்களின் மீள் குடியேற்றமும் – இராணுவ பிரசன்ன நீக்கமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. மக்கள் வாழிடங்களிலுள்ள இராணுவ நிலைகள் அகற்றப்பட்டால்தான் மீள்குடியேற்றம் சாத்தியமாகும்.

எனவேதான் இடம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்களின் மீள்குடியேற்றத்திற்கு முன்னுரிமை கொடுக்கப் படவேண்டும் என்று தாய்லாந்து பேச்சு மேசையில் புலிகள் இயக்கம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

இராணுவ முகாம்களை அகற்றுவதென்பது படையினரின் பாதுகாப்பு ஏற்பாட்டுடன் தொடர்புடையது என்று இராணுவத் தரப்பு வாதிடுகின்றது.

மக்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பிச் செல்வது அவர்களின் அடிப்படை உரிமை. இந்த மனிதாபிமான நிலைப்பாட்டை பேச்சு மேசையில் அரச தரப்பும் ஏற்றுக்கொண்டுள்ளது.

எனினும், இராணுவத் தரப்பின் அச்சத்தைப் போக்கும் விதத்தில் ''பாதுகாப்பு உபகுழு'' என்றதொரு அலகை நிறுவ இருபகுதியினரும் உடன்பட்டனர்.

இருபகுதித் தளபதிகளும் ஒன்றுகூடிப்பேசி – பரஸ்பர நம்பிக்கையைக் கட்டிவளர்த்து படை விலகலுக்கும் – மீள்குடியேற்றத்திற்குமான ஒரு உகந்த சூழலை உருவாக்கப் பாடுபடுவதென தீர்மானிக்கப் பட்டது.

மக்களின் மீள் குடியமர்விற்கான புறச்சூழலை உருவாக்கவும் அதற்கான திட்டங்களைத் தயாரிக்கவும் – படையினர் வசமுள்ள தனியார் சொத்துக்களை உரியவர்களிடம் திருப்பி ஒப்படைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதுமே இந்தப் பாதுகாப்பு உபகுழுவின் கடமையாகும்.

எனினும், உபகுழுவின் ஆரம்ப அமர்விலிருந்து சிங்களத் தளபதிகள் தொடர்ச்சியாகக் காட்டிவந்த கடும்போக்கான நிலைப்பாடுகள் காரணமாக, பாதுகாப்பு உபகுழுவானது நல்லெண்ணச் சூழலைக் கட்டியெழுப்பி சமாதானப்பாதைக்கு உரமூட்டுவதற்குப் பதிலாக அதைச் சிக்கலாக்குவதிலேயே முனைப்புக் காட்டியது.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தளவில் பெருமளவு குடியிருப்பு நிலம் படையினர் வசமுள்ளது. குடாநாட்டிலே அதிகளவு மக்கள் செறிவாக வாழும் வலிகாமம் பகுதியில் ஏறத்தாழ அரைப்பங்கு நிலம் மக்கள் வசிக்காத ஆக்கிரமிப்புப் பகுதியாக உள்ளது.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்த்தப்படவேண்டும் என்று புலிகள் தொடர்ச்சியாகக் கூறிவந்தனர்.

படைத்தரப்பினர் அதற்கு மறுப்புத் தெரிவித்து வந்தனர். இறுதியில், மக்கள் மீளக் குடியமரும் விடயத்திற்கு நிபந்தனையாக புலிகள் இயக்கம் ஆயுத ஒப்படைப்பைச் செய்து நிராயுதபாணிகள் ஆகவேண்டும் என்று சிங்களத் தளபதிகள் நிலைப்பாடெடுத்தனர்.

படையினரின் இக்கடும்போக்கான இராணுவ அணுகுமுறைக்கு யாழ்ப்பாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தலைமை வகிக்கின்றார்.

அண்மையில் மானிப்பாயில், நடுவீதியில் வைத்து எமது பெண் போராளிகளைத் தாக்கி – அவர்களது இடுப்புப் பட்டியை பலவந்தமாகப் பறித்தெடுத்து அவர்களை இராணுவம் அவமானப்படுத்தியுள்ளது. அதைத் தடுக்கச் சென்ற அப்பகுதிப் பொதுமக்களை மிருகத்தனமாகத் தாக்கி காயப்படுத்தியுள்ளது. இந்த அட்டூழியச் செயல்களை குடாநாட்டின் இராணுவத் தளபதி மறைமுகமாக உற்சாகப்படுத்தி வருகிறார்.

சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாக அரச பிரதிநிதிகளும் – புலிகள் இயக்கமும் பேச்சுவார்த்தை மேசையில் முடிவுகளை எடுத்துவரும் வேளையில் சிங்களப் படையினர் – களத்தில் புலிகளை ஆத்திரமூட்டி போருக்கிழுக்கும் வன்செயல்களைப் புரிந்து வருகின்றனர்.

கட்டுப்பாடும், அரசியல் தலைமைத்துவமும் அற்ற சிங்களப் படைகளின் இனவாதச் செயற்பாடுகளை புலிகள் இயக்கம் நீண்டகாலம் சகித்துக் கொள்ளாது.

சமாதான முயற்சிகள் ஆரம்பமான நாளில் இருந்து சமாதானத்திற்கு விரோதமாகப் பேசியும் – செயற்பட்டும் சமாதானத்தின் எதிரியாக சிங்கள இராணுவம் தன்னை இனங்காட்டி வருகின்றது.

எப்படியாவது சமாதான முயற்சிகளைக் குழப்பிவிடுவது என்று கங்கணம் கட்டி நிற்கும் சந்திரிகா அம்மையாருக்கு இராணுவத் தரப்பின் இக்கடும்போக்கு மகிழ்ச்சியைக் கொடுத்து வருகின்றது. இராணுவத்தினரை உள்ளடக்கிய பாதுகாப்பு உபகுழுவை தனது கருவியாகப் பயன்படுத்த அம்மையாருடன் இணைந்து சிங்கள இனவாதிகள் முயன்றபோது அந்த பாதுகாப்பு உபகுழுவைக் கலைத்து சமாதான முயற்சிகளைப் பாதுகாக்க தலைவர் பிரபாகரன் முடிவெடுத்தார்.

பாதுகாப்பு உபகுழு கையாண்ட விடயங்களை புனர்வாழ்வு மற்றும் மனிதாபிமான விடயங்களைக் கையாண்டுவரும் உபகுழுவிடம் விடப்பட்டுள்ளது.

சமாதானத்திற்கான அனைத்து விடயங்களையும் சிங்கள அரசாங்கத் தலைவர்களும் – புலிகளின் தலைமைப்பீடமும் விவாதித்து முடிவெடுப்பதே சிறந்ததென்றும் பேச்சுவார்த்தைக்குள் படைத்தரப்பை இழுப்பது சமாதானத்திற்கு உதவப்போவதில்லை என்பதை அரசாங்கமும் உணர்ந்துள்ளது.

தமிழ் – சிங்கள முரண்பாட்டின் தீர்விற்கான சமாதானப் பேச்சுவார்த்தையில் சிங்கள இராணுவத்திற்கு தரப்பட்டிருந்த அற்புதமான வரலாற்று வாய்ப்பை சரத் பொன்சேகா தலைமையிலான சிங்களத் தளபதிகள் போட்டுடைத்துவிட்டனர்.

இனப்பிரச்சினை தொடர்பான சிங்கள இராணுவத்தின் இனவாதப் போக்கை – குரூரமான இராணுவ அணுகுமுறையை சர்வதேச சமூகமும் நேரடியாகக் கண்டுவிட்டது.

பாதுகாப்பு உபகுழு அமைக்கப்படும்போதும் சரி, அது கலைக்கப்படும்போதும் சரி புலிகள் இயக்கம் சரியான முடிவுகளையே எடுத்து – சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளித்து வருகின்றது. •

# "மெய்ப்பொருள் காண்பதறிவு"

க.வே.பாலகுமாரன்

இரண்டாம் உலகப் போரின் பொழுது செருமனி பிரான்சை ஆக்கிரமித்து பரிசு நகரம்வரை முன்னேறியது. அப்போது எல்லாமே முடிந்ததுபோல தோற்றப்பாடுகள் பிரான்சில் தோன்றின. அன்றைய நிலைபற்றி பிரான்சின் நாவலாசிரியரும் பத்திரிகையாளருமான அல்போன்சே கர் கூறிய கூற்றுக்கள் இப்போது எம் நினைவுக்கு வருகின்றன. ''எவ்வளவுக்கெவ்வளவு நிலைமைகள் மாற்றமடைந்ததாகத் தோன்றுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அவை மாறாமலே அப்படியேயிருக்கின்றன'' இக்கூற்று எவ்வளவு உண்மையென்பது பிரான்சின் மீட்சியோடும் செருமணியின் வீழ்ச்சியோடும் நிருபனமாகியது. அடிப்படை நிலைமைகளில் மாற்றம் ஏற்படாத நிலையில் ஏனையவற்றால் பயனில்லை. பிரான்சிய மக்களின் தேசப்பற்று, விடுதலையுணர்வில் மாற்றமேற்படாத நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பால் என்ன மாற்றம் நிகழமுடியும்? இதுவே இக்கூற்றின் பொருள்.



இன்று எம்மண்ணில் நடப்பதையும் பாருங்கள்; எம்மண்ணில் மட்டுமல்ல இத்தீவு முழுவதுமே பாரிய மாற்றங்களுக் குட்படுகின்றது. உண்மையிலே தமிழ்மக்கள் வாழ்வில் மட்டுமல்ல தமிழ்மக்களாலேயே பாரிய மாற்றங்கள் நிகழ்த்தப்படுகின்றன. அவர்களுக்கும் சிறிலங்கா அரசுக்குமான பெரும்போர் நிறுத்தப்பட்டுவிட்டது. தடையற்ற வணிகம்; விரைந்தோடும் வாகனங்கள்; வராதவர்கள் வருகை; பிரிந்தவர்கள் சேர்க்கை; இயங்காதவர்கள் இயக்கம்; முன்னர் நம்பமுடியாதவை இப்போது நம்பப்படுகின்றன. அமைதி, சமாதானம், இணக்க வாழ்வு, இயல்பு நிலை, மேம்பாடு இவை யாவற்றினையும்விட தொடரும் பேச்சுக்கள், இணக்கமாக விட்டுக்கொடுத்துச் செயற்படும் புலிகள் பாங்கு; அமைதித் தீர்வு காண்பதற்கேதுவாக இணைப்பாட்சியடிப் படையிலான தீர்வைக்கான அறிவுரை என தமிழ்மக்கள் சார்பாக புலிகள் முடிந்தளவு விட்டுக்கொடுத்து பெருந்தன்மை காட்டி அமைத்தித் தீர்விற்கான அனைத்து ஆயத்த ஏற்பாடுகளையும் செய்து முடித்துவிட்டனர். ஆகவே தொடரும் அமைதிப் பயணத்தில் சக பயணியாக சிறிலங்கா அரசின் நட்பு சக்தியாக புலிகள் இன்றுள்ளனர். இதுவே இன்றைய சூழலின் வெளிப்பாடும் தோற்றப் பாடுமாகும்.

இத்தோற்றப்பாட்டினடிப்படையிலேதான் எமது கதை தொடங்குகின்றது; சிக்கலான கதைதான்; ஆனால் சிக்கலை விடுவிக்கும் கதை. கருத்து மயக்கம், ஐயுறவு, நிழல் திரைகளால் உண்மைகள் மறையும் மாயத்தோற்றம் எல்லாமே இப்போது உருவாகின்றன. தாயகத்திலும் சரி புலம்பெயர்ந்து வாழும் எம்மவர் மனதிலும் சரி புதிய தோற்றப்பாடுகள் உருவாக்கும் கருத்துருவாக்கம் இவ்வாறு அமைவதற்கான வாய்ப்புக்கள் நிறையவேயுள்ளன. ஓய்ந்தபோர் இனிமேலும் தொடர சருவதேச சமூகம் விடப்போவதில்லை; புலிகளும் மாற்றுக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்; தாயகத்தில் மேம்பாடு என்பதே இலக்காகப் போகின்றது; எனவே புலிகள் முன்னரைப் போல எம்மிடம் உதவி கேட்கும் நிலையிராது. இவ்வாறு எம்மக்களில் எவராவது எண்ணினால் அது அவர்களின் தவறாகாது. ஏனெனில் தோற்றப்பாடுகள் வழிபிறந்த பார்வைகள் இவை.

இதேவேளை முன்னைய ஏமாற்று வரலாறுகளை நன்குணர்ந்தோரினதும் இன்றைய சிங்களத்தின் அரசியலை நன்கறிந்தோரினதும் மனதிலே தோன்றும் மிகச் சிக்கலான வினாவொன்றுண்டு. எம் மூத்தோர், விடுதலைப் பற்றுமிக்க எம் ஆர்வலர்கள், அரசியல் ஆய்வாளர், அறிஞர் வகையினர் இவர்கள். புலிகள் முழுமையாகவே சிறிலங்கா அரசை நம்பி தமது பேரம்பேசும் வலுவினடிப்படையான துருப்புச் சீட்டுக்களை அரசியலரங்கில் முன்வைத்து தற்போதைய அரசின் அமைதிப் பயணத்தில் பங்காளர்களாகி அதனால் அதனை நெருக்கடிகளிலிருந்து காப்பாற்றிச் செல்வதை தமது பாதையாக வரித்துச் செயற்படுவது எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும்? முன்னைய தமிழ்த் தலைமைகள் போல புலிகளும் ஏமாற்றப்படுவார்களா? பழைய ஏமாற்று வரலாறு மீண்டும் தொடருமா? ஏக்கமும் கவலையுமாக எழும் குரல்கள் எம்மை வந்தடைகின்றன. உண்மையிலே ஏலவே குறிப்பிட்ட இரு நிலைகளும் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாக இருப்பினும் அவை தற்போதைய மாற்றங்களின் தோற்றப்பாடுகளின் விளைவே.

இந்நிலைகளைக் கருத்திற் கொண்டே புலிகள் செய்தியொன்றைச் சொல்ல விரும்புகின்றார்கள். இதனைப் புரிந்து கொள்ளுமாறு தங்கள் அன்புக்குரியவர்களை வேண்டிக்கொள்கின்றார்கள். புலிகள் எவ்வளவுக்கெவ்வளவு இன்றைய அரசின் அமைத்தித் தீர்வினை காண்பதற்கான அரசினதும் சருவதேசத்தினதும் முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு இவற்றிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொள்கின்றார்கள். விடுவித்துக்கொள்ளல் என்னும் இத்தொடர் பிடல் 1953ஆம் ஆண்டு யூலை 26ஆம் திகதி மோன்காடோ இராணுவத் தளத்தின்மீது தாக்குதல் நடத்தியமைக்காக நீதிமன்றில் குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டபோது கூறிய புகழ்பெற்ற கூற்றான "வரலாறு என்னை விடுவித்துக் கொள்ளும்'' என்''தனை நினைவு படுத்தக்கூடும்.

தமிழீழ விடுதலைப்போராட்டம் இன்று சருவதேச அரங்கின் முன்றலில் நடை பயில்கின்றது. ஆனால் இங்குள்ள துயர் என்னவென்றால் இந்நிலை தமிழ்மக்களின் தரப்பின் நீதியை, நியாயத்தை, அறத்தை உலகுணர்ந்ததால் நிகழ்ந்ததல்ல என்பதே. இதனை உலகிற்குணர்த்த வன்முறை வழியில் ஆயுதப் போராட்டம் நடத்தி இன்றைய கணக்கின்படி 17,655 மாவீரர்களை, வித்தாக உதித்தவர்களை மீண்டும் வித்தாகவல்லோ விதைக்கவேண்டியதாகிற்று. இவ்வுலகம் தார்மீக நெறியென்னும் அறச் சிலா சுழல்கின்றது? அண்மையில் மாமனிதர் குமாரை நினைவு கூர்ந்து உரையாற்றிய திரு.தமிழ்மாறன் கூறியதை இங்கே நினைவுபடுத்திக் கொள்கின்றோம். "நாங்கள் எங்களது தன்னாட்சியுரிமையினை பிரயோகிக்க எவரது அனுமதியினையோ சம்மதத்தினையோ பெறத் தேவையில்லை. ஏனெனில் இவ்வுரிமை எல்லா நாடுகளினதும் பிறப்புரிமை. ஆனால் வரலாறு தரும் பாடமென்ன? தமிழ்மக்கள் ஆள்வதற்கான செயல்முறையில் பங்குபற்றத் தடுக்கப்பட்டமையால் புறநிலைத் தன்னாட்சியுரிமையினைக்கோர நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். உள்ளக தன்னாட்சியுரிமை முன்னரே வழங்கப் பட்டிருந்தால் இந்நாட்டில் வன்முறையே தோன்றியிராது. ஆனால் துயர்தரும் துரதிட்ட நிலை இன்று என்னவாக உள்ளது? உள்ளக தன்னாட்சி உரிமையைப் பெறத்தன்னும் சில அந்நிய சக்திகள் ஆதாரங்களல்லவா கேட்கின்றன. எனவேதான் இப்போதைய அமைதி முயற்சி நிகழ்கின்றது. தாமாகவே முன்வந்து சருவதேச சமூகம் உள்ளக சுயாட்சிக் கோரிக்கையை ஆதரிக்கும் பொறுப்பினை ஏற்றுள்ளதால் தமிழ்மக்கள் இனிமேலும் தொடரப்போகும் போராட்டத்தினை ஆதரிக்கும் தார்மீகக் கடப்பாட்டினை தம்மீது தாமே சுமத்தியுள்ளனர். ஆனால் ஒரு விடயம் நிச்சயமானது. புறநிலைத் தன்னாட்சியுரிமையைப் பிரயோகிக்கும் உரிமை பிறர் என்ன கருதுகின்றார்கள் என்பதைப் பொறுத்ததல்ல. இவ்வுரிமையைப் பிரயோகிப்பதற்கு சட்ட ரீதியிலான எந்தத் தடையும் கிடையாது" இப்படி விளக்கும் தமிழ்மாறன் "நாங்கள் இன்று மிக முக்கிய திருப்பு முனையில் நிற்கின்றோம். எமது துருப்புச் சீட்டுக்களை வெகு அவதானமாக பயன்படுத்த வேண்டும்" என்கிறார்.

புலிகளின் அண்மைக்காலச் செயற்பாடுகளின் அரசியல் பெறுமானம் என்ன? இனச்சிக்கலுக்கான தீர்வினைக் காண தமிழர் தரப்பில் எவையெல்லாம் தடையென நொண்டிச் சாட்டுக்கள் கூறி சருவதேச சமூகத்தினை தவறான திசையில் திருப்பி தனது இருப்பினைத் தக்கவைத்த சிறிலங்கா தனது அரசியல் ஏமாற்று நாடகத்தை இனியென்றும் தொடரமுடியாத நிலை உருவாக்கப்பட்டு விட்டது. (ஒரு தரப்பு மறுதரப்பை தவறான திசையில் திருப்பியதா அல்லது இரண்டுமே ஒத்த திசையில் சென்றனவா என்கிற வினாவை நாம் எழுப்பவில்லை) இப்போது இனச்சிக்கலுக்குத் தீர்வு காணும் பொறுப்பு சிறிலங்காவினதும் அதன் பாதுகாவலராகவும் போசகர்களாகவும் செயற்பட்ட சருவதேச சமுகத்தினதும் தலைமீது சுமத்தப்பட்டிருக்கின்றது. இந்நிலைமைக்கு சான்றாகத்தான் ஒரு நாடகம் இப்பிராந்தியத்தில் அரங்கேறுவதை வாசகர்கள் உணர்வார்கள். இன்று புலிகளை எதிர்ப்பது என்பது இத்தீவில், பிராந்தியத்தில் அமைதியை விரும்பாதோர், சருவதேச சமூகத்தின் பெருந்தன்மைமிக்க செயற்பாட்டினை எதிர்ப்போர் என்றாகிவிட்டது. தென்னாசியப் பிராந்திய அரசியலில் அண்மைக்காலமாக ஏற்பட்டுவரும் மாற்றங்கள் விடுதலைப் புலிகள் எவர் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் ஒரு முக்கிய பாத்திரத்தினை வகிக்கத் தொடங்கிவிட்டார்கள் என்பதன் ஒருவகை வெளிப்பாடே. இதன் பொருள் புலிகள் தம்மை விடுவிப்பதில் கணிசமான வெற்றிபெற்றுவிட்டார்கள் என்பதே. அமைதி முயற்சிகளிலிருந்து புலிகள் வெளியேறப்போகின்றார்கள் என்பதையல்ல இது குறிப்பது. வரலாற்றில் முதன்முறையாக சிங்கள அரசொன்று எவ்வித பேரினவாத திரைகளற்ற உள்ளதை உள்ளபடி காணும் யதார்த்த நிலைக்கு கொண்டுவந்து சேர்க்கப் பட்டதோடு இச்சிக்கலுக்கு தீர்வு காண்பதில் முற்றாகத் தம்மை ஈடுபடுத்தவும் தள்ளப்பட்டிருக்கின்றது என்பதே பொருள்.

எனவே சிங்கள அரசு காலம் காலமாக தாம் உருவாக்கிய பேரினவாத கருத்தியல் கோட்டையையும் அதனைக் காக்க உருவாக்கிய அனைத்து அமைப்புக்களையும் கலைத்தல் வேண்டும். இது அடிப்படை மாற்றங்கான வழி. இது நிகழும்வரை எத்தகைய மாற்றம் நிகழ்ந்தாலும் எல்லாமே மாறாமலேயிருக்கும். இதனைச் சுருக்கமாக விபரித்தால் சிங்களம் தன்னை இச்சிக்கலிலிருந்து விடுவிக்க – அரசியல் விடுவிப்பு; இராணுவ விடுவிப்பு எனும் இரு நிலைகளிலிருந்து செயற்படவேண்டும். அரசியல் விடுவிப்பென்பது ஒரு நாடு, ஒரு இனம், ஒரு மொழி, ஒரு மதம் என்கிற கருத்தியலில் உருவாக்கப்பட ஒற்றையாட்சி முறையை யாப்பிலிருந்து கிள்ளி, கிளறியெடுத்தல் வேண்டும். பேரினவாத சிந்தனையின் குறியீடான அரசியல் யாப்பினையே அகற்றல் வேண்டும். இதற்கு சிங்களத்தின் அனைத்துக் கட்சிகளும் நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வழங்கவேண்டும். பின்னர் மக்கள் தீர்ப்பு சாதகமாக வரவேண்டும். சிங்களக் கருத்தியல் ஊற்றின் மையங்களான பௌத்த மதபீடங்களும், ஊடகங்களும் மாற வேண்டும். சுருக்கின் சிங்கள அரசியல் கட்டுமாணம் அடிப்படை மாற்றம் காணவேண்டும். இவை நடக்குமா? நடக்குமென எவராலும் உத்தரவாதம் தரமுடியுமா? இவையெல்லாம் மெத்தக் கடினம் என்கின்றனர் ஆய்வாளர். ஆனாலும் புலிகள் இறங்கிவந்து காத்து நிற்கின்றனர்.

அடுத்தது, மகாவமிச மாயக் கருத்தியல் கோட்டையைக் காக்க அதன் கருவியாகச் செயற்பட உருவாக்கப்பட்ட இராணுவம் பற்றியது. இது இன்று வீங்கிப் பெருத்து பார்த்தீனியம் நச்சுச்செடி போல தமிழர் தாயகம் எங்கும் பரவி நிற்கின்றது. தமிழர் வாழ்வை மட்டுமல்ல தமிழ் மண்ணையும் பூதமாக விழுங்கி ஏலவே சிங்களக் குடியேற்றங்களால் விழுங்கப்பட்ட மண்ணையும் அடக்கி நிற்கின்றது.

இதன் கட்டமைப்பில், சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா? வெளிப்படுத்த வாய்ப்பாக உயர் பாதுகாப்பு வலயம் என்கின்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி பற்றிய சிக்கல் முன்வைக்கப் பட்டுள்ளது. ஆனால் என்ன நடக்கின்றது? இராணுவச் சமநிலை புலிகளுக்கு சாதகமாகிவிடும் இராணுவம் பாதுகாப்பற்ற சூழலில் சிக்கிவிடும் என்பன கூறும் பொருளென்ன? புலிகள் சிங்கள தேசத்தினையா ஆக்கிரமித்து நிற்கின்றார்கள்? அல்லது இருவேறு நாடுகளின் எல்லைச் சிக்கலா இது?

தமிழ்மக்கள் வாழும் சூழல் அவர்களுக்கன்றி வேறு யாருக்கு சாதகமாயிருக்கவேண்டும்? அவர்கள் பாதுகாப்பு அவர்கள் விருப்பமின்றி வேறு யாரின் விருப்பப்படி அமையவேண்டும்? ஒடுக்குளமுறையாளர்கள் ஒடுக்கப்பட்டவனிடமா பாதுகாப்பு உத்தரவாதம் கேட்பது? முதலில் ஆயுதம் தரித்து அழிக்க முற்பட்டவனைத் தடுக்க ஆயுதம் தாங்கியோரிடமா ஆயுதத்தினைக் கேட்பது? இதுவென்ன அபத்தம்?

"வாடாமல் வதங்காமல் பூவைக் காக்க அதை அடுப்பில் வை" என்றானாம் ஒருவன். ஆகவே எவ்வளவுக்கெவ்வளவு மாற்றங்கள் நடந்தாலும் நிலைமைகள் அவ்வளவுக்கவ்வளவு மாறாமலேயிருக்கின்றன. இதனைப் புரியுங்கள், சிந்தியுங்கள், காத்திருக்கின்றோம்.

# வடக்கு கிழக்கின் கல்வி ; வேண்டும் ஒரு விடுதலை




இரண்டு தசாப்தங்களின் முன்னர் தமிழ் மக்களின் உயர் கல்வி உரிமை மறுக்கப்பட்டதுடன் தீவிரமடைந்ததே ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டம். எனினும் இன்று இலங்கைத்தீவின் இரண்டு இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஓராண்டை கடந்த நிலையில், தமிழ் மக்களின் தாயக நிலப்பரப்பில் - வடக்கு கிழக்கில் கல்விசார் மேம்பாட்டில் குறிப்பிடக்கூடிய எந்தவொரு மாற்றமும் சிங்கள அரசால் நிகழ்த்தப்படவில்லை என்பது விசனத்திற்குரியதே.

கடந்த பத்து வருடங்களிற்கும் அதிகமான காலமாக யுத்தத்தின் களமாக மாற்றப்பட்ட வடக்கு கிழக்கின் தமிழர் வாழிடங்களெங்கும் இராணுவ அச்சுறுத்தல்களும், யுத்தத்தால் ஏற்படுத்தப்பட்ட அவலங்களும் தமிழ் மாணவரின் கல்வி வளர்ச்சியை எவ்வாறு நேரடியாகப் பாதித்தது என்பதற்குமப்பால், சிறிலங்கா அரசின் திட்டமிடப்பட்ட, கல்வி ரீதியிலான ஓரங்கட்டப்படல்களும், கல்விக்கான சில அடிப்படை உரிமை மறுப்புக்களும் வடகிழக்கின் தமிழ் கல்விச் சமூகத்திடையே நீண்டதொரு அறிவுசார் பலவீனத்தையும், கல்வி வெற்றிடத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

கடந்த பல வருடங்களாக சிங்கள அரசால் தமிழ்மொழிமூல ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டபோதும் அவர்கள் நியமனங்கள் பற்றாக்குறையாகவே இருக்குமாறு பார்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. 15,000 வரையான சிங்களமொழிமூல ஆசிரியர்கள் தேவைக்கு மேலதிகமாக நியமிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் இன்றுவரை 10,000 வரையான தமிழ்மொழிமூல ஆசிரியர்களின் நியமனங்கள் வெற்றிடமாகக் காணப்படுகின்றன. குறிப்பாக வன்னிப் பெரு நிலப்பரப்பில் 50 வீதத்திற்கும் அதிகமான ஆசிரியர்களுக்கு கடந்த பத்து ஆண்டுகளாக பற்றாக்குறை நிலவிவருகின்றது. இதேவேளை இன்று வடக்கு கிழக்கில் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டிருக்கும் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்ப்பதற்கான போதியளவு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளோ, கல்வியியல் கல்லூரிகளோ இதுவரை மேலதிகமாக உருவாக்கப்படாத நிலையில் தற்போது இயங்கி வரும் கல்வியியல் கல்லூரிகளிலும், ஆசிரியர் கலாசாலைகளிலும் கூட போதியளவு போதனாசிரியர்கள் இல்லாத நிலையிலும், கற்றல் வசதிகளற்ற நிலையுமே உருவாக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பலாலி ஆசிரியர் கலாசாலை பத்து வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக இடம்பெயர்ந்த நிலையில் இயங்கிவருகின்றது.

இருபத்தியேழு வரையான நிரந்தர விரிவுரையாளர்களைக் கொண்டிருக்க வேண்டியதொரு கல்வியியல் கல்லூரி மூன்று விரிவுரையாளர்களுடனேயே செயற்படுகின்றது. இந்நிலையில் மேலதிக விரிவுரையாளர்கள் பாடசாலைகளில் இருந்து பகுதி நேரமாக கல்வியியல் கல்லூரிகளுக்கு விரிவுரையாற்றச் செல்வதால், பாடசாலைகளினது கற்பித்தல் செயற்பாடுகளும் பாதிக்கப்படுகின்றன.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பெருநிலப்பரப்பில் எடுக்கப்பட்ட விபரங்களின்படி



கிளிநொச்சி மாவட்டத்தில் 16 வெற்றிடங்கள் உள்ள நிலையில் ஒரேயொரு கல்வி நிர்வாக அலுவலரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 31 கல்வி நிர்வாக அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளபோது இரண்டு அலுவலர்கள் மாத்திரம் கடமையாற்றும் நிலையும் காணப்படுகின்றன.

இந்நிலையில் அனுபவம் வாய்ந்த பாடசாலை அதிபர்கள் கல்வி நிர்வாக அலுவலர்களாக பணியாற்ற வேண்டியிருப்பதால் பல முன்னணிப் பாடசாலைகள் அனுபவம் வாய்ந்த அதிபர்களையும் இழக்கவேண்டி ஏற்பட்டிருக்கின்றன.

இவை இவ்வாறு இருக்க, வடக்கு கிழக்கு மாகாணத்தில் மொத்தம் 178 வரையான பாடசாலைகள் இயங்க முடியாத நிலையிலும், 231 வரையான பாடசாலைகள் இடம்பெயர்ந்த நிலையிலும் இயங்குவதாக வடகிழக்கு மாகாணத்தின் கல்வி அமைச்சுப் புள்ளிவிபரம் ஒன்று கூறுகின்றது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி வடக்கு கிழக்கில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக கூறப்படுகின்றபோதிலும் வன்னி உள்ளிட்ட வடக்குக் கிழக்கில் அமைந்திருக்கும் எந்தவொரு பாடசாலையும் இதுவரை முற்றாக புனரமைக்கப்படவோ, மீள்நிர்மாணம் செய்யப்படவோ இல்லை.

கடந்த பத்தாண்டுகளாக வடக்கு கிழக்கில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்படாத பிரதேசங்களில் அமைந்திருந்த பாடசாலைகளுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட அனேகமான நிதி ஒதுக்கீடுகள் தொடர்ந்த யுத்தத்தைக் காரணமாகக் கொண்டு வழங்கப்படாது தென்னிலங்கையின் ஏனைய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இன்று வடக்கு கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் கல்விசார் செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பினும் சிறிலங்கா அரசால் எந்தவொரு சிறப்பான கல்விக்கான ஒதுக்கீடுகளும் வழங்கப்படவில்லை. இதேவேளை பல வருடங்களின் முன்னர் தென்னிலங்கையில் பாடத்திட்டத்துடன் இணைக்கப்பட்டுவிட்ட பாடநெறிகள் பல, குறிப்பாக வடக்கு - கிழக்கு மாணவர்களின் தொழிற்கல்விக்கும் - சமூக மேம்பாட்டிற்கும் உதவக்கூடிய தொழிற்பாடநெறியான கடல்வளம் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய கற்கைநெறிகள், 1997 இல் தென்னிலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் இதுவரை வடக்கு கிழக்கு மாணவர்களுக்கு இப்பாடநெறி அறிமுகப்படுத்தப்படாமல், ஆசிரியர் கைநூல், மாணவர்களுக்கான பாடநூல் என்பன தமிழில் உருவாக்கப்படாமல் இருக்கின்றன. திட்டமிடப்பட்ட ரீதியில் வடக்குக் கிழக்கின் பெரும்பான்மைக் கடல்வளத்தை பூரணமாகப் பயன்படுத்த அடிப்படையான அறிவை மாணவர் மத்தியில் ஏற்படுத்தும் 'கடல்வளம்' பற்றிய கற்கைநெறி சிங்கள அரசால் திட்டமிடப்பட்டு கடந்த ஐந்து ஆண்டுகளாக அறிமுகப்படுத்தப்படாமலும், சிங்களம் தவிர்ந்த தமிழ்மொழியில் கற்பிக்க முடியாமலும் செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு யூன் மாதமளவில் தமிழீழக் கல்விப்பேரவையினால் இப்பாடநெறி யாழ் பல்கலைக் கழகத்தின் டிப்ளோமா கடல்வள கற்கை நெறியை பூர்த்திசெய்த மாணவர்களின் மூலம் பாடசாலைகளில் கற்பிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. இன்று யாழ் குடாநாடு, வன்னிப் பெருநிலப்பரப்பு உள்ளிட்ட வடக்குப்பகுதியில் 5000 வரையான மாணவர்கள் இத்தொழில் கற்கைநெறியை பாடசாலைகளில் மேற்கொள்கின்றனர். தென் தமிழீழப் பகுதிகளிலும் விரைவில் இக்கற்கைநெறியைக் கற்பிக்க ஏற்பாடுகள் தமிழீழ கல்விப பேரவையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

வன்னியில் முற்றாக இறுக்கப்பட்ட கல்வித்தடையினால் கல்வித்தரம் நெருக்கடிக்குள்ளாகியிருந்த 1998-1999 காலப் பகுதிகளிலும் தமது அயராத முயற்சியின் மூலமும், இடைவிடாத உழைப்பாலும், பல இடப்பெயர்வுகளை, அல்லல்களைச் சந்தித்தபோதும் மரநிழல்களின் கீழிருந்து தொடரப்பட்டு பேணப்பட்ட கல்வித்தரம், இன்று தென்னிலங்கையின் கல்வி வசதிகளுடன் ஒப்பிடும்போது பெருமளவு கட்டியெழுப்பப்பட வேண்டியதாகக் காணப்படுகின்றது.

சிறிலங்காவின் எப்பாகத்தை விடவும் அதிகமாகவும், கொடூரமாகவும் யுத்தத்தினால் பாதிப்படைந்த வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில், ஏற்பட்டிருக்கும் இக்கல்வி நெருக்கடி மாத்திரமின்றி, போரினால் அங்கவீனமுற்றோர், பார்வையிழந்தோர், நீண்டகாலம் கல்விச் செயற்பாடுகளில் இருந்து விலகியிருந்தோர் போன்றோர்களுக்கான விசேட கல்விக்கான (special eduction) தேவை மிகப்பெரியது. அரசு இதுவரை வடக்கு, கிழக்கிற்கான எந்தவொரு விசேட கல்விக்கான நடைமுறைப்படுத்தல்களிலும் கவனமெடுத்ததாக தெரியவில்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு ஒரு வருடத்தைக் கடந்த நிலையிலும், வடக்குக் கிழக்கின் ஆசிரியர், அதிகாரிகள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதையோ, வடக்குக் கிழக்கின் கற்பித்தல் தரத்தை உயர்த்துவதற்கான வளங்களை ஒதுக்கீடு செய்வதையோ சிறிலங்கா அரசு இதுவரை செயற்படுத்தத் தவறியே வருகின்றது.

இந்நிலையில், சர்வதேச நாடுகளினதும், அமைப்புக்களினதும் அழுத்தம் அரசுமீது வடக்கு கிழக்கில் வெறும் கல்விச்சாலைகளை புனரமைப்பு செய்வதுடன் நின்றுவிடாமல், பிரச்சினைகளின் மையங்களையும் அடிப்படைகளையும் வடக்கு கிழக்கில் இனங்கண்டு, வேகமானதொரு கல்வி புத்துயிர்ப்பிற்குத் தேவையான, உண்மையான புனர்வாழ்வை செயற்படுத்தவும் மேம்படுத்தவும் தூண்டவேண்டும்.

வடக்கு கிழக்கு கல்வி மேம்பாட்டிற்கான சிறப்புத் தீர்மானங்கள் உருவாக்கப்பட்டு, நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு, பிரத்தியேகமான அலகுகள் மூலம் அவை மேற்கொள்ளப்பட வேண்டும். அல்லாது கல்விப்புனர்வாழ்வு என்ற போர்வையிலும், எம்மக்கள் மீது பாகுபாடும், கல்வி உரிமை மறுப்பும் மட்டுமே இன்னமும் தொடருமாயின் இன முரண்பாட்டை இன்னமும் கூர்மை நிலையில் வைத்திருக்கவே அரசு விரும்புவதாக அர்த்தப்பட்டுவிடும்.

-அன்புமாறன்-



# சமாதானக் காலம் குறித்து மட்டு அம்பாறை மண்

இலங்கையின் கிழக்கு மாகாணமான தென் தமிழீழப் பகுதி இப்பொழுது ஊடகங்களால் அதிகம் பிரஸ்தாபிக்கப் படும் ஒரு பகுதியாகவுள்ளது. இனப்பிரச்சினை அரசியலில் தென் தமிழீழம் எப்பொழுதும் ஒரு விவகாரமான பகுதியாகவே இருந்து வருகிறது. தமிழின தேசிய ஒருமைப் பாட்டை சிதைவுறச் செய்யும் திட்டத்தில் மூலோபாயத்தின் முதல் கவனத்தைக் கொழும்பு எப்பொழுதும் தென் தமிழீழத்திலேயே குவித்து வந்திருக்கிறது.

அதிலும் சமாதானத் தீர்வு முயற்சியென்று வந்துவிட்டால் இது எப்பொழுதும் சர்ச்சைக்குரிய பகுதியாகி வருகிறது.

எனவே இது இக் காலங்களில் அரசியல் கவனம் பெற்ற பகுதியாகவும், அதிகம் பிரஸ்தாபிக்கும் பகுதியாகவும் ஆகிவிடுவது தவிர்க்கவியலாததே.

இத்தகைய நிலைக்குக் காரணமானது தமிழரின் பாரம்பரியமான இப்பகுதியில் இனத்துவ விகிதாசாரத்தை மாற்றியமைப்பதற்காக கொழும்பு எடுத்த குடியேற்றத் திட்ட நடவடிக்கையே.

இது எப்பொழுதும் தமிழ் சிங்கள முரண்பாட்டை நடைமுறையில் கொதிநிலையில் வைத்திருக்கத் தொடங்கியது. அத்துடன் இவ்விடயத்தில் இங்கு முக்கிய கவனத்தில் கொள்வது இஸ்லாமியரைக் கையாண்டு தமிழ்த் தேசிய பலத்தை உடைப்பதில் கொழும்பு தென் தமிழீழத்தில் வெற்றி கண்டமையாகும்.

இத்தகைய நிலை விடுதலைப்போரில் தென் தமிழீழத்தில் புலிகள் பரந்த கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை ஏற்படுத்துவதில் எப்பொழுதும் நெருக்கடிகளை தோற்றுவித்துக் கொண்டிருந்தது. வடக்குடன் ஒப்பிடுகையில் அதிக நெருக்கடி மிகுந்ததாகவும் அதிக பலப்பிரயோகம் தேவையாகவும் தென் தமிழீழத்தின் சூழல் இருந்து வந்தது.

இதனால் புலிகளால் பலமான அரசியல் கட்டுமாணங்களை நிர்மாணிக்கவும், நிர்வகிக்கவும் முடியாதவாறு அதன் புறச்சூழல் நிர்ப்பந்தித்தது. ஆக 1987இல் சில மாதங்களும் 1990இல் சில மாதங்களும் தவிர 1995 வரை பலமான கட்டுப்பாட்டுப் பகுதியென்று சொல்வதற்கு ஒரு பரந்த நிலப்பரப்பு இருந்திருக்கவில்லை.

இத்தகைய சூழமைவு விடுதலைப்போர் முறியடிப்புக்கு வாய்ப்பான சூழலை வடக்குடன் ஒப்பிடுகையில் அதிகம் அரசுக்கு வழங்கியது.

தென் தமிழீழத்தின் அதிக சனத்தொகை கொண்ட மட்டு-அம்பாறை மாவட்டத்தில் அரசின் இத்தகைய போக்கு அதிகமதிகம் காணப்பட்டது.

தோட்டாவும் துண்டுப் பிரசுரமும் சமவலுக்கொண்ட ஆயுதங்களாக இங்கு பிரயோகிக்கப்பட்டன.

படுகொலைகளால் தமிழ் மக்களை அச்சுறுத்தவும் பாதுகாப்புப் படையினால் சிங்களக் குடியேற்றங்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கவும், பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவினாலும் மற்றும் அரசியல் செல்வாக்கினாலும் இஸ்லாமிய மக்களிடையே முரண்பாட்டைத் தோற்றுவிக்கவும் ஊக்குவிக்கவும் முடிந்தது.

புலிகளிடம் ஒரு கட்டுப்பாட்டு நிலப்பரப்போ அரசியல் பணிக்கு அனுகூலமான நிலைமையோ இல்லாதவிடத்து அச்சுறுத்தப்பட்ட மக்கள் மத்தியில் துண்டுப்பிரசுரங்கள் வலுமிக்க ஆயுதங்களாக பிரயோகிக்கப்பட்டன.

அவற்றின் மைய இலக்கு பிரதேசவாதத்தை தூண்டிவிடுவதாக இருந்தன. அவை ஆயுதப் போராட்டத்தில் வெற்றிகிட்டாது என்பதையே பாடின. மாவீரர்களின் தியாகங்களையும், தலைமைத்துவத்தின் மகிமையையும் கொச்சைப்படுத்தின.

விடுதலைப்போரின் வளர்ச்சியையோ அதன் பலத்தையோ யதார்த்த பூர்வமான அதன் செயற் திட்டத்தையோ அறிய வாய்ப்பளிக்கப்படாத மக்களிடையே துண்டுப்பிரசுரங்களால் பெரும் யுத்தமே நிகழ்த்தப்பட்டதெனலாம்.

தோட்டாவிற்கு செலுத்து கருவியாக துப்பாக்கி எப்படி விளங்குகிறதோ அதேயளவு பயன்திறன் மிக்கதாக துண்டுப்பிரசுர யுத்தத்தில் துரோகக் கும்பல்களின் தேவை அவசியப்பாடானதாகியது. இதனால் மட்டு-அம்பாறை மாவட்டத்தில் அதிகம் துரோகக் கும்பல்களின் இருப்பிற்கும் வளர்ச்சிக்கும் எதிரி துணை நின்றான்.

விடுதலைப்போர்ச் சேனையின் பல வளர்ச்சியில் 1995 காலப்பகுதியில் மட்டு-அம்பாறையின் 2000 சதுர கிலோ மீற்றர் பரப்பைக்கொண்ட படுவான்கரைப் பிரதேசத்தை விடுதலைப்புலிகள் மீட்டெடுத்து தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர்.

1999 பிற்கூற்றில் ஒருபெரும் மரபுப் போர்ச் சேனையாக வன்னியில் மையங்கொண்ட புலிகளின் படையணிகள் மீட்புப் போருக்குத் தயாராகி விரிந்து வியாபித்து எல்லைகளை மீட்கத் தொடங்கியபோது விடுதலையின் விரைவான சாத்தியத்தை அந்தப்பலம் பறைசாற்றியது. பின் சிறிலங்காவில் நடந்த ஆட்சி மாற்றமும் மூன்றாந்தரப்பின் அனுசரணையும் சமாதானத்தைப் பிறப்பித்தது. நம்பிக்கையொளி வீசக்கூடிய ஒப்பந்தங்களும் பேச்சுக்களும் இடம்பெற்றன.

இம்முறை அமைதி ஒப்பீட்டளவில் ஆழமானதாகவே உணரப்பட்டது.

ஆனால் அமைதி இந்த ஒரு வருடத்தில் சாதித்துக் கொண்டவை மிக அரிதானதே.

குறிப்பாக மட்டு-அம்பாறை மாவட்டத்தில் இந்த ஓராண்டில் வேட்டோசைகளையும் எறிகணை வெடிப் பதிர்வுகளையும் கேட்க முடியவில்லை. இராணுவ முகாம்களில் அமைக்கப்பட்டிருந்த வீதித் தடைகள் பகலில் மக்களின் போக்குவரத்திற்காகத் திறந்து விடப் படுகின்றன.

முகாம்களின் முன்னால் பிரதான வீதியில் அமைக்கப் பட்டிருந்த தடைகள் அகற்றப்பட்டுள்ளன. இரண்டு பொலிஸ் நிலையங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. மட்டு-அம்பாறையில் சமாதானத்தின் ஒருவருட சாதனைப்பட்டியல் இதற்கப்பால் நீளமுடியவில்லை.

மட்டுநகரில் 466 சதுர கிலோ மீற்றர் பரப்பைக் கொண்ட எழுவான்கரைப் பிரதேசத்தில் இரண்டு கிலோ மீற்றருக்கு ஒன்று என்ற அடிப்படையில் அமைந்திருக்கும் பத்து இராணுவ முகாம்களோ அவற்றுக்கிடையில் அமைந்திருக்கும் விசேட அதிரடிப்படை முகாம்களோ எதுவும் இன்று வரை அகற்றப்படவில்லை. முகாம்கள் ஆக்கிரமித்திருக்கும் 381 வீடுகளில் ஒன்றுதானும் மக்களிடம் மீளளிக்கப் படவில்லை.

மட்டுநகர் மண்ணில் உயர்பாதுகாப்பு வலயமென இராணுவத்தினர் குறிப்பிடும் நகரப்பகுதி பாதுகாப்பு வலயத்துக்குள் அரசாங்க அதிபர் செயலகம் உள்ளிட்ட அரச பணிமனைக் கட்டடங்கள் பதினெட்டில் ஒன்றேனும் மக்களின் சுதந்திரச் செயற்பாட்டுக்காய் திறந்துவிடப்படவில்லை. மட்டுநகர் மண்ணின் ஒரேயொரு பொது விளையாட்டு மைதானம்கூட இராணுவ பயிற்சித்திடலாகவே உள்ளது.

இதேபோன்று அம்பாறை மண்ணில் உயர் பாதுகாப்பு வலயமெனக் கூறிக்கொள்ளும் காஞ்சிரங்குடா பிரதேசத்தில் மக்கள் யாரும் குடியமர அனுமதிக்கப்படவில்லை. இதனைக் கடந்துசென்று மக்கள் குடியமரவேண்டிய கஞ்சிகுடிச்சாறு, தங்கவேலாயுதபுரம், தாமரைக்குளம், ரூபஸ்குளம் முதலான நான்கு கிராமங்கள் இன்னும் மீள் குடியேற முடியாத நிலையில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



அக்கரைப்பற்று திருக்கோவில் வைத்திய சாலையில் இருக்கின்ற படைமுகாம் இவ்வாண்டு மூன்றாம் மாதம் முதலாம் திகதி அகற்றப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது. எனினும் அதற்கான முயற்சிகள் நடப்பதாக இல்லை. கண்ணகிபுரம் ஆலயத்துள் இருக்கும் படைமுகாமை அகற்ற மறுத்து அதனைப் பௌத்த விகாரையாக மாற்றும் முயற்சியிலும் இறங்கியுள்ளனர்.

மொத்தத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களினுள்ளேயோ அன்றி வெளியிலேயோ மக்கள் குடியேறும் எந்த முயற்சிகளையும் அரசும் இராணுவமும் எடுக்கவில்லை. மாறாக ரோந்து நடவடிக்கைகளும் இரவு நேரங்களில் வீதியோரங்களில் பதுங்கிக் கிடக்கும் நிலையும் வீடுகளைச் சுற்றிவளைத்து தேட முயற்சிப்பதும் தனிப்பட்ட நபர்களை அச்சுறுத்துவதும் திடீர் நிபந்தனைகளைப் போடுவதுமென இராணுவ அழுத்தங்களும், அச்சுறுத்தல்களும் தளராமனம் காட்டுகின்றன.

மக்களை மீளக் குடியமர்த்துவதும் அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் பூச்சிய நிலையிலேயே உள்ளன. வட தமிழீழத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் சில ஆங்காங்கு சிறிய புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் அதேநேரம் மட்டு-அம்பாறை மண்ணில் புல்லுமலை, மன்னம்பிட்டி, மயிலந்தனை, கஞ்சிகுடிச்சாறு, தங்க வேலாயுதபுரம், தாமரைக்குளம், ரூபஸ்குளம் என முற்றாக அழிந்துபோன கிராமங்களையோ, இடம் பெயர்ந்து போன மக்களைப் பற்றியோ அங்குள்ள நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவது பற்றியோகூட அவை கண்டு கொள்வதாக இல்லை. அவை பிற கண்டுபிடிப்புக்களிலேயே ஆர்வம் காட்டுவன போல் தெரிகின்றது.

மட்டு-அம்பாறை மண்ணில் சமாதானம் தோட்டாக்களும் துண்டுப் பிரசுரங்களும் முற்றுகையிடாத விழிப்புக்குரிய காலமாக இருக்கின்றதேயொழிய சமாதானத்தை நுகர்வதற்கான காலமாக அது மலரவுமில்லை வளரவுமில்லை. ●

# "சமாதானம் முதலில் எமது வீடுகளையாவது திருப்பித்தரவேண்டும்"

எமது மக்களிற்கு இடப்பெயர்வுகளால் ஏற்பட்ட வாழ்வியல் அனுபவங்கள் மிகவும் துன்பகரமானவை. தமிழர்களின் எல்லா வீடுகளுமே இடப் பெயர்வுகளால் அவலம் அடைந்தவை என்று சொல்லுமளவிற்கு எல்லோரையுமே அது பதம் பார்த்தது. பல குடும்பங்களை அது சின்னா பின்னமாக்கியது. ஒன்று மாறி ஒன்று என எத்தனையோ கொட்டில்களிலும் மரநிழல்களின் கீழும் எம் மக்கள் வாழ்ந்து விட்டார்கள். இப்போது, இந்தப் புரிந்துணர்வு காலத்தில் தமது சொந்த வீடுகளுக்குப்போக அவர்கள் துடிக்கிறார்கள்.

அண்மையில் வவுனியாவில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களுக்குச் சென்றிருந்தேன். முன்னரும் ஒரு தடவை அங்கிருக்கும் எல்லா மக்களுடனும் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்ததால் அவர்களுடன் ஏற்கனவே அறிமுகம் இருந்தது. இழப்பதற்கென்று தமது உயிர்களைத்தவிர வேறொன்றும் இல்லாத பல்லாயிரம் குடும்பங்கள் இப்போதும் அங்கேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. உருக்குலைந்து கொண்டிருக்கும் அந்த விடுதிகளுக்குள் காலெடுத்து வைத்தபோது, ஆறு மாதங்களுக்கு முன்னர் அவர்களுக்கு நான் கூறிய வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருந்தது எனக்கு ஒருகுற்ற உணர்வைத்தந்தது.

" நீங்கள் இந்தப் போரின் கொடுமைகளை அதிகமாக அனுபவித்திருக்கிறீர்கள். ஆனால் இப்போது சமாதானச் சூழல் உருவாகி வருகிறது. நீங்கள் உங்கள் சொந்த ஊர்களுக்குச் சென்று தனித்துவமாகவும், கௌரவமாகவும் வாழ்ந்த வாழ்வை மீட்டெடுக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். இந்தப் பேச்சுக்கள் மூலம் அதற்குரிய வழிவகைகளை நாங்கள் உருவாக்கித் தருவோம். கடந்த கால அனுபவங்கள் உங்களுக்குக்குழப்பத்தை ஏற்படுத்தலாம். ஆனால் அவற்றுடன் இன்றைய சமாதான சூழலை ஒப்பிட்டு நீங்கள் குழப்பமடையத் தேவையில்லை." என்று நான் உரையாடிய மக்களின் வாழ்வில் ஆறு மாதங்களின் பின்பும் எதுவித மாறுதல்களும் ஏற்பட்டிருக்காத சூழலில் செல்வது எனக்கு பெரும் சங்கடமாக இருந்தது.

காங்கேசன்துறையைச் சேர்ந்த செல்லம்மாபாட்டியின் விடுதிக்கு நேராகச் சென்றேன். அவரை உயிரோடு கண்டது எனக்குப் பெரும் நிம்மதியைத் தந்தது. சென்றதடவை சென்றபோது "இனி எனக்கு ஒண்டும் தேவையில்லை. பூட்டப் பிள்ளையளைக்கூடக் கண்டிட்டன். அதுகளுக்கெண்டு என்ர காணியில நாலுதென்னம் பிள்ளையாவது நட்டுவைக்காமல் எப்பிடி நிம்மதியாச் சாகிறது." என்று எனக்கு சொல்லியிருந்தார். இப்போது அவரால் என்னை இனம் காணமுடியவில்லை. ஞாபகமூட்டியபோது "போன மாரிக்கு இந்த சீவன்போகாமல் தப்பினது அதிசயம் தம்பி ஏதோ ஆண்டவன் வழிவிட்டுட்டான். கொட்டிலையொருக்கா அண்ணாந்து பார்தம்பி." அவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டிருந்த அடிப்படை வசதிகள் எல்லாமே ஆட்டம் கண்டுவிட்டிருந்தன. அவற்றால் இனியும் தாக்குப் பிடிக்க முடியும் போல் தெரியவில்லை. என்னைக் கண்டதும் ஒருவர் ஒருவராக ஆட்கள் கூடத்தொடங்கி விட்டார்கள்.

"சண்டை நடக்கேக்குள்ளயாவது இடக்கம் யாராவது வந்து பாத்துக்கொண்டு போவாங்கள். பிச்சைச் சாமானாயாவது ஏன்னத்தையும் தருவாங்கள். அதுகளை வச்சு ஏதோ சமாளிப்பம். இப்ப சமாதானம் வந்திட்டுதாம். ஒருத்தரும் இஞ்சால வாறதில்லை. நீங்களெல்லாம் ஆருக்குத் தம்பி சமாதானம் பேசுறியள்." என்று கேட்ட ஐம்பது வயது ஐயா ஒருவர் "நாங்கள் ஏதாவது கேட்கப் போனால் 'ஏன் நீங்கள் உங்கட உங்கட இடத்துக்குப் போகலாம் தானே.' எண்டமாதிரிக் கதைக்கினம். எங்கட ஊருகளுக்கு நாங்கள் இப்பவும் போகஏலாமல் இருக்குது எண்டதும் இஞ்சயிருக்கிற அரவாசிச் சனத்துக்கு ஒருதுண்டு நிலம் கூட எங்கையுமே இல்லை எண்டதும் ஆருக்குத் தம்பி தெரியும்." என்று மீண்டும் கூறி நின்றார். சமாதானம் பெருந்தெருக்களை மிக விரைவிலேயே திறந்து விட்டதால் சிறு தெருக்கள் இன்னமும் தடைசெய்யப்பட்டிருப்பதை பலருக்குத் தெரியாமல் போனது துரதிஸ்ரம் தான். இன்னமும் அவர்கள் கதைத்துக் கொண்டேயிருந்தார்கள்.

கலாச்சாரரீதியான பிரச்சனைகளும் அங்கு பூதாகரமானவையாக இருந்தன. அவை யுத்தத்தைவிடக் கொடியதாகக் குடும்பங்களைச் சீரழித்துக் கொண்டிருந்தன. தமது எதிர்காலத் தலைமுறையினர்குறித்து பெரியவர்கள் அதிகம் கவலை கொண்டிருக்கிறார்கள். "நாங்கள் தான் எப்பிடியோ எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு வாழ்ந்திட்டம். இந்தச் சின்னனுகள் இந்தவயதிலேயே எவ்வளவு துன்பப் பட்டுட்டுதுகள் அதுகளுக்கு இனியாவது நல்லதொரு எதிர்காலத்தைத் தேடிக்கொடுக்க வேணும். இஞ்சயிருக்கிற ஒவ்வொரு நாளும் அதுகளின்ர வாழ்க்கையை நாசமறுக்குது. இஞ்சயிருந்து கொண்டு நாங்கள் எங்கட பிள்ளையளை ஒழுங்கா வளர்த்தெடுக்க வேணுமெண்டு எவ்வளவு பாடுபட்டாலும் அது முடியாது." என்று சொன்ன அம்மாவின் பிள்ளை அருகிலிருந்து சொன்னாள். "நாங்கள் முகாமில் இருக்கிறதால பள்ளிக்கூடத்தில எங்கள எல்லாப்பிள்ளையளும் வித்தியாசமாத்தான் பாக்கினம்." அவள் வவுனியாவில் உள்ள பிரபலமான பாடசாலையொன்றில் சாதாரணதரம் படிக்கிறாள். இந்த நிலை வவுனியாவில் உள்ள எல்லா நலன்புரி நிலையங்களிலுமே நிலவுகிறது. இளவயதுத் திருமணங்கள், மோசமான குடிவகைகளுக்கு வயது வேறுபாடின்றி அடிமையாதல், பாலியல் பிரச்சினைகளால் ஏற்படும்

– அ.திபன் –

குடும்பச்சிக்கல்கள் என இன்னும் பல மோசமான சீரழிவுகளுக்குள் அவர்கள் புதையுண்டு போயிருக்கிறார்கள்.

பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் முகாம் அலுவலராகக் கடமையாற்றும் இராசநாயகம் ஐயா பின்வருமாறு சொன்னார். "மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணிப்பெண்களாகச் செல்வதால் ஏற்படும் குடும்பப் பிரச்சினைகள் இங்கு மிகவும் கொடுமையாக இருக்கிறது. இளம் வயதிலேயே திருமணம் செய்து விடுகிறார்கள். நான்கு ஐந்து பிள்ளைகள் பிறந்ததும் வறுமை தலைவிரித்தாடும். மனைவியை உழைப்பதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு கணவன் வேறுஎங்கேனும் போய்விடுவான். பிள்ளைகள் நடுத்தெருவில்த்தான். ஐந்தாவது வருசத்துக்குப் பிறகு மனைவி வெறுங்கையுடன் வரும்போது பிள்ளைகள் அங்கொன்று இங்கொன்றாகச் சிதறிக்கிடப்பார்கள். இப்படியான கட்டங்களில் தற்கொலைகள் கூட நடந்திருக்கின்றன. முகாம் என்பதாலும் குடும்பங்கள் செறிவாக வாழ்வதாலும் இது ஒரு தொற்று நோய் போல எல்லா வீடுகளுக்கும் பரவப் பார்க்கிறது." அமைதியாக எல்லோரும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு பத்திரிகையாளனாகவோ அல்லது தமக்கு உதவக்கூடிய ஒரு முக்கியஸ்தராகவோ என்னை நினைத்து அவர்கள் எவரும் உரையாடவில்லை. பல தரப்பினரையும் அவர்கள் குற்றம் சாட்டினார்கள். சமாதான காலத்தில் இயல்பாகவே எழும் விருப்புகளுக்கு ஆட்பட்டு அவற்றை அடைய முடியாத இயலாமையால் அவர்கள் மனம் உடைந்து போயிருந்தார்கள். பேச்சு மேசைகளில் என்ன நடக்கிறது என்பதை அவர்களில் எவரும் பெரிதாக அறிந்திருக்கவில்லை. ஆயினும் தமது வீடுகளுக்குத் தம்மால் இன்னமும் போக முடியாது என்பதை மட்டுமே அவர்கள் அறிந்திருக்கிறார்கள். போர் நடைபெற்ற காலங்களிலும் பார்க்க தற்போதைய சமாதான காலத்தில் அவர்கள் பல மடங்கு மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.



"சண்டை நடக்கிற காலங்களில ஊருக்கு போறது பற்றி வருசக்கணக்கிலதான் இலக்கு வைப்பம். ஒவ்வொரு வருசமும் அடுத்த பொங்கலுக்கு வீட்டுக்குப் போயிடலாம் எண்டு தான் எல்லாரும் கதைப்பினம். ஆனால் சண்டை நிண்ட உடன இண்டைக்குப் போகலாம் நாளைக்குப் போகலாம் எண்டு நினைச்சு நினைச்சு ஒவ்வொரு நாளும் ஏமாந்து போகிறம்." என்று அவர்களில் பலரும் சொன்னார்கள். "உண்மையில எங்களுக்கு ஒவ்வொரு நேரச் சாப்பாட்டுக்கே எவ்வளவு கஸ்ரமாயிருக்கு. தாற நிவாரணம் எங்களுக்குக் காணும் எண்டு சொல்லேலாது. இப்பிடியே வருசக் கணக்கில வயிறு நிரப்பிக் கொண்டிருந்தால் மட்டும் காணுமே? எங்கட பிள்ளையளும் நாளைக்கு வாழ வேணும். எங்கட எங்கட வீடுகளுக்குப் போனால்த்தான் எதையாச்சும் செய்யலாம். நான் நினைக்கேல்ல ஆமிக்காரங்கள் எங்கட காணியளவிட்டு, மிதிவெடியள் கண்ணி வெடியள் எல்லாம் எடுத்து, நாங்கள் அங்க போறத்துக்கு ஏதேனும் உதவியைக் கிதவியைச் செய்து..... எல்லாம் சரிவரும் எண்டு." என்றார் பார்வதி என்றகுடும்பப் பெண்.

இவை ஒரு புறம் இருக்க தமது சொந்த இடங்களுக்குப் போவதற்கு விருப்பம் தெரிவிக்காத சிலகுடும்பங்களும் இருப்பதாக முகாமின் தலைமை உத்தியோகத்தர் கூறினார். அப்படியான குடும்பங்கள் சிலவற்றுடன் கதைத்தபோது அவர்கள் இப்படிச் சொன்னார்கள்."சண்டை நிரந்தரமா நிண்டிட்டெண்டு நாங்கள் நினைக்கேல்ல. நாங்கள் உத என்னண்டு நம்பிறது. இப்பிடி எத்தினை தரம் ஏமாந்து போனம். எல்லாரும் போகக்கூடிய மாதிரி நிலமை சரிவந்திட்டு என்றாலாவது நாங்களும் நம்பிப் போய்ப் பாக்கலாம்." உண்மையில் அவர்கள் தங்களது உலைப்பானைகளை ஏழாவதோ அல்லது எட்டாவதோ அல்லது இன்னும் அதிகமான இடங்களிலோ ஏற்றியவர்கள். மீண்டும் பூச்சியத்தில் இருந்து அந்தத் துன்பகரமான அனுபவத்தைப் பெற அவர்களால் முடியாது. இந்நிலையில் இந்த மக்களுக்கெல்லாம் சிறுதுளிகூட நம்பிக்கை ஊட்டுவதற்கு ஒரு வருடப் பேச்சுக்களால் முடியாமல் போனது துரதிஸ்ரம்தான்.

எல்லோரும் கதைத்துக் கொண்டிருந்த போது அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த காங்கேசன் என்பவரிடம் "என்னண்ணை கடுமையா யோசிச்சுக் கொண்டிருக்கிறியள்." என்று சொல்ல "நாங்கள் என்னத்தைச் சொல்லுறது தம்பி. எங்களுக்கு எல்லாமே ஒண்டு தான். எங்களுக்கெண்டு உலகத்தில என்ன கிடக்குது." என்றவர் சிறிது அமைதியாகி பின்னர் தொடர்ந்தார். "எண்பத்தொன்பதெண்டு நினைக்கிறன். வருசக்கணக்கெல்லாம் வடிவாத் தெரியாது. வவுனியாவில பொயிலைத் தோட்டத்தில வேலை செய்ய வந்தனான். ஒரு வருசத்திலேயே பிரச்சனைவர யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்து போட்டம். அப்பிடியே மாறி மாறி ஓடித்திரிஞ்சு கடைசியா தொண்ணூற்றியாறில கிளிநொச்சியில இருந்து நேர இஞ்ச வந்திட்டம். வெறும் கையோடதான் இப்பவும் நிக்கிறம். சைக்கிள் கடையில உழைக்கிற காசு இந்தச் சின்னப் பிள்ளையளுக்குச் சட்டைதச்சுப் போடக்கூடக் காணாது." அவர் சொல்லி முடித்த போது அருகில் இருந்த அவரது மனைவி "எங்களுக்கு எங்கையாவது பிரச்சனை இல்லாத நல்ல இடத்தில ஒரு சின்னக் கொட்டில் இருந்தால் காணும். வயல் வேலை செய்தே சீவிச்சுப் போடுவம்." அந்தப் வறிய இளம்தாயின் இடையிலும் கைகளிலுமாக இருந்த நான்கு சின்னஞ் சிறுசுகள் வறண்டுபோன தலைகளுடனும், நலிந்த உடலுடனும் அம்மாவையும் அப்பாவையும் என்னையுமே வெறித்துப் பார்த்தபடியிருந்தார்கள்.

இப்படி அவர்கள் எத்தனையோ கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களின் கதைகள் அவை. சமாதானத்தின் எந்தவொரு பலாபலன்களும் அவர்களுக்கு எட்டவில்லை. இவர்களைப் போலவே இரவல்காணிகளிலும், தெருவோரங்களிலும் இன்னும் பல்லாயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. எல்லோருமே போர் தமக்கு மேல் ஏற்றி வைத்த சுமைகளை சமாதானம் விரைவிலேயே இறக்கி வைக்க வேண்டுமென அவாவி நிற்கிறார்கள். மொத்தத்தில் புரிந்துணர்வு காலம் ஒரு வருடத்தை எட்டி விட்ட நிலையில் அவர்கள் எல்லோரும் கேட்பது என்னவெனில் சமாதானம் ஆகக்குறைந்த பட்சம் பறிக்கப்பட்ட தமது வீடுகளையாவது முதலில் திருப்பித்தரவேண்டும் என்பதையே. ◆

# "சமாதானம் முதலில் எமது வீடுகளையாவது திருப்பித்தரவேண்டும்"

எமது மக்களிற்கு இடப்பெயர்வுகளால் ஏற்பட்ட வாழ்வியல் அனுபவங்கள் மிகவும் துன்பகரமானவை. தமிழர்களின் எல்லா வீடுகளுமே இடப் பெயர்வுகளால் அவலம் அடைந்தவை என்று சொல்லுமளவிற்கு எல்லோரையுமே அது பதம் பார்த்தது. பல குடும்பங்களை அது சின்னா பின்னமாக்கியது. ஒன்று மாறி ஒன்று என எத்தனையோ கொட்டில்களிலும் மரநிழல்களின் கீழும் எம் மக்கள் வாழ்ந்து விட்டார்கள். இப்போது, இந்தப் புரிந்துணர்வு காலத்தில் தமது சொந்த வீடுகளுக்குப்போக அவர்கள் துடிக்கிறார்கள்.

அண்மையில் வவுனியாவில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களுக்குச் சென்றிருந்தேன். முன்னரும் ஒரு தடவை அங்கிருக்கும் எல்லா மக்களுடனும் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்ததால் அவர்களுடன் ஏற்கனவே அறிமுகம் இருந்தது. இழப்பதற்கென்று தமது உயிர்களைத்தவிர வேறொன்றும் இல்லாத பல்லாயிரம் குடும்பங்கள் இப்போதும் அங்கேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. உருக்குலைந்து கொண்டிருக்கும் அந்த விடுதிகளுக்குள் காலெடுத்து வைத்தபோது, ஆறு மாதங்களுக்கு முன்னர் அவர்களுக்கு நான் கூறிய வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருந்தது எனக்கு ஒருகுற்ற உணர்வைத்தந்தது.

" நீங்கள் இந்தப் போரின் கொடுமைகளை அதிகமாக அனுபவித்திருக்கிறீர்கள். ஆனால் இப்போது சமாதானச் சூழல் உருவாகி வருகிறது. நீங்கள் உங்கள் சொந்த ஊர்களுக்குச் சென்று தனித்துவமாகவும், கௌரவமாகவும் வாழ்ந்த வாழ்வை மீட்டெடுக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். இந்தப் பேச்சுக்கள் மூலம் அதற்குரிய வழிவகைகளை நாங்கள் உருவாக்கித் தருவோம். கடந்த கால அனுபவங்கள் உங்களுக்குக்குழப்பத்தை ஏற்படுத்தலாம். ஆனால் அவற்றுடன் இன்றைய சமாதான சூழலை ஒப்பிட்டு நீங்கள் குழப்பமடையத் தேவையில்லை." என்று நான் உரையாடிய மக்களின் வாழ்வில் ஆறு மாதங்களின் பின்பும் எதுவித மாறுதல்களும் ஏற்பட்டிருக்காத சூழலில் செல்வது எனக்கு பெரும் சங்கடமாக இருந்தது.

காங்கேசன்துறையைச் சேர்ந்த செல்லம்மாபாட்டியின் விடுதிக்கு நேராகச் சென்றேன். அவரை உயிரோடு கண்டது எனக்குப் பெரும் நிம்மதியைத் தந்தது. சென்றதடவை சென்றபோது "இனி எனக்கு ஒண்டும் தேவையில்லை. பூட்டப் பிள்ளையளைக்கூடக் கண்டிட்டன். அதுகளுக்கெண்டு என்ர காணியில நாலுதென்னம் பிள்ளையாவது நட்டுவைக்காமல் எப்பிடி நிம்மதியாச் சாகிறது." என்று எனக்கு சொல்லியிருந்தார். இப்போது அவரால் என்னை இனம் காணமுடியவில்லை. ஞாபகமூட்டியபோது "போன மாரிக்கு இந்த சீவன்போகாமல் தப்பினது அதிசயம் தம்பி ஏதோ ஆண்டவன் வழிவிட்டுட்டான். கொட்டிலையொருக்கா அண்ணாந்து பார்தம்பி." அவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டிருந்த அடிப்படை வசதிகள் எல்லாமே ஆட்டம் கண்டுவிட்டிருந்தன. அவற்றால் இனியும் தாக்குப் பிடிக்க முடியும் போல் தெரியவில்லை. என்னைக் கண்டதும் ஒருவர் ஒருவராக ஆட்கள் கூடத்தொடங்கி விட்டார்கள்.


"சண்டை நடக்கேக்குள்ளயாவது இடக்கம் யாராவது வந்து பாத்துக்கொண்டு போவாங்கள். பிச்சைச் சாமானாயாவது என்னத்தையும் தருவாங்கள். அதுகளை வச்சு ஏதோ சமாளிப்பம். இப்ப சமாதானம் வந்திட்டுதாம். ஒருத்தரும் இஞ்சால வாறதில்லை. நீங்களெல்லாம் ஆருக்குத் தம்பி சமாதானம் பேசுறியள்." என்று கேட்ட ஐம்பது வயது ஐயா ஒருவர் "நாங்கள் ஏதாவது கேட்கப் போனால் 'ஏன் நீங்கள் உங்கட உங்கட இடத்துக்குப் போகலாம் தானே.' எண்டமாதிரிக் கதைக்கினம். எங்கட ஊருகளுக்கு நாங்கள் இப்பவும் போகஏலாமல் இருக்குது எண்டதும் இஞ்சயிருக்கிற அரவாசிச் சனத்துக்கு ஒருதுண்டு நிலம் கூட எங்கையுமே இல்லை எண்டதும் ஆருக்குத் தம்பி தெரியும்." என்று மீண்டும் கூறி நின்றார். சமாதானம் பெருந்தெருக்களை மிக விரைவிலேயே திறந்து விட்டதால் சிறு தெருக்கள் இன்னமும் தடைசெய்யப்பட்டிருப்பதை பலருக்குத் தெரியாமல் போனது துரதிஸ்ரம் தான். இன்னமும் அவர்கள் கதைத்துக் கொண்டேயிருந்தார்கள்.

கலாச்சாரரீதியான பிரச்சனைகளும் அங்கு பூதாகரமானவையாக இருந்தன. அவை யுத்தத்தைவிடக் கொடியதாகக் குடும்பங்களைச் சீரழித்துக் கொண்டிருந்தன. தமது எதிர்காலத் தலைமுறையினர்குறித்து பெரியவர்கள் அதிகம் கவலை கொண்டிருக்கிறார்கள். "நாங்கள் தான் எப்பிடியோ எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு வாழ்ந்திட்டம். இந்தச் சின்னனுகள் இந்தவயதிலேயே எவ்வளவு துன்பப் பட்டுட்டுதுகள் அதுகளுக்கு இனியாவது நல்லதொரு எதிர்காலத்தைத் தேடிக்கொடுக்க வேணும். இஞ்சயிருக்கிற ஒவ்வொரு நாளும் அதுகளின்ர வாழ்க்கையை நாசமறுக்குது. இஞ்சயிருந்து கொண்டு நாங்கள் எங்கட பிள்ளையளை ஒழுங்கா வளர்த்தெடுக்க வேணுமெண்டு எவ்வளவு பாடுபட்டாலும் அது முடியாது." என்று சொன்ன அம்மாவின் பிள்ளை அருகிலிருந்து சொன்னாள். "நாங்கள் முகாமில் இருக்கிறதால பள்ளிக்கூடத்தில எங்கள எல்லாப்பிள்ளையளும் வித்தியாசமாத்தான் பாக்கினம்." அவள் வவுனியாவில் உள்ள பிரபலமான பாடசாலையொன்றில் சாதாரணதரம் படிக்கிறாள். இந்த நிலை வவுனியாவில் உள்ள எல்லா நலன்புரி நிலையங்களிலுமே நிலவுகிறது. இளவயதுத் திருமணங்கள், மோசமான குடிவகைகளுக்கு வயது வேறுபாடின்றி அடிமையாதல், பாலியல் பிரச்சினைகளால் எற்படும்

**– அதிபன் –**

குடும்பச்சிக்கல்கள் என இன்னும் பல மோசமான சீரழிவுகளுக்குள் அவர்கள் புதையுண்டு போயிருக்கிறார்கள்.

பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் முகாம் அலுவலராகக் கடமையாற்றும் இராசநாயகம் ஐயா பின்வருமாறு சொன்னார். "மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணிப்பெண்களாகச் செல்வதால் ஏற்படும் குடும்பப் பிரச்சினைகள் இங்கு மிகவும் கொடுமையாக இருக்கிறது. இளம் வயதிலேயே திருமணம் செய்து விடுகிறார்கள். நான்கு ஐந்து பிள்ளைகள் பிறந்ததும் வறுமை தலைவிரித்தாடும். மனைவியை உழைப்பதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு கணவன் வேறுஎங்கேனும் போய்விடுவான். பிள்ளைகள் நடுத்தெருவில்த்தான். ஐந்தாவது வருசத்துக்குப் பிறகு மனைவி வெறுங்கையுடன் வரும்போது பிள்ளைகள் அங்கொன்று இங்கொன்றாகச் சிதறிக்கிடப்பார்கள். இப்படியான கட்டங்களில் தற்கொலைகள் கூட நடந்திருக்கின்றன. முகாம் என்பதாலும் குடும்பங்கள் செறிவாக வாழ்வதாலும் இது ஒரு தொற்று நோய் போல எல்லா வீடுகளுக்கும் பரவப் பார்க்கிறது." அமைதியாக எல்லோரும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு பத்திரிகையாளனாகவோ அல்லது தமக்கு உதவக்கூடிய ஒரு முக்கியஸ்தராகவோ என்னை நினைத்து அவர்கள் எவரும் உரையாடவில்லை. பல தரப்பினரையும் அவர்கள் குற்றம் சாட்டினார்கள். சமாதான காலத்தில் இயல்பாகவே எழும் விருப்புகளுக்கு ஆட்பட்டு அவற்றை அடைய முடியாத இயலாமையால் அவர்கள் மனம் உடைந்து போயிருந்தார்கள். பேச்சு மேசைகளில் என்ன நடக்கிறது என்பதை அவர்களில் எவரும் பெரிதாக அறிந்திருக்கவில்லை. ஆயினும் தமது வீடுகளுக்குத் தம்மால் இன்னமும் போக முடியாது என்பதை மட்டுமே அவர்கள் அறிந்திருக்கிறார்கள். போர் நடைபெற்ற காலங்களிலும் பார்க்க தற்போதைய சமாதான காலத்தில் அவர்கள் பல மடங்கு மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.



"சண்டை நடக்கிற காலங்களில ஊருக்கு போறது பற்றி வருசக்கணக்கிலதான் இலக்கு வைப்பம். ஒவ்வொரு வருசமும் அடுத்த பொங்கலுக்கு வீட்டுக்குப் போயிடலாம் எண்டுதான் எல்லாரும் கதைப்பினம். ஆனால் சண்டை நிண்ட உடன இண்டைக்குப் போகலாம் நாளைக்குப் போகலாம் எண்டு நினைச்சு நினைச்சு ஒவ்வொரு நாளும் ஏமாந்து போகிறம்." என்று அவர்களில் பலரும் சொன்னார்கள். "உண்மையில எங்களுக்கு ஒவ்வொரு நேரச் சாப்பாட்டுக்கே எவ்வளவு கஸ்ரமாயிருக்கு. தாற நிவாரணம் எங்களுக்குக் காணும் எண்டு சொல்லேலாது. இப்பிடியே வருசக் கணக்கில வயிறு நிரப்பிக் கொண்டிருந்தால் மட்டும் காணுமே? எங்கட பிள்ளையளும் நாளைக்கு வாழ வேணும். எங்கட எங்கட வீடுகளுக்குப் போனால்த்தான் எதையாச்சும் செய்யலாம். நான் நினைக்கேல்ல ஆமிக்காரங்கள் எங்கட காணியளவிட்டு, மிதிவெடியள் கண்ணி வெடியள் எல்லாம் எடுத்து, நாங்கள் அங்க போறத்துக்கு ஏதேனும் உதவியைக் கிதவியைச் செய்து..... எல்லாம் சரிவரும் எண்டு." என்றார் பார்வதி என்றகுடும்பப் பெண்.

இவை ஒரு புறம் இருக்க தமது சொந்த இடங்களுக்குப் போவதற்கு விருப்பம் தெரிவிக்காத சிலகுடும்பங்களும் இருப்பதாக முகாமின் தலைமை உத்தியோகத்தர் கூறினார். அப்படியான குடும்பங்கள் சிலவற்றுடன் கதைத்தபோது அவர்கள் இப்படிச் சொன்னார்கள். "சண்டை நிரந்தரமா நிண்டிட்டெண்டு நாங்கள் நினைக்கேல்ல. நாங்கள் உத என்னண்டு நம்பிறது. இப்பிடி எத்தினை தரம் ஏமாந்து போனம். எல்லாரும் போகக்கூடிய மாதிரி நிலமை சரிவந்திட்டு என்றாலாவது நாங்களும் நம்பிப் போய்ப் பாக்கலாம்." உண்மையில் அவர்கள் தங்களது உலைப்பானைகளை ஏழாவதோ அல்லது எட்டாவதோ அல்லது இன்னும் அதிகமான இடங்களிலோ ஏற்றியவர்கள். மீண்டும் பூச்சியத்தில் இருந்து அந்தத் துன்பகரமான அனுபவத்தைப் பெற அவர்களால் முடியாது. இந்நிலையில் இந்த மக்களுக்கெல்லாம் சிறுதுளிகூட நம்பிக்கை ஊட்டுவதற்கு ஒரு வருடப் பேச்சுக்களால் முடியாமல் போனது துரதிஸ்ரம்தான்.

எல்லோரும் கதைத்துக் கொண்டிருந்த போது அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த காங்கேசன் என்பவரிடம் "என்னண்ணை கடுமையா யோசிச்சுக் கொண்டிருக்கிறியள்." என்று சொல்ல "நாங்கள் என்னத்தைச் சொல்லுறது தம்பி. எங்களுக்கு எல்லாமே ஒண்டு தான். எங்களுக்கெண்டு உலகத்தில என்ன கிடக்குது." என்றவர் சிறிது அமைதியாகி பின்னர் தொடர்ந்தார். "எண்பத்தொன்பதெண்டு நினைக்கிறன். வருசக்கணக்கெல்லாம் வடிவாத் தெரியாது. வவுனியாவில பொயிலைத் தோட்டத்தில வேலை செய்ய வந்தனான். ஒரு வருசத்திலேயே பிரச்சனைவர யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்து போட்டம். அப்பிடியே மாறி மாறி ஓடித்திரிஞ்சு கடைசியா தொண்ணூற்றியாறில கிளிநொச்சியில இருந்து நேர இஞ்ச வந்திட்டம். வெறும் கையோடதான் இப்பவும் நிக்கிறம். சைக்கிள் கடையில உழைக்கிற காசு இந்தச் சின்னப் பிள்ளையளுக்குச் சட்டைதச்சுப் போடக்கூடக் காணாது." அவர் சொல்லி முடித்த போது அருகில் இருந்த அவரது மனைவி "எங்களுக்கு எங்கையாவது பிரச்சனை இல்லாத நல்ல இடத்தில ஒரு சின்னக் கொட்டில் இருந்தால் காணும். வயல் வேலை செய்தே சீவிச்சுப் போடுவம்." அந்தப் வறிய இளம்தாயின் இடையிலும் கைகளிலுமாக இருந்த நான்கு சின்னஞ் சிறுசுகள் வறண்டுபோன தலைகளுடனும், நலிந்த உடலுடனும் அம்மாவையும் அப்பாவையும் என்னையுமே வெறித்துப் பார்த்தபடியிருந்தார்கள்.

இப்படி அவர்கள் எத்தனையோ கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களின் கதைகள் அவை. சமாதானத்தின் எந்தவொரு பலாபலன்களும் அவர்களுக்கு எட்டவில்லை. இவர்களைப் போலவே இரவல்காணிகளிலும், தெருவோரங்களிலும் இன்னும் பல்லாயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. எல்லோருமே போர் தமக்கு மேல் ஏற்றி வைத்த சுமைகளை சமாதானம் விரைவிலேயே இறக்கி வைக்க வேண்டுமென அவாவி நிற்கிறார்கள். மொத்தத்தில் புரிந்துணர்வு காலம் ஒரு வருடத்தை எட்டி விட்ட நிலையில் அவர்கள் எல்லோரும் கேட்பது என்னவெனில் சமாதானம் ஆகக்குறைந்த பட்சம் பறிக்கப்பட்ட தமது வீடுகளையாவது முதலில் திருப்பித்தரவேண்டும் என்பதையே. ◆

# நோயில் வடகிழக்கும் வாழ்வில் தேற்கும்.

ஒருவகை வைப்பகமாகச் செயற்பட உலக வங்கி ஒத்துக்கொண்டுள்ளது. வடகிழக்கு மீள் கட்டமைப்பிற்கு உதவும் நாடுகள் கொடுக்கும் நிதியைப் பொறுப்பேற்று தேவைப்படும்போது வழங்கும் பணியை அது மேற்கொள்ளவிருக்கிறது. அரை நூற்றாண்டிற்கு மேற்பட்ட வரலாற்றில் உலக வங்கி இதுபோன்ற பணியைச் செய்ததில்லை. உலக ஒழுங்கில் நடக்கும் மாற்றத்தின் எதிரொலியாக இவ்வளர்ச்சி தோன்றியுள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, ஜப்பான் அடங்கலான ஜீ-10 என்று வகைப்படுத்தப்படும் செல்வந்த நாடுகள் தமது நிதிச் சேமிப்பில் கணிசமான பங்கை உலக வங்கியில் வைக்கின்றனர். சவுதி அரேபியாவும் எண்ணெய் வர்த்தகத்தில் கிடைத்த பணத்தின் பெரும்பகுதியை உலக வங்கியில் இட்டுள்ளது. உலகின் நிதிக் காவலனாகச் செயற்படும் உலக வங்கியும் அதன் இரட்டை அமைப்பான நாணய நிதியமும் நிதிக் கொடுக்கல் வாங்கல், மேம்பாட்டுத் திட்டமிடல், ஆலோசனை வழங்கல் போன்ற முக்கிய கருமங்களைச் செய்கின்றன.

இப்படியான பணிகளைச் செய்வதற்கான உட்கட்டமைப்பை மேற்கூறிய இரு வங்கிகளும் தம்பால் கொண்டுள்ளன. இரு வங்கிகளில் அங்கத்துவம் வகிக்கும் செல்வந்த நாடுகள் தனிப்பட்ட முறையில் தாம் விரும்பிய சில நாடுகளுக்கு கடனுதவிகளையும், நன்கொடைகளையும் வழங்குகின்றன. உதாரணத்திற்கு யப்பானுக்கு கடன் மற்றும் நன்கொடை வழங்கும் கொள்கை அது பொருளாதார பலம்பெற்ற நாட்தொட்டு இருக்கின்றது.

ஜப்பான் உதவத் தொடங்கியதால் சிறிலங்கா பல நன்மைகளைப் பெறுகின்றது. வெளிநாட்டு உதவிகளில் காலத்தை ஓட்டும் சிறிலங்காவுக்கு ஜப்பான் ஒரு கற்பகதருவாக விளங்குகின்றது. சிறிலங்காவுக்கு மிகக் கூடுதலான உதவிகளை வழங்கும் நாடு என்ற சிறப்பு ஜப்பானுக்கு உண்டு. ஜப்பானின் வழங்கல்கள் அதனுடைய வர்த்தக மேம்பாட்டைக் குறியாகக் கொண்டுள்ளன. சோழியன் குடும்பி சும்மா ஆடாது என்பார்கள். அதுபோல் 'போட்டதை எடுப்பதில்' ஜப்பான் அக்கறை காட்டுகின்றது.

சிறிலங்காவுக்கு ஜப்பான் வழங்கும் உதவிகள் மூவகைப்படுகின்றன:

01) அடிப்படை மனித உயிர் வாழ்வுத் தேவைகளுக்காக ஜப்பான் வெளிவிவகார அமைச்சகத்தின் ஊடாக வழங்கப்படும் உதவி மானியங்கள் (GRANT AID) நன்கொடைகள் இராசதந்திர மொழியில் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. இவை பணம், பாரிய கட்டடங்கள், மருத்துவ மனைகள், நெடுஞ்சாலைகள், பாலங்கள், உபகரணங்கள், வாகனங்கள் என்பனவாக அமைகின்றன.

ஜெயவர்த்தனபுரா மருத்துவமனை, புதிய பாராளுமன்றக் கட்டடம் போன்றவை ஜப்பான் உதவியுடன் நிறுவப்பட்டன.

02) வளர்ந்துவரும் நாடுகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக ஜப்பானின் பொருளாதார ஒத்துழைப்பு வங்கி (JAPAN BANK FOR ECONOMIC COOPERATION) வழங்கும் யென் நாணயக் கடனுதவி.

03) மனித வளத்தைப் பெருக்குவதற்கான தொழில்நுட்ப உதவிகள்.


ஜப்பான் வெளிவிவகார அமைச்சகத்தின் உள்ளக ஒழுங்கமைப்பில் பொருண்மிய விவகாரங்களுக்கான பொறுப்பமைப்பு, பொருண்மிய ஒத்துழைப்பிற்கான பொறுப்பமைப்பு, ஆசிய விவகாரங்களுக்கான பொறுப்பமைப்பு

**கலாநிதி க.சோமாஸ்கந்தன்**

என்ற மூன்று முக்கிய திணைக்களங்கள் செயற்படுகின்றன. இவை ஜப்பானின் தனியார் துறையினருடன் இணைந்து செயற்படுகின்றன. தனியார் வர்த்தகத் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான யாவற்றையும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சகம் செய்கின்றது. வர்த்தக வளர்ச்சிக்கான முதலீடாக ஜப்பான் வழங்கும் உதவிகள் அமைகின்றன.

ஒருகுறிப்பிட்ட நாட்டின் மீது ஜப்பானிய அரசு அதிருப்தி அடைந்தால் அந்த நாட்டுக்குள் ஜப்பானியத் தனியார் துறையினர் பிரவேசிக்கமாட்டார்கள். முன்கூட்டியே சென்றிருந்தால் சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறிவிடுவார்கள். ஜப்பானிய மரபு வித்தியாசமானது. அவர்கள் கண்டனக் குரல் எழுப்புவதில்லை, கண்டன அறிக்கைகள் வெளியிடுவதில்லை. செயல் மூலம் பதிலடி கொடுப்பதுதான் அவர்கள் வழக்கம்.

ஜப்பானியர்கள் கடின உழைப்பாளிகள். கடின உழைப்பின் காரணமாக உயிரிழப்பதைக் குறிக்கும் ஜப்பானிய மொழிச் சொல் 'கரோஜ்சற்சு' (KAROJ SATSU) என்பதாகும். இதுபோன்ற சொல்லைப் பிறமொழிகளில் காண்பது அரிது. அண்மைக்காலமாக சிறிலங்காவில் நிலைகொண்டுள்ள ஜப்பானிய தனியார் துறையினரும் முதலீட்டாளர்களும் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளனர். சிறிலங்காவில் பொருளாதார வளர்ச்சி குன்றிவிட்டது என்று துறைப்படுகின்றனர். இதற்குப் போர்தான் காரணமென்று



அவர்கள் தீர்மானித்துள்ளனர். அமைதியில் ஜப்பான் காட்டும் அக்கறைக்கு விளக்கம் இதுதான்.

கொடுத்துக் கை சிவந்த ஜப்பானில் இன்று குறைந்தளவு தாக்கமுடைய பொருளாதார வீழ்ச்சி (RECESSION) காணப்படுகின்றது. பிரதமர் ஜூனிச்சீரோ கொயிசுமி அரசு இதுவரை காலமும் ஜப்பான் கடைப்பிடித்த பொருளாதார நடைமுறைகளை மீள் பரிசீலனை செய்யவேண்டிய நிலைக்கு வந்துள்ளது. 'கையோ' பல்கலைக்கழகத்தில் பத்து வருடங்களுக்கு முன் பொருளாதாரப் பேராசிரியராகப் பதவி வகித்த ஹைசோ தக்கேநாகா இப்போது கொயிசுமியின் பொருளாதார மற்றும் பொருளாதார கொள்கைகளுக்கான அமைச்சராகப் பதவி வகிக்கிறார். இதுவரை காலமும் ஜப்பான் பின்பற்றிய நடைமுறைகளில் மாற்றங்களைக் கொண்டு வருவதில் இவர் முனைப்பாக ஈடுபடுகிறார். வடகிழக்கில் ஜப்பான் காட்டும் ஆர்வத்திற்கு இதுவும் காரணமாக அமைகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் இறுதிக் காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான குழு பாரிசில் நடைபெற்ற கடன் வழங்கும் நாடுகள் குழு அமர்விற்குச் சென்றது நினைவுக்கு வரலாம். பாரிஸ் கிளப் எனப்படும் கடன் வழங்கும் உலக வங்கி உபகுழு பிரான்சின் தலைநகரிலுள்ள திறைசேரிக் கட்டடத்தில் நடைபெறுகின்றது. முன்பு சிறிலங்காவுக்கு அது உதவி வழங்கும் நோக்கில் அமரும் போது பாரிஸ் உதவிக்குழு என்று அழைக்கப்பட்டது. பின்பு அது சிறிலங்கா மேம்பாட்டுப் போரம் (SRI LANKA DEVELOPMENT FORUM) என்று அழைக்கப்படுகின்றது.

ஜப்பானைச் சேர்ந்த மீக்கோ நிஷிமிசு உலக வங்கி உபகுழு அமர்விற்குத் தலைமை தாங்கினார். உலக வங்கியின் தெற்கு ஆசியப் பிரிவின் உப-தலைவராக திருவாட்டி நிஷிமிசு பணியாற்றுகிறார்.

தனது நாட்டின் அதிருப்தியையும் உலக வங்கியின் கண்டனத்தையும் மிகவும் நேர்த்தியான இராசதந்திர மொழியில் அவர் வெளிப்படுத்தினார். சந்திரிகாவின் முகத்தில் அறைந்தாற்போல் உதவி வழங்குவோர் சிறிலங்காவிடம் எதிர்பார்ப்பதை பின்வருமாறு பட்டியலிட்டார்.

அரசின் செயற்பாடுகளில் நம்பகத்தன்மையையும் ஒழிவு மறைவின்மையையும் எதிர்பார்க்கின்றோம் என்றார் அவர். தேர்தல்களில் வெளிப்படை, மனித உரிமைகளுக்கு மதிப்பு, பொருளாதார மறுசீரமைப்பு என்பவற்றையும் காண்பதற்கு ஆவலாக உள்ளோம். எல்லாவற்றிற்கும் மேலாக அரச பயங்கரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி கேட்கின்றோம். உலகவங்கி முன்னெடுக்கும் இராசதந்திரத்தில் இப்படியானதொரு நேரடித் தாக்குதலை தாம் முன்னர் காணவில்லை என்று விமர்சகர்கள் கருதுகின்றனர்.

மீக்கோ நிஷிமிசு அவர்களுக்கு சிறிலங்கா விவகாரம் பற்றி நன்கு தெரியும். தாய்லாந்தில் எடுத்த உதவி நிதி பற்றிய புலிகளின் நிலைப்பாடு தொடர்பான பின்னணியை அவர் நன்கு அறிவார். திறந்து பேசுவதானால் உதவிநிதி அரசின் பொறுப்பில் செல்வதை புலிகள் விரும்பவில்லை. அது ஆனையின் வாய்க்குள் சென்ற கரும்புபோல் கரைந்துவிடும், வடகிழக்கின் தேவைகளுக்கு அது பயன்படமாட்டாது என்பதை உலக வங்கி அறியும். இதன் பயனாய் உள்வரும் பணத்தைப் பொறுப்பேற்பதற்கு நிஷிமிசு அம்மையார் உலகவங்கி சார்பில் மிகவும் மனமுவந்து ஒத்துக்கொண்டார்.

சிறிலங்கா சுதந்திரம் பெற்று இன்று வரையிலான காலப்பகுதியில் சிறிலங்கா பெற்றுக்கொண்ட கடனுதவிகள், நன்கொடைகள் என்பனவற்றில் ஒரு சிறிதளவையேனும் வடகிழக்கு மக்களுக்குச் செலவு செய்தது கிடையாது. ஆள்புல ஒருமைப்பாடு, இறையாண்மை, சட்டவழிக் கோட்பாடு என்றெல்லாம் பேசும் சிங்களத் தலைமைகள் தமிழர் பகுதிக்கு நியாயபூர்வமாகக் கிடைக்க வேண்டியதைக்கூட தடை செய்து வந்துள்ளனர். சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீகுவான்யூ சொல்வதைப் போல் ஒரு நாட்டை எப்படி ஆளக்கூடாது என்பதற்கு உதாரணமாக சிறிலங்கா விளங்குகின்றது.

சிறிலங்காத் தரைப் பரப்பு பற்றிய முழுமையான கருத்தியல் நோக்கும் அர்ப்பணிப்பும் (IDEOLOGICAL COMMITMENT TO THE LAND AS A WHOLE) இங்கு அறவே கிடையாது. பிரித்துப் பார்ப்பதும், ஒரு பகுதியை மாத்திரம் மேம்படுத்துவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளாக நிலவுகின்றன. 1948 தொடக்கம் பதவிக்கு வந்த சிங்கள அரசுகள் யாவும் மாபெரும் பொருளாதார மேம்பாட்டுப் பணிகளை சிங்கள நாட்டில் மேற்கொண்டன. வெளிநாட்டு உதவிகள் பெருமளவில் திரட்டப்பட்டன, யாவும் முழுமையாக சிங்கள மக்களுக்குப் பயன்பட்டன. தமிழர் பிரதேசம் முற்றாகப் →

புறக்கணிக்கப்பட்டது.

1948இன் பின் இராணுவ மற்றும் பொலிஸ் உதவியுடன் தமிழர்கள் தாயகத்தில் சிங்களக் குடியேற்றம் மூர்க்கத்தனமாக நடத்தப்பட்டது. தமிழர்களுக்குச் சொந்தமான 3000 சதுர மைல் பிரதேசம் சிங்கள வாழ்விடங்களாக மாற்றப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தின் மூன்றில் ஒரு பங்கு சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாறை மாவட்டமாக மாற்றப்பட்டது. திருகோணமலை மாவட்டமும் அதேகதி அடைந்தது. திருகோணமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டதும் தமிழர்கள் தமது வேலை வாய்ப்பை இழந்தனர், சிங்களவர்கள் வேலை வாய்ப்புக்களைப் பெற்றனர்.

1966 தொடக்கம் அரசில் பங்கெடுக்கும் சந்தர்ப்பங்களைத் தமிழர் இழந்தனர். சில கூலித் தமிழர்கள் பதவிகளில் இருத்தப்பட்டனர். தமிழர்கள் ஒரு ஆளப்படும் இனமாக மாற்றப்பட்டனர். இதுபற்றியெல்லாம் உதவி வழங்கும் நாடுகள் கவலைப்பட்டது கிடையாது. வெப்பவலய மேம்பாட்டுத் திட்டங்களுக்கென சிறிலங்கா உதவிநிதி கேட்டபோது, அந்த நிதி எவ்வாறு பயன்படுத்தப் போகின்றது என்று மேற்கு நாடுகளும், ஜப்பானும் ஒரு போதும் சிறிலங்கா அரசை வினவியதில்லை. 'வெப்பவலய மேம்பாட்டுத் திட்டம்' என்றால் கொழும்பு அரசபீடத்தின் அகராதியில் தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றம் என்று தான் அர்த்தம்.

சிறிலங்காவின் மிகப் பெரிய மேம்பாட்டுத் திட்டமான மகாவலி நதி வலயத் திட்டத்திற்கான நிதி உதவிகளை பிரித்தானியா அரசு பிரதமர் மாகரேற் தச்சர் காலத்தில் வழங்கியது. மகாவலித் திட்டத்தின் கீழ் தமிழர்கள் ஒருவித பயனும் அடையக் கூடாது என்பதில் பதினேழு வருடம் ஆட்சி செய்த UNP அரசு மிகவும் கவனமாக இருந்தது. சிங்களவர்களுக்குச் சொந்தமான மகாவலி நீர் தமிழர் மண்ணில் படக்கூடாது, அப்படி நடக்குமாயின் அங்கு தமிழர் வாழ அனுமதிக்கக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் மகாவலித் திட்டம் வகுக்கப்பட்டது.

மகாவலியின் ''ஏச்'' வலய விரிவாக்கம் தமிழர்கள் வாழும் மணலாறு நோக்கியதாக அமைந்தது. இதற்காகத் தமிழர்களை குடியெழுப்ப வேண்டிய கட்டாயம் தோன்றியது. 42 தமிழ்க் கிராமங்களில் வாழ்ந்த 13,208 தமிழ்க் குடும்பங்கள் அரச வர்த்தமானிப் பிரகடனத்தின் மூலம் ஒருசில நாட்களில் வெளியேற்றப்பட்டனர். புதிதாக வெலிஓயா என்ற சிங்கள மாவட்டம் உருவாக்கப்பட்டது. முல்லைத்தீவு, திருகோணமலை, அனுராதபுரம், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகள் வெலிஓயா மாவட்டமாக உருப்பெற்றன. மேற்கூறிய 42 கிராமங்களைவிட இன்னும் 18 தமிழ்க் கிராமங்களை வெலிஓயாவுடன் இணைப்பதற்குத் திட்டமிடப்பட்டது.

தமிழர்களை வெளியேற்றுவதற்கும் அவர்கள் பாரம்பரிய வாழ்விடங்களில் சிங்களவர்களைக் குடியேற்றுவதற்கும்,குடியேற்றப்பட்டபின்பு அவர்களைப் பாதுகாப்பதற்கும் சிங்கள அரசு இராணுவத்தைப் பயன்படுத்தியது. மகாவலியை கனகராயன் குளத்துடன் இணைக்கும் திட்டமும் அப்போதைய அரசின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலியிடம் இருந்தது. இதன் ஆரம்ப கட்டமாக பாவற்குளம் வாழ் தமிழர்கள் வெளியேற்றப்பட்டனர். கொக்கிளாய், நாயாறு, கென்ற் மற்றும் டொலர் பண்ணைகளில் குடியேற்றப்பட்ட சிங்களச் சிறைக் கைதிகளும் இளைப்பாறிய இராணுவத்தினரும் தூரத்தில் வாழ்ந்த தமிழர்களுக்குத் தொடர்ந்து தொல்லைகொடுத்து வந்தனர்.

மேற்கூறிய அனர்த்தங்களுக்கு வெளிநாட்டு உதவிகள் தான் அடிப்படைக் காரணம் என்றால் மிகையாகாது. எமது சுயதேவைகளை நாமே பூர்த்தி செய்வதற்கும் அவர்கள் அனுமதிக்கமாட்டார்கள். தமிழ் அகதிகளுக்காக டாக்டர் ராஜசுந்தரம் ஆரம்பித்த காந்தீயம் இயக்கம் இரும்புக்கரம் கொண்டு நசுக்கப்பட்டது.'கெயா' அமைப்பு சிறுவர்களுக்கு திரிபோஷா உணவு வழங்கியது. 'நொவிப' மற்றும 'ஒக்ஸ்பாம்' தொண்டர் அமைப்புக்கள் இயன்ற உதவிகள் செய்தன.

ஏப்பிரல் 1983இல் சிங்கள இராணுவமும் பொலிசும் இணைந்து காந்திய நிறுவனத்தின் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் தொடுத்தன. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் டாக்டர் ராஜசுந்தரம் சிறையிலடைபட்டார். காந்தியத்தின் தலைவர் அருளானந்தம் டேவிற்பனா கொடை இராணுவ முகாமிற்குக் கொண்டுசென்று சித்திரவதை செய்யப்பட்டார். நவரட்ணராசா என்ற இன்னுமோர் காந்திய இயக்கப் பிரமுகர் இராணுவத்தின் பிடியில் உயிரிழந்தார். பல அகதிகள் சுட்டுக்கொல்லப் பட்டனர். இப்போது சிறிலங்கா இராணுவத்தின் ஆலோசகராகப் பதவி வகிக்கும் ரவி ஜயவர்த்தனா கென்ற் மற்றும் டொலர்பண்ணைகளில் வாழ்ந்த தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தினார்.

மிகவும் சிறிய வெளிநாட்டு உதவிகள் கூடத் தமிழர்கள் பெறக்கூடாது என்பதில் சிறிலங்கா அரசுகள் முனைப்பாக இருந்தன. 1960களில் வடகிழக்கின் ஆட்டு மந்தைகளை இனவிருத்தி செய்வதற்காக நல்லினக் கடாக்களை அப்போதைய மேற்கு ஜேர்மன் அரசு வழங்கியது. அனுராதபுரத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதை வெற்றிகரமாகத் தடுத்து, கடாக்களைத் தம்முடைய தொகுதிகளுக்கு எடுத்துச் சென்றனர். வெளிநாடுகள் வழங்கிய கல்விச் சலுகைகளைத் தமிழ் மாணவர்கள் பெறக்கூடாது என்பதில் சிங்கள ஆட்சியாளர்கள் பிடிவாதமாக இருந்தனர்.

இதே காலப்பகுதியில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையம் அத்திணைக்களத்தில் பணியாற்றிய ஒரு தமிழ்ப் பொறியியலாளரின் பொறுப்பில் கட்டிமுடிக்கப்பட்டது. கட்டடத்தின் மேல்மாடியில் பயணிகள் தங்கிச் செல்வதற்கு கழிப்பறை வசதிகளுடன் அறைகள் கட்டப்பட்டிருந்தன. தமிழர்களுக்கு இப்படியான வசதிகள் தேவைதானா என்ற பலத்த குரல் கொழும்பில் எழுந்தது. தமிழர்கள் தமது பயணம் முடிந்ததும் தத்தம் வீடுகளுக்குச் சென்றுவிடுவார்கள், யாழ்ப்பாணம் வரும் சிங்களவர்கள் தான் மேல்மாடியில் தங்குவார்கள் என்று பொறியியலாளர் வைத்திலிங்கம் விளக்கம் கூறினார். இதன்பின்னே கண்டனக் குரல் தணிந்தது.

யாழ் மாநகர எல்லைக்கு உட்பட்ட தெருக்களை நவீனமயப்படுத்த கனேடிய அரசு உதவ முன்வந்தது. இதற்கான எந்திர சாதனங்களும் மூலப் பொருட்களும் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டன. பணிகளும் ஆரம்பமாயின. ஆனால் கொழும்பு அரசு பிரயோகித்த கடும் அழுத்தம் காரணமாக பணிகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்தன. கனேடிய அரசின் உதவி சிங்களப்பகுதிகளுக்கு மாற்றப்பட்டன. யாழ் முனியப்பர் கோவிலுக்கு முன்னாலுள்ள 100யார் நீளமான தெரு வித்தியாசமாக இருப்பதன் காரணம் தெரியுமா? அது வெளிநாடு அளித்த குற்றுயிர் உதவியின் சின்னமாக இருப்பதால்தான்.

இப்படிப் பல கசப்பான சம்பவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இப்போதைய அமைதி முன்னெடுப்பின் காரணமாக முதலாம் உலக நாடுகளின் அருட்பார்வை வடகிழக்கின்மீது விழுவது என்னவோ உண்மைதான். பிச்சைக்காரனின் தகரத்தில் கிடக்கும் சிறு காசுகளைத் திருடும் அற்பர்களைப்போல் எமக்குக் கிடைக்கும் உதவிகளில் சிங்களவர்கள் பங்கு கேட்கின்றார்கள். தெற்கும் போரினால் பாதிக்கப்பட்டுள்ளது, உதவிகளில் பங்கு கேட்கிறோம் என்று நியாயப்படுத்துகிறார்கள்.

1983ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நினைவுக்கு வருகின்றது. ஜூலை மாதத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவும் நோக்கில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ஒரு தொகுதி உணவுப் பொதிகள் விமானம் மூலம் வந்து சேர்ந்தன. இதைக் கேள்விப்பட்ட சிறில் மத்தியூ என்ற அமைச்சர் தனது வாகனங்களை அனுப்பி உணவுப் பொதிகளைக் கைப்பற்றினார். கலவரங்களில் சிங்களத் தொழிலாளர்களும் வறிய மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய உணவுத் தேவைதான் கூடுதலானது என்று அவர் விளக்கம் கூறினார்.

ஜப்பானிய அரசின் விசேட தூதுவர் யசுசி அகாஷி உடனடி மனிதாபிமான புனர்வாழ்வுத்தேவைகளுக்கான உபகுழு (சிரான்) அமர்வுகளில் முக்கிய பங்காற்றுவதற்கு கிளிநொச்சி வந்து திரும்பியுள்ளார். சிரான் அலுவலக நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக ரூபா 30மில்லியனைத் தருவதாகவும் அவர் வாக்குறுதி அளித்தார். கொழும்பின் பேரினவாதிகள் மத்தியில் இது வெறித்தனமான எதிர்ப்பைக் கிளப்பியுள்ளது. கிளிநொச்சியில் ஜப்பானியத் தேசியக்கொடி பறப்பதுபோன்ற கற்பனையில் மிதக்கும் சம்பிகா றணவக்க என்பவர் ''அது இறக்கப்பட்டு சிங்கக்கொடி அதே கம்பத்தில் பறக்கவிடப் படும்வரை நான் கிளிநொச்சிக்குச் செல்ல மாட்டேன்'' என்று சபதம் செய்துள்ளார்.

அதன்பின் தெற்கு சம்பந்தமான உதவிப்பணிகளுக்கும் ஜப்பான் உதவுமென்று யசுசி அகாஷி உறுதிமொழி அளித்தார். இது ஓரளவு நிம்மதியை அவர்களுக்குக் கொடுத்துள்ளது. தமிழர்களுக்கு எதிர்ப்புக்காட்டும் பேரினவாதப் பத்திரிகையான சன்டே ரைம்ஸ் தனது ஜனவரி 19,2003 இதழில்:- "எல்லோருக்கும் உதவி" (AID FOR ALL) என்ற தலைப்பில் ஆறுதல் தரும் தலையங்கத்தைத் தீட்டியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து இன்றுவரை வடகிழக்கு மக்களுக்கு ஒருவகை உதவியையேனும் செய்யவில்லை என்ற செய்தியையும் அதே தலையங்கம் கூறுகின்றது.

இதற்கிடையில் இந்தியத் தயாரிப்புக்களைக் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்யும் உதவியை சிறிலங்காவுக்கு இந்தியா வழங்கியுள்ளது. முதற்கட்டக் கொள்வனவாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்கள் வாங்கும் துரித நடவடிக்கையை ஐக்கிய தேசிய முன்னணி அரசு எடுத்துள்ளது. அடுத்த கட்டமாக தமிழர் பகுதிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினருக்கு விடுதிகள் அமைக்கும் உதவியை இந்தியாவிடம் அது கோரியுள்ளது.

இந்திய வர்த்தக நிறுவனங்களை வடகிழக்கிற்கு தமது நிபுணர்களுடன் வந்து மேற்கூறிய விடுதிகளை அமைக்கும்படி வேண்டுகைவிடும் அரசு உள்நாட்டுத் தொழிலாளர்களைப் பயன்படுத்தி அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுங்கள் என்றும் கேட்டுள்ளது. இது மிகவும் உற்சாகம் தரும் செய்தி என்பதில் ஐயமில்லை. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போகலாம், அவதானமாக இருப்பது எம் பொறுப்பு.



1948இன் பின் இராணுவ மற்றும் பொலிஸ் உதவியுடன் தமிழர்கள் தாயகத்தில் சிங்களக் குடியேற்றம் மூர்க்கத்தனமாக நடத்தப்பட்டது. தமிழர்களுக்குச் சொந்தமான 3000 சதுர மைல் பிரதேசம் சிங்கள வாழ்விடங்களாக மாற்றப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தின் மூன்றில் ஒரு பங்கு சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாறை மாவட்டமாக மாற்றப்பட்டது. திருகோணமலை மாவட்டமும் அதேகதி அடைந்தது.

# தமது மக்களின் வீடுதேடி போராளிகள் மருத்துவம் புரிகிறார்கள்.

-த.மிகுதன்-




பெருங்குழிகள், இறக்க ஏற்றங்கள், காடுகள், பற்றைகள் என கண்கள் கடக்கும். நீரோடைகள். குறுக்கறுத்துப்பாயும் வீதிகள் இவற்றினூடு பயணஞ் செய்தால் ஆங்காங்கே சிறு குடிசைகள், சிறு வீடுகளைக் காணலாம். மீண்டும் அவ்வாறானதொரு 'சில' மைல்கள் பயணப்பட்டால் குடிசைகள், வீடுகள், மீண்டும்....

இவ்வாறே காட்சிதரும் வன்னியின் கிராமங்களுக்கூடாகப் பயணித்தால் மனதில் முதல் எழும் கேள்வி இங்கே எப்படி வசிக்கிறார்கள் மக்கள்.? ஏனெனில் ஒரு பூச்சிபுழு கடித்தால் இவர்கள் என்ன செய்வார்கள் என்பதே முதல் அச்சம். ஆனால் இக் கிராமங்களில் கடிப்பதற்கு பூச்சி புழுத் தொடக்கம் நரிகள் கரடிகள் வரை இருக்கின்றன என்றால் விழிகள் உயரும். ஆயினும் இங்கே மக்கள் வசிக்கிறார்கள். ஒரு நோய் நொடி தொற்றிக் கொண்டுவிட்டால் நாளை என்று தள்ளிவைத்து விடமுடியாது. மட்டுமில்லாமல் நாளை வரப்போவது இன்று தெரியாது. அப்படியிருக்க இவர்கள் எப்படி இக்கிராமங்களிலே வசிக்கிறார்கள் என்ற கேள்வி மனதினில் குடைந்து கொண்டிருக்க பயணித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது கண்ணில் படுகிறது ஒரு பெயர்பலகை. சுற்றி அளம்பில்களால் அடைக்கப்பட்டவேலி. ஒரு சிறிய வீடு. இவ்வளவுடனும் அப்பெயர்ப்பலகையில் தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவு எனக்குறிப்பிடப்பட்டிருந்தது. இப்பொழுது புரிந்து கொண்டது உண்மை. அவ்வழியாக வந்து கொண்டிருந்த ஐயா ஒருவரை மறித்து இந்த மருத்துவசேவை பற்றி வினாவினேன்.

"தம்பி இங்க ஒரு இயக்கத்தம்பி நிண்டு ஒவ்வொரு கிராமமாக சைக்கில் ஓண்டில திரிஞ்ச வருத்தங்கள் பாப்பர். எங்களுக்கு ஏதேன் கடி, காயம், காய்ச்சல் எண்டா நாங்கள் உங்க தான் போறனாங்கள். இதுதான் இப்ப எங்கட ஊர் கோயில் மாதிரி. ஏனென்டா இதவிட எங்கள கவனிக்க கடவுள்கூட இஞ்சினேக்க இல்லாம போட்டார். ஆமி அடிச்ச செல்லுகளோட....."

மருத்துவ வசதிகள் ஏதுமே அற்ற - ஏன் வைத்தியசாலை கட்டடங்களே அற்ற இக்கிராம மக்கள் வாழ்வில் பங்கெடுத்து பணிபுரியும் தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை பற்றி ஒரு தகவலாகவேனும் எழுதலாமே என்ற விருப்புடன் கிளிநொச்சி வந்தபொழுது அங்கே தலைமைப் பணிமனை தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை என்ற பெயர்பலகை நடப்பட்ட வீதியினூடு பயணித்தேன். எனது எண்ணம் அது ஒரு பெரிய கட்டடமாக இருக்கலாம் என்று. ஆயினும் ஓலைக் கூரை வேயப்பட்ட ஒரு சீமெந்து கட்டடத்தை காண்பித்தனர். அங்கே திலீபன் மருத்துவசேவை பொறுப்பாளர் அருண் அவர்கள்:

"எங்கட இந்த திலீபன் மருத்துவசேவை இப்ப வன்னி எண்டதுக்கு அப்பால மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா என்று ஐந்து மாவட்டங்களில செயற்பட்டுவருது. ஒன்பது மருத்துவசேவை நிலையங்கள் நாங்கள் இந்த மாவட்டத்தில ஆரம்பிச்சிருக்கிறம். கிட்டத்தட்ட 105க்கு மேற்பட்ட கிராமங்கள எங்களால பராமரிக்கக்கூடியதாக இருக்கிது.."

"நூற்றி ஐந்துக்குமேலான கிராமங்கள்" வியப்பு மேலிட "எந்தவிதமான அடிப்படையில உங்கட இந்த மருத்துவசேவை நிலையங்கள ஆரம்பித்தீர்கள்" என்றதற்கு. பின்தங்கிய, மருத்துவசேவைகள் எதுவுமே அற்ற கிராமங்களை தேர்ந்தெடுத்து அந்த மக்களிற்கு சுகாதார விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதும் மருத்துவ உதவிய வழங்குவதும் என்று ஒரு நடமாடும் சேவையா இது ஆரம்பிக்கப்பட்டது. இதில எழுபத்தைந்து வீதம் சுகாதார விழிப்புணர்வை வழங்குவது தான் எங்கட நோக்கம். அதுக்காக முதன்முதலில் முள்ளியவளையில பூதன் வயல் என்ற கிராமத்தில 10.02.2002 எங்கட முகாம் ஒன்றை ஆரம்பிச்சனாங்கள். அதுக்குப்பிறகு இப்படியான பின்தங்கிய கிராமங்கள மையப்படுத்தி கற்சிலைமடு, நயினைமடு, பூநகரி, ஐயன்குளம், கறுக்காய்குளம், ஆழியவளை, அளம்பில், நெடுந்தீவு, மாங்குளம், என்று ஒன்பது நிலையங்களை அமைச்சிருக்கிறம்.

இந்த ஒன்பது பிரதேசங்களிலும் ஏன் சுகாதார வசதிகள் அற்றுப்போனது? அரச மருந்தகங்கள், மருத்துவவசதிகள் கிடைத்ததினாலேயே முன்னர் இங்கே மக்கள் குடியேறியிருந்தனர். ஆனால் இப்போது அவை கிடைக்காது போயிருக்கலாம். அந்த வகையிலேதான் இக்கிராமங்களில் இப்படியானதொரு வைத்திய சேவையை வழங்க வேண்டியிருக்கின்றதோ. இச்சந்தேகத்தை தீர்த்துக் கொள்வதற்காக "நீங்கள் மருத்துவசேவை வழங்கும் இக்கிராமங்கள் அரசாங்க மருத்துவ வசதிகளைப் பெறமுடியாதுள்ளனவா அல்லது அரசு அதற்கான முயற்சியை செய்யாமலிருக்கிறதா" என்று கேட்டதற்கு:-

வன்னியில நாங்கள் நடத்திவருகிற இச்சேவையை பெறுகின்ற கிராமங்கள் ஒன்றுக்குமே அரச மருத்துவ வசதி என்பது கிடைக்க வில்லை என்றே சொல்லலாம். உதாரணத்திற்கு ஒரு கிராமத்தில் இருந்து மருத்துவ நிலையம் இருபத்தைந்து கிலோமீற்றருக்கு அப்பால இருக்கும். இந்த நிலையில் ஒரு ஆபத்தான கட்டத்தை அடைந்த நோயாளிக்கு மருத்துவசேவையை வழங்குவதற்கு இந்த அரச மருத்துவகூடங்களால முடியாது. ஆனா அந்த ஊரிலேயே ஒரு மருத்துவசேவை வழங்கக் கூடியதாக இருந்தா இதை நிவர்த்தி செய்யலாம். அப்படி பெரிய மாவட்டத்தர வைத்தியசாலைகள் கூட அண்மையில இருந்தாலும் அங்க வசதிகள் என்பது மிகமிகக் குறைவாகவே உள்ளன. ஆளணி என்றாலும் சரி உபகரணங்களாயிருந்தாலும் சரி மோசமான நிலைமையில தான் இருக்கின்றன. இதாலதான் சில செயற்திட்டங்களை அடிப்படையாவைத்து எங்கட தேசியத் தலைவருடைய ஆலோசனையின் பேரில தியாகதீபம் திலீபன் மருத்துவசேவையினை ஆரம்பிச்சம்.

பல கிராமங்களை உள்ளடக்கி ஒரு மருத்துவ நிலையம் அமைத்து சேவையாற்றுதல், நாளாந்தம் கிராமங்களை தெரிவு செய்து அங்கு நடமாடும் வைத்தியசேவையை செய்தல். மற்றது கிராமங்களில் தங்கிநின்று ஆய்வுகள் மேற்கொண்டு பொது மருத்துவங்கள், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் செய்தல், குடும்ப சுகாதார நலன் பேணும் குடும்பத்தரிசிப்புக்கள் செய்தல், திடீர்பாதிப்புக்கள் ஏற்படும் பட்சத்தில் உடனடிவைத்தியசேவை புரிதல், போசாக்கு குறைவை இனங்கண்டு நிவர்த்திசெய்தல்.

இதில விழிப்புணர்வை ஏற்படுத்துதல் என்பது முக்கியமானது. ஒரு இடத்தில அதிக நோய் தொற்று தாக்கம் உண்டாகிறது என்று சொன்னால் அவ்விடத்தில சுகாதார விழிப்புணர்வு குறைவாஇருக்குதெண்டுதான் அர்த்தம்.

"அது சரி ஏன் இந்த மருத்துவசேவைக்கு தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை என பெயரிடத்தோன்றியது. திலீபன் ஒரு மருத்துவ மாணவனாக இருந்து போராட்டத்தில் பங்கெடுத்தமையா இல்லை வேறு ஏதாவது நோக்குடனா இப்பெயரிடப்பட்டது." இச்சந்தேகத்தையும் அவரிடமே போட்டுடைத்தேன்.

"திலீபன் அண்ணை ஆரம்பகாலத்தில பெண்கள் அணியைத்திரட்டி சுதந்திரப்பறவைகள் அமைப்பு ஒன்றை உருவாக்கி அந்த அமைப்புக்கூடாக கிராமங்களில சுகாதார விழிப்புணர்வுகளை ஏற்படுத்துற கருத்தரங்குகளை நடத்திவந்தவர். அதோட முதலுதவிப்பயிற்சி முகாம்களை நடாத்தி கிராமந்தோறும் சிறிய முதலுதவிக் குழுக்களை உருவாக்கி மக்கள் மத்தியில ஒரு புதிய செயல்வடிவத்தை உருவாக்கினார். அதனால தான் அப்படியான ஒரு அமைப்பை மீண்டும் ஆரம்பிக்கும்போது அவருடைய பெயரையே இட்டுக்கொண்டோம்.

பின்தங்கிய பல கிராமங்களை இணைத்து ஒரு மத்திய இடத்தில் இச்சேவை நிலையத்தை அமைத்து இயங்கிவரும் தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை பல சவால்களையும் கூடவே எதிர்கொண்டு வருகின்றது. அவற்றை வெற்றிகரமாக வென்றும் வருகிறது. பாதைகள் எதுவுமே சீரற்ற நீண்ட பயணங்களின் முடிவாய் அமையும் கிராமங்களில் சாதாரண சேவைகளுக்கு அப்பால் பல பிரசவங்களை பார்த்து முடித்த அனுபவம் கூட இச்சேவைக்கு உண்டென்கிறார் அருண்.

"எங்கட மருத்துவசேவை நிலையத்தில் குறிப்பிடத்தக்க வசதிகள் ஏதும் இல்லாத நிலமைகளிலும் கூட அவசரமாக ஏற்படுகின்ற பிரசவங்களையும் எங்கட மருத்துவர்கள் பார்த்திருக்கிறார்கள். ஏனென்றால் இரவு நேரங்கள், கடினபாதை, பாதைகள் மூடப்பட்ட நிலைமை கடுமையான தாயின் வலி என்பன ஒரு மருத்துவமனைக்கு செல்லுதல் என்பதை சாத்திய மற்றதாக்கிவிடும். கிட்டத்தட்ட பதினாலு பிரசவங்களை இதுவரை எங்கட மருத்துவர்கள் செய்து முடிச்சிருக்கினம். வசதி இல்லையென்று சொன்னா உண்மையில ஒரு கட்டில் கூட இல்லாத நிலைமையில மண்குடிசைகளில இதை செய்து முடிச்சிருக்கினம்.

"அதோட இன்னுமொன்று நாங்கள் இந்த மருத்துவசேவையை ஆரம்பித்த நாளிலிருந்து 31.12.2002 வரைக்கும் எங்களால பார்க்கப்பட்ட வெளிநோயாளர்கள் 78126 பேர். இதில முக்கியமாக பாம்புக்கடி, வைரஸ்காய்ச்சல், சுவாசப்பாதை தொற்று, வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல் போன்ற தாக்கங்களுக்கு சிகிச்சையளிக் கப்பட்டுள்ளது."

"கிராமப்புறங்களில் அதிகம் மருத்துவசேவையினை வழங்கிவரும் உங்கள் அமைப்பு அவ்விடங்களில் எதிர்நோக்குகின்ற நெருக்கடிகள் எவையென குறிப்பிடமுடியுமா?"

" நிறையவே குறிப்பிடலாம். ஒன்று கிராமப்புற மக்கள் கல்வியறிவு குறைந்த மூடநம்பிக்கைகளை அதிகம் வைத்திருப்பார்கள். இதனால புதிய பல சுகாதாரப் பழக்கங்கள் பற்றி நாங்கள் கருத்துக்களை கூறிவந்தாலும் அவர்கள் கவனத்தில் கொள்ளமாட்டார்கள்.

"உதாரணத்திற்கு ஒன்று சொல்லலாம். முள்ளியவளை பூதன்வயல் என்ற இடத்தில ஒருதடவை ஒரு பிரசவவலி வந்துவிட்ட தாய். அவர் பிரசவ வலியால எழுந்து நடக்க முடியவில்லை. அவரை மருத்துவ நிலையம் கொண்டுசெல்ல வாகனமில்லை.

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

# போரின் மருத்துவம்

26-10-2000 மு.ப 11.50

"டொக்டர் உங்களுக்கு செற் மெசேச் வந்திருக்கு" கூறியவாறு சிவநேசன் கையில் சிறு காகிதமொன்றுடன் வருகின்றான். அதனைத் திருமலை மாவட்டத்தில் கள மருத்துவனாகப் பணியாற்றும் வரன் வேண்டிப் பார்க்கின்றான். பின்வரும் செய்தியினை அது தாங்கியிருக்கின்றது. 'நீங்கள் செய்தனுப்பிய வயிற்றுக்காயம் பிரச்சினையில்லை. உயிர் தப்பிவிட்டது. எனினும் மீண்டும் சத்திரசிகிச்சை செய்யவேண்டி ஏற்பட்டது குடலில் தையல் விடுபட்டிருக்க வேண்டும்.' இவனின் மனம் ஒருமாதம் முன்னர் நடைபெற்ற சம்பவங்களை அசைபோடுகின்றது.

வேறொரு பாரிய தாக்குதலுக்கான முன்னாயத்தமாக வரன் திரியாயிலிருந்து உப்பாறு பிரதேசத்திற்கு அழைக்கப்பட்டிருந்தான். அடர்ந்த காடுகளை ஊடறுத்தும் கைவிடப்பட்ட கிராமங்களைக் கடந்தும் இரண்டு நாட்கள் நடையின் பின்னர் 22-09-2000 அன்று அவ்விடம் வந்துசேர்ந்தான். வந்த களைப்பு ஆறுமுன்னர் தாக்குதல் சம்பவமொன்றில் கால் சிதைந்து இரத்த இழப்புடன் வந்திருந்த போராளி ஒருவனுக்கு சிகிச்சை அளிக்கவேண்டியிருந்தது. அவனது உயிரைப் பாதுகாக்க இவனும் சிவநேசனும் மிகுந்த பிரயத்தனம் எடுக்கவேண்டியிருந்தது. அன்றிரவு மீண்டும் ஒரு செய்தி வந்திருந்தது. இவர்களின் இடத்திலிருந்து ஆறுமைல் தொலைவிலுள்ள கடற்கரைக் கிராமம் நோக்கி காயம் ஒன்று வந்துசேர இருப்பதாக. இவர்கள் உடன் புறப்பட்டுச் செல்கின்றார்கள். அக்காயத்தினைப் பொறுப்பேற்கின்றார்கள். அப்போராளியின் வயிற்றறைச்சுவர் பிளந்துள்ளது. அதனூடு ஒரு பகுதி குடல் வெளித்தள்ளியவண்ணம் உள்ளது. மிகவும் ஆபத்தான நிலை. அவசியம் தேவையான, உயிர்காப்புச் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. இவனின் உயிரைக் காக்கவேண்டுமானால் வயிற்றறை திறந்து (LAPROTOMY) மேற்கொள்ளப்படும் பாரிய சத்திரசிகிச்சையினைச் செய்யவேண்டும். சாதாரண காலமாயின், மேற்படி சத்திரசிகிச்சை வசதிகள் நிறைந்த நிபுணத்துவவளம் உள்ள மருத்துவமனைகளிலேயே இது சாத்தியப்படும். ஆனால் இங்கு மேலதிக அவசர சிகிச்சைக்காக நகரத்தினை நாடுவதற்குப் பதிலாக அடர்ந்த காட்டினுள் அடைக்கலம் தேடவேண்டியுள்ளது. அதிகநேரம் தாமதித்தல் ஆபத்தானது. இச்செய்தி கசிந்து பகைவன் காதினுள் வீழ்ந்து இவர்கள் சுற்றி வளைப்பினுள் சிக்கலாம். எனவே காயத்தைக் கொண்டுவரச் சொல்லிவிட்டு வரன் முன்னால் விரைகின்றான் காட்டினுள் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்யவேண்டுமென்பதால்.

பலதிசைகளிலும் காட்டுமரப் பரண்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மருந்துகளும் ஏனைய உபகரணங்களும் எடுத்துவரப்படுகின்றன. காலநிலை, காட்டுயானைகள் ஆகியவற்றின் தாக்குதல்களில் தப்பியிருந்தவற்றை கணக்குப் பார்க்கின்றான். அவசியம் தேவையானவைகூட காணப்படவில்லை. ஏதோவொரு தவறு நடந்துவிட்டது. ஆனால் அதனை ஆராய நேரமில்லை. இந்த சிகிச்சைக்கு முயற்சிக்காவிட்டால் உடனடியாக வன்னித்தளத்திற்கு அனுப்பவேண்டும். ஆனால் இப்பொழுது அவ்வாறு செய்வது கனவிலும் சாத்தியமற்றது. எனவே சிகிச்சையை அங்கு ஆரம்பிக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகின்றார்கள். சத்திரசிகிச்சைக்கான கத்தி (SURGICAL BLADE) கூட அங்கு இல்லை. சிலபோராளிகள் அடுத்த கிராமம் சென்று சவர அலகு (PERMA SHARP) வேண்டிவர அனுப்பப்படுகின்றார்கள். எல்லாவற்றிக்கும் மேலாக தசைநார்களைத் தளர்வடையச் செய்யும் (MUSCULAR RELAXANT) மருந்துகள் இல்லை. சாதாரண போர்க்காயங்களுக்குப் பாவிக்கப்படும் மயக்க மருந்துகளைக் கொடுத்து சிகிச்சை ஆரம்பிப்பது என்பது சிக்கல் நிறைந்தது. அவ்வாறு சிகிச்சையை ஆரம்பித்தாலும் அது முடிவுறும் தறுவாயில் குடலை உள்ளே வைத்து வயிற்றறையைத் தைப்பது என்பது காற்றடைத்த பலூனைத் தண்ணீருள் அமிழ்த்தும் செயலை ஒத்தது. வரனின் எண்ணவோட்டத்தையும் அதனால் ஏற்படும் தயக்கத்தையும் உணர்ந்த சிவநேசன் உற்சாகம் கொடுக்கின்றான். 'டொக்டர் ஒண்டும் செய்யாமல் விடுவதிலும் பார்க்க ஏதாவது செய்யலாம் தானே' அவனது கூற்றை ஆமோதிப்பதுபோல் தலையை ஆட்டியவன் மருந்துகளின் பாவனைக் காலத்தைப் பார்க்கின்றான். இழையங்களைத் தைக்கப் பயன்படும் நூல்கள் (SUTURE MATERIALS) பல குறித்த காலத்தைக் கடந்து விட்டிருந்தன. சிந்தித்துக் கொண்டிருப்பதால் பலனேதுமில்லை என்பதை உணர்ந்து சிகிச்சையை ஆரம்பிக்க முடிவெடுக்கின்றார்கள்.

கூடாரம் ஒன்றின் உதவியுடன் தற்காலிக சத்திரசிகிச்சைக்கூடம் அமைக்கப்படுகின்றது. அதனுள் மரமேசையொன்று இடப்படுகின்றது. அதில் நோயாளி கிடத்தப்படுகின்றான். மயக்கமருந்து கொடுக்கப்படுகின்றது. வயிற்றறை சவர அலகினால் வெட்டித் திறக்கப்படுகின்றது. சிறிவரும் இரத்தக் கலன்கள் பிடித்துக் கட்டப்படுகின்றன. காலால் மிதித்து இயக்கப்படும் உறிஞ்சும் கருவி (SUCKER) கொண்டு தேங்கும் இரத்தம் அகற்றப்படுகின்றது. திறக்கப்பட்ட வயிற்றறையினுள்ளும் வெளித்தள்ளியும் காணப்படும் குடலும் ஏனைய உள்ளுறுப்புக்களும் பரிசோதிக்கப்படுகின்றன. ஒரு அடி நீளமான குடல் வெட்டி அகற்றப்படுகின்றது. இடைத்துண்டு வெட்டி அகற்றப்பட்டதால் மிகுதிக் குடல்களின் இருமுனை வாய்களில் இருந்தும் மலப்பொருட்கள் வயிற்றுக்குழியினுள் வருகிறது. இது இவ்வாறான சிகிச்சையின்போது முடிந்தளவு தவிர்க்கப்படவேண்டும். இதனால் சிகிச்சைக்குப் பின்பான மாறும் தன்மை (PROGNOSIS) பாதிக்கப்படும். அத்துடன் அதிகளவான கிருமித் தொற்றினால் (SEPTICAEMIA) உயிரிழப்பு ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். மேற்படி பிரச்சினையைத் தவிர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணம் (INTESTINAL CLAMP) இவர்களிடம் இல்லை. மாற்றுவழியாக வளையமிடப்பட்ட நூலின் உதவியினால் திறந்த குடல் வாய்கள் மிதமாக இறுக்கப்படுகின்றன. ஒருவாறாக சில மணிகளில் முடிக்கவேண்டிய சிகிச்சையை பலமணிநேர முயற்சியின் பின்னர் நிறைவு செய்கின்றனர். வெற்றி தோல்வியை நகரும் நாட்கள்தான் தெரிவிக்கவேண்டும்.


மருத்துவ அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முரணாகவே சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர்களுக்கு எள்ளளவு திருப்தியாறும் ஏற்படவில்லை. மேற்படி பிரதிகூலத்தை ஈடுசெய்வதற்காக வீரியம் கூடிய நுண்ணுயிர் கொல்லி மருந்துகளை ஏற்றுகின்றார்கள். ஒருவாறு அவனின் உயிரை சில நாட்கள் இழுத்துப்பிடித்துப் பாதுகாக்கின்றார்கள். சாதகமான கடல் நிலையும் கடற்படையின் கண்காணிப்புத்தளர்வும் பொருந்திவரும் நேரம் பார்த்து விழுப்புண்ணடைந்தவனை வன்னித்தளம் அனுப்பிவைக்கின்றார்கள். சில நாட்களின் பின் வந்த செய்தி இவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

தூயவன்

நேரம் நண்பகல் 12.50 வழமையாகக் கிழக்கிலிருந்து மேற்காகச் செல்லும் பயணிகள் ஜெற் விமானம் இவர்கள் கவனத்தைக் கவர்ந்து கடந்து செல்கின்றது. அச்சத்தம் அகன்றவுடன் இவன் அவ்வனமுகாமில் அமைந்திருக்கும் மருத்துவக் கொட்டகையினுள் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் நிலைமை பற்றி சிவநேசனுடன் கலந்துரையாடுகின்றான். சில நிமிடங்களில் மேற்கிலிருந்து இவர்கள் திசைநோக்கி வான்பரப்பில் விரைவு விமானமொன்று இரைந்து வருவது கேட்கிறது. இவர்களது இராணுவ மனம் விழிப்படைகின்றது. சற்று உன்னிப்பாகக்கேட்ட சிவநேசன் "மிக் வாறான்" எனக்கத்தி எல்லோரையும் உஷார் அடையச்செய்கின்றான். "டொக்டர் பங்கருக்குள்ள பாயுங்கோ" எனக்கத்தியபடி மருத்துவக் கொட்டகை நோக்கி வேகமாக ஓடுகின்றான். ஒரு காயக்காரனைத் தூக்கியபடி அங்கிருந்த பதுங்கு குழியினுள் பாய்கின்றான். ஏனைய மருத்துவப் போராளிகளும் காயக்காரரைத் தூக்கிக்கொண்டு நிலவறையினுள் பாதுகாப்பெடுக்க முயற்சிக்கின்றார்கள். எனினும் அச்சில கணநேர இடைவெளியினுள் அவ்விபரீதம் நடந்து விடுகின்றது. அடுத்தடுத்து மூன்று குண்டுகள் அப்பிரதேசத்தினுள் வீழ்ந்து இடிகளென வெடிக்கின்றன. வரனும் ஏனையவர்களும் இருந்த பதுங்குகுழி கந்தகப் புகையினால் சூழப்பட்டுவிட்டது. இவர்கள் மூச்சுவிடமுடியாமல் தவிக்கின்றார்கள். உள்ளிருக்கும் ஒருவன் சொல்கின்றான், "வாசல் மூடப்பட்டுவிட்டது. வெளியில் போக முடியாது." வெளியில் திறந்த பதுங்குகுழியினுள் பதுங்கிச் சிறு காயமடைந்தவன் உள்ளே ஓடிவந்து இவர்களுடன் சேர்ந்து கொள்கின்றான். அதனை வைத்து வாசல் மூடப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்கின்றார்கள். விமானங்கள் அடுத்த சுற்றுத்தாக்குதலைச் செய்யமுதல் நிலைமையை அவதானிக்க வெளியில் வந்து பார்க்கின்றார்கள். இம்முறை இவர்கள் தாக்குண்டது தாங்கள் கண்ணுற்ற காட்சி ஏற்படுத்திய அதிர்ச்சியினால். முன்னால் இருந்த மருத்துவக் கொட்டகையும் வேறும் சில கொட்டகைகளும் காணாமல் போய்விட்டிருந்தன. அடர்ந்த காட்டில் தூசுபடர்ந்த சில வெளிகள் உருவாகியிருந்தன. மூடிய நிலவறை இடிந்து நிலத்தினுள் இறங்கியிருந்தது. அதன் வாசலில் சிவநேசனின் ஒருகால் துண்டிக்கப்பட்டும் மறுகால் உடைந்தும் தொங்குகின்றன.



(தொடர்ச்சி 15ம் பக்கம்)



# ஒரு போராளியின் குருதிச் சுவடுகள்...

# அமைதியான தோற்றத்தின் அதிசய உண்மைகள்.

— ச.புரட்சிமாறன் —

கடந்த சில நாட்கள் முழுதும் துளசியின் எண்ணங்களுடனேயே கழிந்தன. துளசியுடன் வாழ்ந்தவர்களிடம் அவனைப்பற்றி வினவிய போது எல்லோருமே முதலில் அமைதியாகினர். போராட்ட வாழ்க்கையில் ஒரு போராளியிடம் இருக்கவேண்டிய பண்புகளையும் கடந்து ஒரு உயர்ந்த போராளியாய் வாழ்ந்த அந்த வீரனைப் பற்றி எதைச் சொல்வதெனத் திகைத்தனர். தாங்கள் அவனைப்பற்றிச் சொல்லும் போது அந்த வீரனின் உண்மையான வடிவம் பாதிக்கப்பட்டுவிடுமா என எல்லோரும் தயங்கியபடியே அவனைப்பற்றிச் சொல்லத் தொடங்கினர். அந்தத் தயக்கத்துடனேயே அமைதியான தோற்றத்திற்குள் இருந்த அதிசய உண்மைகளைச் சொல்ல எனது எழுதுகோல் முனைகின்றது.

சாதாரண ஒரு மனிதனாகவும் அந்த மனிதர்களுள் அவன் தமிழனாகவும் பிறந்ததினால் போராட்ட வாழ்வு எல்லாப் போராளிகளைப் போலவும் அவனுக்கும் தவிர்க்க முடியாத தொன்றாகி விட்டது. அவன் போராளி ஆகிய பின் அவனுக்கான உறவுகள் விரிவடைந்து இந்தத் தேசம் அவனது உறவாகியது. அதன் பின் இந்த மண்ணில் உலவிய ஒவ்வொரு தாயையும் தன் தாயாகவும் ஒவ்வொரு தோழர்களையும் தன் சகோதரனாகவும் அவன் நேசித்தான். இந்த நேசிப்புக்களின் விளைவுதான் அவனது போராட்ட தடங்களாகப் பதிந்திருக்கின்றன. அப்படி இல்லாது விடின் இப்படி ஒரு போராளியால் செயற்பட முடியாது.

அது ஆனையிறவு முன்னரண்களில் அவன் வாழ்ந்த காலம். அப்போது அங்கிருந்த தோழர்கள் சிலருக்கு அவன் பொறுப்பாளன். அங்கு ஒவ்வொரு காப்பரணில் காவலில் நிற்கும் போராளிகளையும் அவன் சந்திப்பது வழக்கம். காவலரணில் நின்ற போராளிகளைச் சந்தித்தபடி வந்தவன் ஒரு காப்பரணில் அமர்ந்து கொள்கிறான். அது போராளிகள் தேநீர் அருந்தும் நேரம் அதனால் அடுத்த சில மணித்துளிகளில் அங்கு என்ன நிகழப்போகின்றதென்பதையோ, தான் அதற்காய் என்ன முடிவு எடுக்கப்போகின்றேனென்பதையும் அறியாதவனாய் ''என்ன மாதிரி எனக்கும் தேத்தண்ணி தருவீங்களோ'' என்றவன் அந்தப் போராளிகளுடன் உரையாடிக் கொண்டிருந்தான். அங்கு நிலவிய அமைதியைக் குலைத்தபடி ஒரேயொரு துப்பாக்கி வேட்டுச்சத்தம். மட்டுமே கேட்டு ஓய்ந்தது. அவனுக்கு தேநீருடன் வந்தவன் எதிரியின் பதுங்கிச் சுடுபவனுக்கு இலக்காகி மடிந்து போகிறான். அந்தக் கணத்திலிருந்து அவன் ஒரு முடிவெடுத்துக் கொள்கின்றான். இனி தேநீர் குடிப்பதேயில்லை என்று. அவன் அந்த முடிவை எடுத்ததுடன் மட்டும் நிற்கவில்லை. அதன்பின் தன் வாழ்வின் கடைசித் துளிவரை கடைப்பிடித்தான். அவனது இதயத்தின் வேதனையின் வெளிப்பாடாகவே இதைக் கடைப் பிடித்தான்.

இப்படித்தான் ஒவ்வொரு போராளியையும் நேசித்தான். அவன் ஒரு பொறுப்பாளனாய் இருந்த நாட்களிலெல்லாம் தனக்குக் கீழ் இருக்கும் ஒவ்வொரு போராளிக்கும் எத்தகைய வசதிகள், உடைகள், உணவு என்பன கிடைக்கின்றதோ அதைவிட சற்றுக் குறைவாகவே தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவன். ஏனெனில் தன்னால் எதை நிறைவேற்ற முடியுமோ அதை நிறைவேற்றிய பின்னரே அந்த விடயத்தில் தன் கீழுள்ள போராளிகளும் அதை நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்பார்ப்பவன்.

அவன் வேவு அணியொன்றுக்குப் பொறுப்பாகவிருந்தும் செயற்பட்டவன். அது பலாலி இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதி. அங்கு இராணுவ முன்னணி நிலைகளை வேவுபார்க்கும் பணியில் அவன் பொறுப்பில் சில போராளிகள் கொடுக்கப்பட்டனர். ஏனெனில் துளசிக்கு ஏற்கனவே வேவு



**யாழ் மாவட்ட தாக்குதலணித் தளபதி**
**மேஜர் துளசி**
(ஆழ்வார்பிள்ளை இலம்போதரன்)
கரவெட்டி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

பார்ப்பதில் அனுபவம் இருந்தது. அவன் காட்டும் திசைகளில் சென்று அவர்கள் வேவுத்தரவுகளைச் சேகரித்து வருவார்கள். சில வேளைகளில் எதிர்பார்த்த தரவுகள் கிடைக்காதபோது வேவுக்குச் செல்லும் போராளிகளிடமிருந்து அதற்கான காரணத்தை தெளிவாகச் சொல்லமுடியாது போனால் தானே அந்த இடத்திற்கு நேரில் சென்றுவிடுவான். இதன் பின் அவர்கள் அவன் குறித்த இலக்கிற்குச் செல்லாமல் மீள்வதில்லை. ஆனாலும் அவன் போராளிகளின் இழப்பை விரும்புபவனல்ல.

யாழ்ப்பாணம் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் கைகளில் வீழ்ந்தபின் ஒரு பொழுதில் துளசியின் கீழ் நின்ற போராளிகள் சிலரை வேவிற்கு அனுப்பிவிட்டு அமைதியான இரவுப் பொழுதில் தொலைத் தொடர்புக்கருவியின் முன்னால் விழித்திருந்தான். மாலை கழிந்து வந்து இருளுக்குள் சென்றவர்கள் விடிவதற்குள் திரும்பிவிட வேண்டும். ஆனாலும் மணித்துளிகள் நகர்ந்தனவே தவிர தொலைத் தொடர்புக்கருவியில் எந்த ஓசைகளும் எழவில்லை. விடிவதற்கான நேரம் அண்மிக்க அண்மிக்க அவன் இதயம் படபடத்தது. ஆனாலும் அவன் எண்ணியதற்கு எதிர்மாறாய் எல்லாம் நடந்தன. தொலைத் தொடர்புக்கருவி அமைதியாய் இருக்க காலை வழமைபோல் விடிந்தது. தூரத்தே அவன் தேடும் அந்த உருவங்களைக் காணவேயில்லை. அவனால் முகாமில் இருக்க முடியவில்லை. அந்தக் கடற்கரையில் அவர்கள் சென்ற திசையைப்பார்த்தபடியே இருந்தான். காலைப் பொழுது முடிந்து நண்பகலை அண்மித்தபோதும் தூரத்தே எதையும் அவதானிக்க முடியவில்லை. கடற்கரை வெப்பக் காற்றும் அனல் வீசும் சூரிய வெப்பக்கதிர்களும் அவனுக்கு பெரிதாகப்படவில்லை. போராளிகள் அவனை முகாமிற்கு வரும்படி அழைத்தனர். ஆனால் அவன் கடலையே வெறித்தபடி பார்த்துக் கொண்டிருந்தான். நண்பகலையும் தாண்டிய பொழுதில் அந்த வேவுவீரர்களின் தொடர்பு கிடைக்கின்றது. அதன் பின்புதான் அவன் அந்தக் கடற்கரையிலிருந்து புறப்பட்டான். இப்படித்தான் அவன் ஒவ்வொரு போராளிகள் மீதும் பாசம் வைத்திருந்தான்.

அவன் போராளிகள் மீது மட்டுமல்ல எந்த மக்களின் விடிவிற்காக போராட்டப் பாதையினைத் தேர்ந்தெடுத்தானோ அந்த மக்களையும் அவன் நேசித்தான். முல்லைத்தீவு இராணுவ முகாமைக் கைப்பற்றிய பின் அங்கு புதிதாகப் பயிற்சி பெற்ற போராளிகளுக்கு பொறுப்பாளனாய் துளசி செயற்பட்டுக் கொண்டிருந்தான். அந்த நாட்களில் அங்கு பயிற்சிபெறும் போராளி ஒருவரின் தாய் தன் மகன் அங்கு நிற்பதை எப்படியோ அறிந்து தன் மகனைச் சந்திப்பதற்காக வந்தாள். ஆனால் அந்தத் தாய் அங்கு வந்தது அவனை அழைத்துச் செல்லவல்ல. தன் வீட்டின் பழுதடைந்த கூரைக்குள் இருந்தபடி தான் வாழ்வதையும் அதற்கு மகனிடத்தில் ஏதாவது உதவி கிடைக்குமா என்று கேட்பதற்கும்தான். அந்தத் தாயின் இயலாமையை துளசியால் உணர முடிந்தது. ஆனாலும் அவன் ஒரு தாக்குதலணியை வழி நடத்துபவன் என்றவகையில் அந்தத் தாயிற்கு நேரடியாக விடைசொல்ல வேண்டிய அவசியமோ அல்லது உதவி செய்யவேண்டிய அவசிமோ இருக்கவில்லை. ஆனாலும் தான் இயன்ற உதவியை அந்தத் தாயிற்கு செய்வதற்காகப் போராளிகளிற்கு ஓய்வாக இருக்கும் நேரங்களில் தென்னம் ஓலைகளைச் சேகரிக்கச் செய்தான். அந்தத் தாய் வந்து சென்று சில நாட்கள் கழிந்த ஒரு பொழுதில் அந்தத் தாயின் வீட்டிற்கு கிடுகுகள் வந்து சேர்ந்தன. அவன் அதை அனுப்பியபோதும் தன் பெயருக்குப் புகழ் தேடவில்லை. "இயக்கம் உங்களிடம் கொடுக்கச் சொன்னதாக சொல்லிக் கொடுக்கவும்" என்று அவன் போராளிகளிடம் சொல்லியனுப்பியிருந்தான்.

இப்படிக் கழிந்த அந்த வீரனின் வாழ்வின் சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்கின்றன. அவனது இயக்க வாழ்வில் ஒரு தளபதியின் மெய்ப்பாதுகாவல் பணியினை அவன் பொறுப்பெடுத்துச் செயற்பட்ட காலம். மெய்ப்பாதுகாப்புப் பணியில் அலட்சியம் இல்லாமல் செயற்பட வேண்டும் என்பதனை ஒவ்வொரு போராளிக்கும் அடிக்கடி நினைவூட்டுவான். அந்தப் பணியில் அலட்சியமாகச் செயற்பட்டால் விளைவு பாரியதாய் இருக்கும் என்பதை அவன் உணர்ந்திருந்தான். அதனால்தான் போராளிகள் மெய்பாதுகாப்புப்பணியில் அலட்சியமாக நின்றால் துளசியிடம் தப்பித்துவிடமுடியாது. தளபதியை விட அந்தப் போராளிகள் துளசிக்கே அதிக பயம். ஆனால் அந்தப்பயம் அவனால் தண்டனை கிடைக்குமென்பதற்காக அல்ல. அவன் சொல்லும் எதையும் செயலில் காட்டுபவன். தளபதி அதிகமான நாட்களில் இரவு பன்னிரண்டு மணியையும் தாண்டிய பின்னரே நித்திரைக்குச் செல்வார். தளபதி விழித்திருக்கும் நேரம் வரை துளசியும் விழித்தபடியே இருப்பான். போராளிகள் அவனை நித்திரைக்குச் செல்லுமாறு பணித்தாலும் துளசி அந்த தளபதிக்கு முன் துயின்றதேயில்லை. அப்படிப்பட்ட வீரனிற்கு அந்தப் போராளிகள் பயப்படாமல் வேறு என்ன செய்ய முடியும்?

அந்தத் தளபதியும் துளசியும் ஒரே சமர்க்களத்தில் விமானக் குண்டுவீச்சில் ஒன்றாக விழுப்புண் அடைந்தனர். இருவரிற்கும் பலமான காயம். உடனே இவர்களும் ஏனைய காயமடைந்த போராளிகளும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு ஒரே பகுதியில் அடுத்தடுத்த அறைகளில் இருந்தபடிதான் இருவரும் சிகிச்சை பெற்றுவந்தனர். துளசி தன்னுடன் உதவிக்கு நின்ற போராளியை அடிக்கடி தளபதியிடம் அனுப்பி அவர் எப்படி இருக்கின்றார் என்பதை அறிந்தபடியே இருப்பான். இதற்குள் அவர்கள் காயப்படும் போது அவர்களின் ஆயுதங்கள் வழமைபோல் உரிய இடங்களுக்கு

→

அனுப்பிவைக்கப்பட்டன. ஆனால் தளபதியின் கைத்துப்பாக்கியைக் காணவில்லை. கைத்துப்பாக்கி தொலைந்து விட்டதை துளசியிடம் சொல்லியபோது அவன் தன் காயத்தின் வேதனையிலுமிருந்து சிரித்தபடி தன் கட்டிலின் தலையணைக்குக் கீழ் இருந்து அந்தக் கைத்துப்பாக்கியை எடுத்துக் கொடுத்தான். தான் காயமடைந்த போதும் தன் கடமையினை நிறைவேற்றிய திருப்தி அவன் இதயத்தில் அப்போது இருந்திருக்கும்.

துளசியின் ஆச்சரியமூட்டும் திறமைகளால் அவன் புலனாய்வுப் பணியில் முக்கியமான வேலை ஒன்றிற்கு தெரிவு செய்யப்பட்டு அதற்கான முகாமிற்கும் சென்று விட்டான். துளசிக்கு அது விருப்பமாகவும் இருந்தது. அவன் அங்கு சென்று ஓரிரு நாட்களில் குளித்துக்கொண்டிருக்கும்போது அவன் உடலின் தோற்றம் எதேட்சையாக தளபதியின் கண்களுக்குள் அகப்பட்டது. அப்போதுதான் அவனது உடலில் அநேகமான பகுதிகளில் காயத் தழும்புகள் இருப்பதை அவதானித்தார். அந்தத் தளபதி அவனை அழைத்து தான் எதிர்பார்க்கும் பணிக்கு நீ பொருத்தமானவனாக இருந்த போதும் உனது காயத் தழும்புகள் அதற்குப் பொருத்தமானதாக வில்லையே என்று அவனை முதலிருந்த பணிக்கே திருப்பி அனுப்பிவிட்டார். உண்மை நிலையைப் புரிந்த துளசி சோகத்தோடு திரும்பினான்.

ஆனாலும் சாதிக்கவேண்டும் என்ற மன உணர்வு அவனிடம் குன்றிப் போகவில்லை. யாழ்ப்பாணம் சிங்கள் இராணுவத்தால் சூழப்பட்ட பின் அங்கு நிகழும் ஒவ்வொரு அனர்த்தங்களும் அவன் நெஞ்சை வெகுவாகப் பாதித்தது. அதனால் யாழ்ப்பாணம் சென்று தானும் போரிடவேண்டும் என்று அவன் துடித்துக் கொண்டிருந்தான். அவன் எண்ணம் நியாயமானதாக இருந்தாலும் அவன் உடல் அதற்குப் பொருத்தமானதாகவேயில்லை. தவளை நடவடிக்கையின்போது அவன் காலில்பட்ட விழுப்புண் பாரியதாய் இருந்தது. அவனது காலொன்று அகற்றவேண்டிய சந்தர்ப்பம் இருந்தபோதும் அவன் மறுத்ததினால் அகற்றப் படாமலிருந்தது. அந்தக் கால் அகற்றப் படாததன் வேதனையை அவன் அனுபவித்தபடியே இருந் தான். அது எப்போதும் மாறாத காயமாய் நீர் வடிந்தபடியே இருந்தது. அவன் ஒற்றை ஊன்று கோலை ஊன்றியபடியே பின்னர் உலாவினான்.

இந்தக் காலுடனேயே யாழ்ப்பாணம் போகப்போவதாகத் தளபதியிடம் கேட்டுக்கொண்டான். அவன் உணர்வைத் தளபதியால் புரிந்துகொள்ள முடிந்தாலும் அவன் உடல் அதற்கு இடம் தராது என்பதால் அவர் அதற்குச் சம்மதிக்கவில்லை. அதன் பின் துளசி தான் வைத்திருந்த ஊன்று கோலையும் தூக்கி எறிந்துவிட்டு மிகுந்த வேதனையை அனுபவித்தபடி நடைபயின்றான்.

கொஞ்ச நாட்களின் பின் தளபதியிடம் அதே வேண்டுதல். தளபதியிடம் இருந்து மீண்டும் மறுத்து பதில். ஆனாலும் இறுதியில் தன்னால் சாதிக்க முடியும் என்று அவன் உறுதியாய் நின்றதால் யாழ்ப்பாணம் செல்லவிருக்கும் போராளிகளுக்குப் பொறுப்பாக துளசி தெரிவு செய்யப்பட்டான். அவனது மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அவனிற்குக் கீழ் நின்று பயிற்சிபெற்ற போராளிகள் பயிற்சி முடிந்து புறப்படும் நாள்வரை துளசியும் தங்களுடன் வரப்போகிறான் என்பதை நம்பவேயில்லை.

1997இன் ஒரு மாலைப் பொழுதில் அந்த நடைப்பயணம் ஆரம்பித்தது. விடிவதற்குள் தாண்டவேண்டிய தூரம் பத்துக் கிலோமீற்றர்களையும் தாண்டிய தூரம். தாண்டவேண்டிய தூரம் தரையல்ல. சேறும் சகியும் நீரும் நிறைந்த கடல்நீரேரி. உடனிருந்த போராளிகள் அனைவரிடமும் அந்த கடினபயணத்தைத் தாண்ட உடற் பலமிருந்தது. ஆனால் துளசியிடம் அந்தத் தூரத்தை தாண்டும் மனோபலம் மட்டுமேயிருந்தது.

கரையில் நின்ற தோழர்கள் கொஞ்சம் தயக்கத்தோடு விடை கொடுத்தனர். பயணம் ஆரம்பித்தது. துளசி தன்னுடன் வந்த இன்னொரு போராளியின் மேல் ஒரு கையை துணைக்கு வைத்தபடி அந்தக் கடின பயணத்தில் நடந்து கொண்டிருந்தான். உடற்சோர்வும், வேதனையும் எல்லோரையும் விட அவனிற்கு அதிகமாய் இருந்தது. அவனது உடைந்த கால் பயணத்திற்கு ஒத்துழைக்கத் தயங்கியது. ஆனால் மனம் உடையாமல் ஒத்துழைத்தபடி அவனை முன்நகர்த்தியது.

பயணம் நெஞ்சளவு நீருக்குள்ளாலும் இருந்தது. இடையில் நீந்திக்கடக்க வேண்டியுமிருந்தது. அனுபவிக்க முடியாத வேதனைகளை அந்த இரவுப்பொழுது அவனிற்குக் கொடுத்தபோதும் அவன் அந்தப் பயணத்தை முடித்து யாழ்ப்பாணக் கரையில் ஏறினான். அப்போது அவனின் விழுப்புண்பட்ட கால் வளைந்தேவிட்டது. அந்தப் பயணத்தை அவன் முடித்தபோதும் அடுத்துவந்த நாட்களெல்லாம் வேதனை மிகுந்தவையாகவே கழிந்தன.

முற்றிலும் சிறிலங்கா இராணுவ முகாம்களால் சூழப்பட்ட யாழ்குடாநாட்டிற்குள்ளேயே இனி அவர்களது வாழ்விருந்தது. கழியப்போகும் ஒவ்வொரு மணித் துளிகளும் ஆபத்தானவை. சுற்றிவர எந்தத் திசையிலும் இராணுவக் கண்கள். இந்தச் சூழலுக்குள் தப்பித்து நின்று இராணுவத்திற்கு தொல்லை கொடுப்பதற்கு தனியே ஆயுதபலம் மட்டும் போதாது. இராணுவத்தை எதேட்சையாக சந்திக்க நேரின் தாக்குதல் நடாத்திவிட்டுத் தப்பித்துக்கொள்ள நல்ல உடற்பலம் தேவை. இங்கே தப்பிச்செல்லும்போது ஆயுதமென்பது இரண்டாவது பட்சந்தான்.

ஆனால் வேகமாக நடக்கவே முடியாத காலோடு யாழ்ப்பாணத்தில் நிற்பதுமட்டுமல்லாமல் அந்தத் தாக்குதலணிக்கு பொறுப்பாளனாகவும் நின்று செயற்படுவதென்பது சாதாரணமானதல்ல. ஆங்காங்கே நிற்கும் போராளிகளுக்கு தகவல் மூலமே கட்டளைகள் வழங்கப்படும். நேரடியாக சந்திப்பது என்பது அத்தி பூப்பது போலவே நிகழும். ஆனாலும் அங்கிருந்த போராளிகளுக்கு துளசியைப் பற்றி நன்கு தெரியும். அவன் வழிநடத்தலில் தவறிருக்காது என்பது அவனது கடந்த காலப் பதிவுகள். அவன் அரசியற்துறையில் நிர்வாகப் பொறுப்பாளனாக, தாக்குதலணிப் பொறுப்பாளனாக, வன்னியில் இயங்கிய நிர்வாக சேவைப் பொறுப்பாளனாக என பல்வேறு கோணங்களில் வழி நடத்தல் புரிந்தவன். அப்போது அவன் நேரடியாகச் செய்து காட்டியவை இப்போது அவன் நேரடியாக இல்லாத வேளையிலும் அவனது போராளிகளுக்கு முழுமையாகப் புரிந்திருந்தது. அதனால் களங்களை வழி நடத்துவது அவனுக்கு இலகுவானதாகவே இருந்தது.

ஆனாலும் ஒத்துழைக்காத உடல் வலுவோடு தாக்குதல் நடாத்துவதற்கான வேவு நடவடிக்



கையிலும் தாக்குதல் நடக்கும் இடத்தை நேரடியாகப் பார்த்து உறுதிசெய்வதில் போராளிகளின் மறுப்பையும் மீறி அவன் முன்நிற்பான். எப்போதும் மக்களுக்குத் தொல்லை கொடுக்கும் இராணுவத்திற்கே முதலில் இழப்புக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பான். அதுபோலவே தட்டாதெருவில் மக்களுக்குத் தொல்லை கொடுக்கும் இராணுவத்திற்கு அவனது அணியின் முதற்தாக்குதல் நிகழ்ந்தது.

ஒரு சிங்கள இராணுவக் கட்டளை அதிகாரிபோல கம்பி வேலிகளால் சூழப்பட்ட முகாமிற்குள்ளிருந்து கட்டளை வழங்காது விடுதலைப்புலிகளின் கடந்தகால வரலாற்றினைப் போலவே துளசியும் இயலாத உடல்வலுவோடு களத்தில் தன் போராளிகளுடன் அருகிருந்தான். அந்தத் தாக்குதலில் ஏழு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். எதிரியின் நான்கு துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன. அந்தத் தாக்குதலுக்காக வன்னியிலிருந்து அவனது அணிக்கு வாழ்த்துச் செய்தியும் கிடைத்தது.

அவன் தொடர்ந்தும் தன் தாக்குதல்களை விளானில், கலட்டியில் என பல்வேறு முனைகளில் மேற்கொண்டான். அந்த நாட்கள் மிகவும் கடினமானவை. நித்திரையென்பது எப்போதாவது கிடைப்பதொன்றாயும் உணவு என்பது கிடைக்கும் போது மட்டுமென்பதாயும் ஓய்வு என்பது இல்லாததாயும் இருந்தது. இவர்களின் தாக்குதல் அதிகரிக்க இராணுவ முற்றுகைகளும் அதிகரித்தது. அவர்கள் தங்குவதற்கான இடங்கள் இல்லாது போயின. சில வேளைகளில் தங்குமிடங்களில் தண்ணீர், உணவு எதுவுமின்றி இரண்டு மூன்று நாட்களும் முடங்கியிருக்க வேண்டியும் ஏற்பட்டது.

இந்தக் கடினமான சூழலுக்குள்ளும் சண்டைகளில் விழுப்புண்படும் போராளிகளை எப்படியாவது வன்னிக்கு அனுப்பி விடுவான். அது இலகுவான காரியமாகவும் சொல்லக்கூடியதாயும் இருக்கவில்லை. துளசியின் முன்னேற்பாடான செயற்பாடுகளும் நுட்பமான திட்டங்களுமே அந்தப் போராளிகளைக் காப்பாற்றின.

யாழ்ப்பாணத்தில் முற்றுகை அதிகரித்ததால் துளசியால் அங்கு செயற்படுவது கடினமென்பதை உணர்ந்து அவனை வன்னிக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அவன் வரவேயில்லை. தான் இராணுவத்தின் முற்றுகைக் குள்ளானால் தன்னையும் அழித்து இராணுவச் சிப்பாய்கள் பலரை ஒரே நேரத்திலும் அழிப்பதற்காக வெடிமருந்துப் பொதியொன்றை தனக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டிக் கொண்டிருந்தான்.

புனிதமான அவனது போராட்ட உணர்வின் முன்னால் வன்னியில் இருந்த தளபதிக்கு எதுவும் செய்யமுடியாத நிலை. ஆயினும் அவன் வரவேண்டும் என எல்லோரும் எதிர்பார்த்தார்கள்.

தொண்ணூற்றி ஏழாம் ஆண்டின் பங்குனி மாதத்தின் பதினைந்தாம் நாள் வழமைபோல விடிந்திருந்தது. இறுக்கமான முற்றுகைச்சூழலுக்குள் ஒரு தாக்குதலை நடத்தவேண்டும் என துளசி அதிகமாக முயற்சித்தபடியிருந்தான். அன்றைய பகல் பொழுது முடிந்து இருளுக்குள் சூழல் புகுந்ததன் பின் இலக்கு ஒன்றினைப் பார்த்து உறுதி செய்வதற்காக கவி என்ற போராளி துவிச்சக்கர வண்டியினை ஓட்டிச்செல்ல துளசியும் அவனுடன் இருந்தான்.

இடையில் துவிச்சக்கர வண்டியினை இராணுவக் கரமொன்று பற்றிப்பிடிக்கின்றது. கவி இராணுவத்தை கைகளால் தாக்கவும் அவர்கள் சுதாகரிக்கும் போது கவியினை தப்பிச் செல்லுமாறு பணித்தவன், இராணுவத்தின் துப்பாக்கிச் சன்னங்களால் காயமடைந்தான். நிலைமையை நன்கு புரிந்து கொண்டவன் "சயனைட்" வில்லையை உட்கொண்டு தான் உயிருடன் எதிரியிடம் பிடிபடக்கூடாதென்ற உறுதியுடன் தன் கைத்துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுக் கொண்டான்.

யாழ். கோண்டாவிலின் பாரதி வீதியில் அந்த இரவுப் பொழுதில் எங்களொருவருக்கும் தெரியாமல் அவன் மடிந்து போனான். யாழ்ப்பாணத்து வீதிகளில் அதுவரை எங்கள் வீரர்களால் சிந்தப்பட்ட இரத்தத்துடன் அவனின் இரத்தத் துளிகளும் சேர்ந்துகொண்டது.

"சின்ன வயதிலேயே சிறந்த ஆளுமையும் அசைக்க முடியாத தலைமைப்பற்றும் எல்லோரையும் இலகுவாகக் கையாளும் நிர்வாகத் திறமையும் துணிச்சலான அவனின் சண்டைகளுமே என்னைக் கவர்ந்தன. எல்லோருக்கும் மேலாய் அவனிடமிருந்த போராட்டப்பற்று அதிசயிக்கத்தக்கது. அவன் யாழ்ப்பாணத்தில் தன்னுடன் கூட நின்ற போராளிகள் ஒவ்வொருவராய் மடிந்தபோது அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தன் வீங்கி நீர்வடியும் மாறாத காயமிருந்த காலுடன் சென்று சண்டையிட்டு தாங்க முடியாத சுமைகளைத்தாங்கி எல்லோராலும் சாதிக்க முடியாத வற்றைச் சாதித்து மடிந்ததை எப்படி மறக்கமுடியும்?" என்று அவனை வளர்த்த தளபதி கூறியவை எத்தனை உண்மையானவை. •



## தமது மக்களின் விடுதலைக்கு...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

அவரில இருந்து இரத்தம் பெருக்கெடுத்துக் கொண்டிருக்குது. எல்லோராலும் ஒன்றும் செய்ய முடியல்ல. அந்த நேரம் நாங்கள் எங்கட நிலையத்தில இருந்து அவ்விடத்திற்கு போகிறோம். அங்க அந்த தாய் இரத்தம் பெருகியதாலை வெளிறிபோய் மிகமிக ஆபத்தான நிலைமையில இருக்கிறா. நாங்கள் உடன அவரை வாகனத்தில ஏற்றி எங்கட மருத்துவ நிலையம் அனுப்பிவைச்சதால அவரும் தப்பிக்கொண்டார். அந்த குழந்தையும் உயிர்பிழைக்குது. இல்லையெண்டா இரண்டு உயிர் அந்த இடத்தில பலியாய் போயிருக்கும்.

சில நேரம் கடுமையான நோயால பாதிக்கப்பட்டிருந்தாலும் நோயாளிய உடன மருத்துவநிலையம் கூட்டிவரமாட்டார்கள். அவர்கள் முதலில் தங்கட சடங்குப்பார்வை எல்லாம் பார்த்து வேப்பங்குளை வீசி எல்லாம் செய்து கடைசியா ஆபத்தான கட்டத்திலதான் எங்களிட்ட கொண்டுவருவினம். அதால கிராமத்தில மருத்துவ சேவை என்பது மிக நெருக்கடி நிறைந்ததாயிருக்கின்றது."

முன்னர் குறிப்பிட்டது போல தியாகதீபம் திலீபன் மருத்துவசேவை அதிகம் செயற்படுவது அரசகட்டுப்பாடில்லாத பிரதேசங்களே. ஆயினும் அண்மைக்காலத்தில யாழ் மாவட்டத்திற்கு உட்பட்ட அரச கட்டுப்பாட்டில் அமைந்த நெடுந்தீவிலும் இந்த சேவைநிலையம் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டிருந்தார். அரச கட்டுப்பாடில்லாத வன்னிப் பிரதேசங்களில்தான் சுகாதார சேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன. என்றெண்ணியிருந்த எங்களுக்கு நெடுந்தீவிலும் இந்நிலை ஏற்பட்டதென்பது ஆச்சரியப்படுகின்ற செய்தியாக அமைகின்றது. ஏன் இந்த நிலை நெடுந்தீவிலும் ஏற்பட்டது என்று அவரிடம் கேட்டதற்கு "உண்மையில நெடுந்தீவு பிரதேசத்தில நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இருந்தபோதும் அங்க ஒரு நிரந்தரமான மருத்துவ நிலையம் இருக்கவில்லை. மக்கள் ஏதெனும் அவசரம் என்று சொன்னால் மருத்துவத்திற்காக 10 கடல் மைல்லிற்கு மேல கடல்ல பிரயாணம் செய்து வந்துதான் தங்கட தேவையை பூர்த்தி செய்யவேணும். இந்த நிலையில மக்கள் அங்க பெரிய கஸ்ரப்பட்டவை. இதை அவதானிச்ச எங்கட அரசியல் வேலை செய்யும் போராளிகள் அரசியல்துறைக் கூடாக தொடர்புகொண்டு எங்கட மருத்துவசேவை நிலையம் ஒன்றை அங்க அமைச்சினம் அதுக்குப்பிறகு அங்க மக்கள் எல்லாம் மிகவும் சிக்கலில்லாமல் தங்கட மருத்துவ தேவைக்காக அதிகம் எங்களிடம் வருவார்கள். ஆரம்பத்தில இஞ்ச இருந்த ஒரே ஒரு அரசமருத்துவ நிலையத்திற்கும் இடைக்கிடை ஒரு மருத்துவர் வந்து போவார். நாங்கள் எங்கட நிலையத்த ஆரம்பிச்ச பிறகு கிழமையில் ரெண்டு தடவை அவரும் வருகிறார்"

"அடிப்படை வசதிகள் குறைந்த இடங்களில நிலையம் அமைத்து செயற்படுகின்ற இந்த தியாகதீபம் திலீபன் மருத்துவசேவையில பணிபுரியும் மருத்துவர்கள் யார்? ஏனெனில் தற்போதைய வன்னிச்சுழலில் மருத்துவர்களின் பற்றாக்குறை என்பது அதிகம். இந்த பிரதேசங்களுக்கென தெரிவுசெய்யப்படும் மருத்துவர்கள் கூட இங்கு பணிபுரிய விரும்பாமல் வேறு வசதியான மாவட்டங்களை நாடிச் செல்கிறார்கள். அப்படியிருக்க இந்த மருத்துவசேவையில சேவைபுரியும் மருத்துவர்களைப்பற்றி...."

"இந்த மருத்துவசேவைக்கான மருத்துவர்களை நாங்கள் எங்கட அமைப்பில இருந்தே தெரிவு செய்தனாங்கள்.ஏழு வருடத்திற்குமேல விடுதலைப்புலிகளின் மருத்துவபிரிவில கற்ற,மருத்துவத்துறையில பணியாற்றிய போராளிகள தெரிவு செய்து அவர்களுக்கு மக்களுக்கு சேவை செய்யத்தக்கவாறான பயிற்சிகளை அளித்து பொது மருத்துவமனைகளில் சேவையாற்றவிட்டு அவர்கள இதுக்காக தெரிவுசெய்தோம். ஒவ்வொரு நிலையங்களிலயும் ஒவ்வொரு 'சிறப்பு மருத்துவ போராளிகளை நியமிச்சிருக்கிறம். பெண்போராளிகள் என்றால் இரண்டு பேரை விட்டிருக்கிறம். அனேகமாக இவர்கள் அந்தந்த கிராமங்களில உதவிமருத்துவ தொண்டர்களை உருவாக்கி அந்தப் பிரதேசத்தில திலீபன் மருத்துவ சேவை அபிவிருத்திக்குழு என்ற ஒன்றை அமைச்சிருக்கிறம். அவற்றின் உதவியோடதான் இந்த சிறப்பு மருத்துவ போராளிகள் செயற்பட்டு வருகிறார்கள். மேலும் இந்த சிறப்புமருத்துவ போராளிகள் மற்ற மருத்துவர்களைப் போலல்லாது 24 மணிநேரம் பணிபுரிகிறார்கள். எந்த நேரமும் அவையள் மருத்துவ நிலையத்திலயோ அல்லது கிராமத்திலேயோ தான் நிற்பார்கள்." என்றார்.

"போர்க்களங்களில் மருத்துவப்பணியாற்றி இப்போது மக்களுக்கு பணிபுரியும் இந்த சிறப்பு மருத்துவப் போராளிகள் பெருத்த அர்ப்பணிப்புடன் செயற்படக் கூடியவர்கள். அப்படி அர்ப்பணிப்புடன் செயற்படுவதால் இவர்கள் அதிகம் மக்களால் விரும்பப்படுவார்கள் என நினைக்கின்றேன். அப்படியான குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மக்களுடனான உறவுகள்பற்றி ஏதாவது உண்டா?"

"நெடுந்தீவில ஒரு சம்பவம். ஒரு சிறுவனுக்கு கடுமையான சளி. மூச்செடுக்க முடியாதபடி அவன்ர சுவாசப்பாதையில் சளி அடைச்சிட்டுது. அவனை எங்கட நிலையத்துக்கு கொண்டு வந்திச்சினம். ஆனா எங்கட போராளிகளிட்ட அந்த சிகிச்சை மேற்கொள்வதற்குரிய உபகரணங்கள் (உறிஞ்சி) எதுவுமில்லை. அந்த இடத்தில எங்கட போராளி ஒருவர் ஒரு குழாயை(பைப்) எடுத்து அந்த சிறுவன்ர மூக்குக்குள விட்டு மறுமுனையை தன்ர வாயில வைச்சு உறிஞ்சி அந்தச் சளியை எடுக்கிறார். அதால அந்தச் சிறுவன்ர உயிர் காப்பாற்றப்பட்டுவிட்டுது. இது அங்க நிண்டமக்கள் அனைவரையும் அதிசயப்பட வைச்சது. இந்த இடத்தில மற்றமருத்துவர்கள் எனின் ஒருவேளை வசதியில்லை என்று கைவிரித்திருப்பார்கள் என்றே நினைக்கிறேன்."

"இதே போல அண்மையில கடுமையான மழை பெய்தமையினால் வன்னியில பல இடங்களில் கடும் வெள்ளம் போட்டது. இப்படி ஒரு கிராமமே நீரில மூழ்கி மக்கள் எல்லாம் ஒரு உயரமான இடத்தில இருந்திச்சினம். அப்ப எங்களிட்டையும் வாகனவசதிகள் ஒன்றும் இருக்கல்ல. நாங்கள் எல்லா அரசசார்பற்ற உதவி நிறுவனங்களுக்கும் அறிவிச்சம். ஆனா எல்லோரும் ஏலாது என்று சொல்லிட்டினம். அந்தச் சமயத்தில எங்கட போராளி மருத்துவர்களே வெள்ளத்திற்குள்ளால மருந்துகள காவிச்சென்று அந்த மக்களுக்கு உடனடி மருத்துவ உதவிகளை வழங்கினார்கள். இப்படியெல்லாம் செய்வதற்கு மருத்துவத்தைக் கற்றிருந்தால் மட்டும் போதாது."

பெரியதொரு பணியை ஆற்றிக் கொண்டிருக்கும் இந்த திலீபன் மருத்துவசேவை முடிந்த அதன் சேவை ஆண்டில் மருந்துத் தேவைக்காக மட்டும் பத்து மில்லியன் ரூபாய்களை செலவு செய்திருக்கிறது. இப்படியானதொரு பெரிய தொகையில் மருந்துகளை வழங்கும் அளவுக்கு இந்த அமைப்பு செலவு செய்திருக்கிறது. அப்படியாயின் இதற்கான நிதி,மருத்துவ உதவிகளை ஏதேனும் நிறுவனங்கள் வழங்குகின்றனவா? அல்லது யார் இந்த செலவுகளை பொறுப்பேற்கின்றனர் என்று கேட்டதற்கு இந்த மருத்துவசேவைக்கு தேவையான முழு நிதியையும் விடுதலைப்புலிகள் அமைப்பே பொறுப்பேற்கின்றது என்றார். எமது விடுதலை போராட்டத்தில் ஒரு புதிய (மருத்துவ) களத்தைத்திறந்து அதிலும் எங்களின் போராளிகளை வைத்தே செயல் வடிவம் கொடுக்கும் தேசியத் தலைவருடைய எண்ணங்களையிட்டு வியப்படைகிறோம்.


"எங்களுக்கு இப்ப அரசமருத்துவ சேவை நிதிஉதவிகளை வழங்காட்டிலும் மருந்துப் பொருட்களை வழங்கிவருகிறார்கள். அதால இப்ப மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடென்பது குறைந்திருக்கிறது. ஆனால் மருத்துவ உபகரணங்கள் என்பது மிகமிக குறைவாகவே உள்ளன. நாங்கள் ஏதேனும் மருத்துவ முகாம்களை நடத்திறது என்றால் கூட எங்களுடைய போர்க்களத்தேவைகளுக்கு பயன்படுத்திய உபகரணங்களைத்தான் பயன்படுத்திவாறம். இப்பபோர் ஓய்ந்திருக்கிறதால இது சாத்தியப்படுகின்றது."

ஆனால் இப்ப தோன்றியிருக்கின்ற சமாதானச் சூழல்தான் இந்தச் சேவையின் தேவையை இன்னும் அதிகரிச்சிருக்குது. ஏனென்றால் சமாதான சூழல் அதிகளவு மருந்துவர்களையும் மருத்துவ நிலையங்களையும் கிராமங்களில் இருந்து வெளியேறவைத்து நகரங்களை நோக்கி நகரவைத்துவிட்டது.

குறிப்பாக ஒன்றைச்சொல்லலாம் ஊர்காவற்துறையில நெருஞ்சிமுனை என்னும் கிராமத்தில அரசமருத்துவ சேவையால் கட்டுப்படுத்தவியலாத அளவுக்கு அங்க கொலரா நோய் பரவத்தொடங்கிவிட்டது. அங்க எவருமே போக தயாரியில்லாத நிலமையில எங்களுடைய திலீபன் மருத்துவ சேவையும் தமிழீழ சுகாதாரசேவையும் இணைந்து அங்கே சென்று நடவடிக்கையில் உடனடியாக இறங்கினம். மக்கள் எல்லோரையும் இணைச்சு விளிப்புணர்வு கருத்துகளை செய்தம். அங்கிருந்த கிணறுகளுக்கெல்லாம் 'சுப்பர் குளோரினேற்றம்' செய்து முழுக் கிணறுகளையும் இறைத்து மீண்டும் குளோரினிட்டு துப்பரவு செய்தோம். எங்கட போராளிகளே நேர நின்று இவற்றைச் செய்தனர். இப்படியாக நான்கு மாதங்கள் அங்கேயே நின்று நிலமைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டுத்தான் அங்கேயிருந்து வெளியேறினம். அதன் பிறகுதான் அங்க அரச மருத்துவ சேவையை சேர்ந்தவ வந்திச்சினம். இப்படி நிறையப்பிரச்சினைகளைக் குறிப்பிடலாம்.

ஆனால் இப்படியான கடுமையான பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கு நிதிவளம் ஒரு பெரும் நெருக்கடியாகவே எமக்கு இருந்துவருகின்றது. எங்களுடைய நிலையங்களில நிற்கின்ற போராளிகளுக்குக்கூட ஒரு சிறு தொகை பணத்தைதான் அவர்களுடைய நிர்வாகச்செலவுக்கு பகிர்ந்தளிக்கின்றோம். அதிலும் மனதை நெருடுவது என்னவென்றால் அதிகம் அவர்கள் அந்த பணத்தை எப்படி செலவு செய்கிறார்கள் என்பதே. நிலையத்திற்கு தாய்மார்கள் கொண்டுவரும் சிறுகுழந்தைகள் போசாக்கின்றி வாடியிருக்கும் போது தங்களுடைய கைச்செலவு பணத்திலேயே அவர்களுக்கு போசாக்கான ஏதேனும் உணவுப்பொருட்களை வாங்கிக்கொடுக்கின்றனர். பணத்தில் பெருந்தொகையை இப்படியே அவர்கள் செலவழிக்கின்றார்கள். எங்களுக்கு நிறைய நிதி உதவி கிடைக்கும் என்றால் எங்கட மருத்துவ அமைப்பு எவ்வளவற்றையோ செய்யும். ◆

"தம்பி இங்க ஒரு இயக்கத்தம்பி நிண்டு ஒவ்வொரு கிராமமாக சைக்கில் ஓண்டில திரிஞ்சு வருத்தங்கள் பாப்பர். எங்களுக்கு ஏதேன் கடி, காயம், காய்ச்சல் எண்டா நாங்கள் உங்க தான் போறனாங்கள். இதுதான் இப்ப எங்கட ஊர் கோயில் மாதிரி. ஏனென்டா இதவிட எங்கள கவனிக்க கடவுள்கூட இஞ்சினேக்க இல்லாம போட்டார். ஆமி அடிச்ச செல்லுகளோட...."



# அளவிட முடியாத ஆழங்கள்

— சுழியோடி

கறுப்பை அழகில்லை என்று ஒதுக்கும் எவருக்கும் அவனைக் கண்டால் கறுப்பின் மீது கட்டாயம் ஆசைவரும். கடல் நீர் வேறு அவனது நிறத்தை அடிக்கடி மெருகுபடுத்திக் கொண்டிருந்தது.

அவனுக்கு தனது நிறத்தின்மீது மனக்குறை அதிகம் இருந்தது. ஏனெனில் அவனது சகோதரியும் சகோதரனும் அழகிய மாநிறத்தவர்கள். தாயின் மடியில் படுத்து அவள் தலைகோதி விடுகின்ற அந்த நெகிழ்வான பொழுதுகளில் அவன் தாயிடம் கேட்டிருக்கின்றான்

"ஏனணை என்னைக் கறுப்பாய் பெத்தனீ?"

சிறு வயதிலேயே போராட்டச் சுமையைத் தாங்கவந்து முதலில் தலைவரின் நேரடிக் கவனிப்பின்கீழ் இயங்கிய ஒரு பிரிவில் சகல பயிற்சிகளையும் கற்றுத் தேறியவன். பின்னர் கடற்புலிகள் அணியுடன் கடமையாற்ற வந்திருந்தான்.

அவன் வெறும் விடுதலைப்புலி மட்டுமல்ல. கணினிப் புலி. சினைப்பர் புலி.

தோளில் துப்பாக்கியை அணைத்தபடி ஒரு தோழனுடன் புறப்பட்டான் என்றால் கூடப்போகின்ற தோழனுக்கு மர அணில்களைத் தூக்கியே கை உளைந்துபோய்விடும். இயந்திரங்களோடு இரவு பகலாய்ப் போராடுகின்ற அவனது தோழர்களுக்கு அன்று ஒரு சுவையான இரவுணவு கிடைக்கும்.

இறுகிக் கிடந்த "ஜெயசிக்குறுய்" சமர் முனையை உடைப்பதற்கான வழங்கல் தேவைக்கென்று இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் அகப்படாது நிறுபூத்துப் போயிருந்த வன்னிப் பெருநிலப்பரப்பின் ஒரு சிறு நிலப்பரப்பிற்குள் ஒரு கடற்கலம் வேக வேகமாகக் கட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

அதன் இயந்திர வேலைகளுக்காக இவனும் இவனது தோழர்களும் போனார்கள். இவர்களைத் தவிர அங்கே வேலைசெய்த ஏனைய போராளிகள் அனைவரும் பெண் போராளிகள்.

யுத்தத்தின் இறுக்கநிலை அனைவருக்கும் தெரிந்தே இருந்தது. ஆகவே எல்லோரும் உடற் சுத்தத்திற்காக மட்டுமே வேலைத்தளத்தில் இருந்து வெளியே போனார்கள். தூக்கத்தை அவர்கள் தொலைத்து நீண்ட நாட்களாகி விட்டிருந்தது. அவனது ஒளிர் கறுப்பு முகத்தில் கண்கள் இரண்டும் கடும் சிவப்பாக முதன்முதலாய்ப் பார்ப்பவரை பயமுறுத்துவனவாய்க் காணப்பட்டன.

பயணத்திற்குத் தயாரான நிலையில் ஒருநாள் அவசர அவசரமாக பொருட்கள் எடுக்க வந்திருந்தான். போட்ட தேநீர் ஆறியிருந்தது. புதிதாய்ப்போட நேரமின்றி அவன் பரபரத்துக் கொண்டிருந்தான். அரைகுறை மனதுடன் அந்தப் போராளிச் சகோதரிகள் ஆறிய தேநீரையே அவனுக்குக் கொடுத்தார்கள். நின்றுகொண்டே தேநீரைக் குடித்தவன் தேநீர்க் கோப்பையை எறியாத குறையாய் போட்டுவிட்டுப் புறப்பட்டான். சோகத்துடன் கையசைத்த சகோதரிகளுக்கு

"நான் இப்போதைக்குச் சாகமாட்டன். இன்னும் நிறையச் சாதிக்கவேணும"

என்று சொல்லிக்கொண்டே போனான். பயணம் போனவர்களிடையே அவன்தான் சிறியவன். அவர்கள் வெற்றிகரமாகத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். கரையிலிருந்து இராமர் அணையின் இருமடங்கு தொலைவில் அவர்கள் வந்துகொண்டிருக்க அந்த நள்ளிரவில் கரை நடுப்பகலபோல பரபரத்துக் கொண்டிருந்தது. "ஜெயசிக்குறுய்" சமரை ஒருகை பார்த்துவிடலாம் என்ற நினைவில் கரை நிறைந்திருந்தது. பயணத்தால் களைத்துப்போய்வரும் அவர்களுக்கான உணவுகளும் பானங்களும்கூட அவர்களது வரவிற்காகக் காத்திருந்தன.

கடற்படையின் புதிய நவீனரக றேடார்த் திரையில் அவர்கள் வந்த கலம் புள்ளியிட நிலைமை அபாயகரமானது.

அதியுச்ச வேகத்தில் அந்தப் பெரிய கடற்படைக்கலம் அவர்களது கண்பார்வை எல்லைக்குள் வந்தது. கொண்டுவந்த பொருட்களின் நிலைமை கருதி வீண் சண்டையைத் தவிர்த்து அவர்கள் விலகிக் கொண்டிருக்க சண்டையிட நேரமின்றி வந்து விழுந்த பீரங்கிக் குண்டுகளின் சிதறல்களினால் அவர்கள் காயப்பட்டனர்.

அவன் மட்டும் காயப்படவில்லை. அனைவரும் கடலில் குதித்தார்கள். காயப்பட்ட ஏனையவர்களுக்குத் துணையாக நீந்தினான். உதவிப் படகு வந்ததும் ஏனையவர்களைப் பத்திரமாக அதிலே ஏற்றியவன் மீண்டும் தங்களது படகிற்குத் திரும்பினான். அந்தப்படகு பிடிபட்டுவிடக்கூடாது என்பதற்காக அவன் அதனுடன் காத்திருந்தான். எதிரிக்கலம் நெருங்கிக் கொண்டிருந்தது. அவன் நிதானமாக உள்ளே இறங்கினான். இறுதிவரை தன் படகிலிருந்த பொருட்கள் எதிரியிடம் பிடிபடக்கூடாது என்பதில் அவன் உறுதியாய் இருந்தான். மின்சாரத்தின் எதிரெதிர் முனைகளின் தொடுகையில் தோன்றிய சுவாலை அவனுடன் சேர்ந்து உட்பகுதி முழுவதையும் வியாபித்து விழுங்க அந்த அமுக்கம் தாளாமல் படகு பெருத்த ஓசையுடன் வெடித்து எரிய ஆரம்பித்தது. உதவிப் படகிலிருந்தவர்கள் விக்கித்துப்போய் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

உதவிப் படகும் மூழ்கிப்போனது. அவன் வந்துபோன தடம் அழியுமுன்னே அவனது வீரச்சாவுச் செய்தி வந்தது. எனினும் சாதிக்கவேண்டும் என்று சொல்லிப்போன அவன் எப்படியும் வருவான் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள்.

அவன் வரவில்லை. அவன் சாதிக்க நினைத்தவற்றை ஏனையவர்கள் செய்து முடிப்பார்கள் என்ற உறுதியான நம்பிக்கை இல்லாமல் அவன் சாகவுமில்லை.

"நாளைக்கு கடல் எங்கள் கையில் சேரும்
உங்கள் மேனிக்கு அலைவந்து பூக்கள் போடும" ◆

## போரின் மருத்துவம்

(11ம் பக்க தொடர்ச்சி)

இவர்களின் களஞ்சியங்களும் அழிந்துவிட்டிருந்தன. வரனும் இன்னொருவனும் விரைந்து சென்று சிவநேசனைத் தூக்கிக்கொண்டு ஓடுகின்றார்கள். "ஆத்துக்கு அங்கால போங்கள் திரும்பவும் வந்து அடிப்பான் அல்லது செல்லால துடைப்பான்." தளபதி கட்டளை பிறப்பிப்பது கேட்கிறது. ஏனைய காயக்காரர்களையும் தூக்கிக்கொண்டு கழுத்தளவு நீர் ஓடும் ஆற்றைக் கடந்து மறுபக்கம் ஏறுகின்றார்கள். அப்பகுதியில் மரம் அரிவதற்கு என வெட்டப்பட்ட பாரிய குழி ஒன்று உள்ளது. அதனருகில் வைத்து அவசர அவசரமாக சறங்களைக் கிழித்து இரத்தப் பெருக்குகளைக் கட்டுப் போடுகின்றார்கள். மீண்டும் இரைந்து வரும் விமானங்கள் இவர்களின் திசையிலேயே குண்டுகளைப் போடுகின்றன. எல்லோரும் நிலத்தில் விழுந்து படுத்துக் கொள்கின்றார்கள்.

மருத்துவப் போராளி ஒருவன் சேதமுற்றிருந்த களமருத்துவப்பை ஒன்றினைக் கொண்டு ஓடிவருகின்றான். அதனுள் இரண்டு 'பைந்' திரவ ஊடகம் மட்டும் நல்ல நிலையில் உள்ளது. அதனை அவசியமானவர்களுக்கு ஏற்றுகின்றார்கள். இவர்களின் அதிஸ்டம் அதனுள் குருதி சேகரிக்கும் பையும் இருந்தது. அதனைப்பாவித்து ஒரு போராளியில் இருந்து இரத்தம் எடுத்து சிவநேசனுக்கு குருதி மாற்றீடு செய்கின்றார்கள். அப்பொழுது மருத்துவப் போராளி மன்மதனையும் மொழிவாணனையும் காணவில்லையென வரன் கேட்க, அவர்கள் அந்த இடத்திலேயே வீரச்சாவடைந்து விட்டதாகக் கூறுகின்றார்கள். மீண்டும் யுத்த விமானங்களின் இரைச்சல் காதைப் பிளக்கின்றது. இரத்தம் உள்ள பையை மரக்கிளை ஒன்றில் தொங்கவிட்டு ஒருவன் மட்டும் துணைக்கு நிற்க ஏனையவர்கள் பரந்து விரிந்து காடுகளினுள் ஓடுகின்றார்கள். போர் விமானங்கள் மறைந்தவுடன் மீண்டும் ஓடிவந்து பார்க்கின்றார்கள். சிவநேசனின் உயிரும் பிரிந்திருந்தது.

எதிர்பாரா திடீர் இழப்புக்கள் ஏற்படுத்திய சோகம், அந்தரம், இறுக்கமான சூழ்நிலை....... என்ன செய்யலாம்? காயமடைந்து உயிருடன் இருப்பவர்களுக்கு சிகிச்சையளிக்க மருந்துகள் வேண்டும். மீண்டும் பரண்களுக்கு ஆட்கள் போகவேண்டும். இருவர் அனுப்பப்படுகின்றார்கள். அவர்களின் கழுகுக் கண்களில் இராணுவப் பாதணித் தடங்கள் தென்பட்டுவிட்டன. விடயத்தைத் தளபதிக்கு அறிவிக்கின்றார்கள். நிலைமை விபரீதமாக உள்ளது. இராணுவம் காடுகளினுள்ளும் தேடலுக்கு இறங்கிவிட்டது. அல்லது பகை வேவுக்காரர்கள் நடமாடுகிறார்கள். காயக்காரரைக் காப்பாற்றுவதா? முற்றுகை உடைப்பிற்காகச் சண்டை வியூகத்தை மீளமைப்பதா? இல்லை பின்வாங்குவதா? நிலமைக்கு ஏற்ப முடிவெடுக்கவேண்டும். மீண்டும் மருத்துவப்போராளி லவனுடன் ஏழுபேர் மருந்துப் பொருட்கள் எடுத்துவரப் புறப்படுகின்றார்கள். இன்னும் சிலர் அருகிருக்கும் கிராமங்கள் சென்று கட்டுத்துணிகளையும் சில மருந்துப்பொருட்களையும் எடுத்துவரப் போகின்றார்கள்.

சில மணிகளில் கிராமங்கள் நோக்கிப் புறப்பட்டவர்களின் பாதையில் விமானத்தாக்குதல் நடத்தப்பட்டுவிட்டது. எனவே அவர்களின் உதவியை இப்போதைக்கு எதிர்பார்க்க முடியாது. மரப்பரண்களில் இருந்து கொண்டுவரப்பட்டவற்றை வைத்து ஏனையவர்களுக்கு அவசர சிகிச்சை செய்யப்படுகின்றது. காயக்காரரைத் தொடர்ந்து அங்கு வைத்திருப்பது ஆபத்தானது. ஆதலால் மருத்துவப்போராளி ஒருவனுடன் அவர்கள் பலமைல் தொலைவிலுள்ள இன்னொரு வனமுகாம் அனுப்பப்படுகின்றார்கள். பின்னர் நிலமைக்கு ஏற்ப முடிவுகள் எடுக்கப்படுகின்றன. வீரச்சாவடைந்தவர்களின் உடல்கள் புதைக்கப்படுகின்றன. மீளொழுங்குபடுத்தப்பட்ட வீரர்களிலிருந்து வேவு அணியொன்று தேர்ந்தெடுக்கப்படுகின்றது. அது பகைவேவு அணியைத்தேடித் தொல்லை கொடுக்கும் தாக்குதலை நடாத்தப்புறப்பட்டுவிட்டது. அவர்களுடன் மிகுதியாக எஞ்சி நின்ற மருத்துவப்போராளி லவனும் சென்றுவிட்டான். இப்பொழுது வரனுக்கு இக்கட்டான நிலையில் ஆலோசனை கலக்கவோ சேர்ந்து முடிவெடுத்து செயற்படவோ வேறு மருத்துவப் போராளிகள் துணைக்கு இல்லை. எனினும் அவன் அதனை உணரக் களைப்பும், அடுத்து ஏற்படும் நிலையை எதிர்கொள்ளத் தயாராகவேண்டிய வேலைப்பளுவும் இடம்கொடுக்கவில்லை. ●

# பூச்சூடியதற்கு பெருமைப்படு முடிசூடுவதற்கு முன்னேறு

—வியாசன் —

புத்தாடை புனைந்துள்ளாய்
மெத்த மகிழ்ச்சி.
அச்சா அழகுடையாய் நீ.
செம்புழுதியேறிய தலைகழுவி
வகிடெடுத்து வாரியுள்ளாய்
கன காலத்தின் பின்னே வந்த கச்சிதம்.
நீ எழிலாய் இருப்பதில் எனக்கு வருத்தமில்லை.
தன் மகவு அழகாயிருப்பதையிட்டு
எந்தத் தாய்க்குத்தான் எரிச்சல் வரும்?
ஆயினும் ஒரு ஆதங்கம்
தலைவாரிப் பூச்சூடியுள்ளாய் எனினும்
மணிமுடி இல்லையே.
உன்தலை மகுடத்துக்குரியதன்றோ
எங்கே முடி?
கொற்றக் குடையின் கீழல்லவா
நீ குடியிருக்க வேண்டியவள்
எங்கே குடை?
சிம்மாசனத்திலல்லவா சிரித்திருக்கவேண்டும் நீ
எங்கே ஆசனம்?
ஒன்றும் கிட்டவில்லையே உனக்கு.
எதுவும் எடுக்கவில்லையே இன்னும்.
புழுதித்தலை கழுவிப் பூச்சூடியதும்
வாழ்வு சித்தித்ததென
வாசம் பூசியுள்ளாய்.
ஆகாது பிள்ளாய்
அவசரப்பட்டு ஆடிவிழக்கூடாது.
நின்று நிதானித்து
கொஞ்சம் திரும்பிப்பார்.
நீண்ட தூரத்துக்கு விழியெறிந்து
பின்னே பார் எல்லாம் புலனாகும்.
எத்தனையை இழந்து இத்தனை வந்தது?
வந்ததும் வாழ்வுதானா என்று
நெஞ்சைக்கேள் சொல்லும்.
அந்தோபார் நீ விதைத்த வயலில்
கண்படும் தூரம்வரையும் கல்லறைப்பயிர்.
இந்தோ இடியுண்ட நகரமும், கிராமங்களும்
இடிபாடுகளுக்கிடையேதான் இன்றும் உறவுகள்.
முன்னே பொய்க்காலுடன் ஒருவன் போகிறானே
அவனுன் தோழன்.
இரண்டு கையுமற்ற ஒருத்தி வருகிறாளே
அவளுன் தோழி.
பக்கத்தே தோல்சுற்றிய எலும்புக்கூடாய்
எந்த மலர்ச்சியும் இல்லாத மக்கள்.
இத்தனையும் போரினாற்தானே என்று
நீ சொல்லிப் போகலாம்.
இல்லையடா
இது விடுதலைக்கு நாம் கொடுத்த விலை.
படுக்கைப்புண்ணுடன் எம்தெருக்கள்
நடக்கமுடியவில்லை அதன்மேலே.
பாலுக்கழுகின்றனர் பாலகர்கள்
பார்க்கச் சகிக்கவில்லையே.
ஒட்ட இறைத்த கிணறு ஊறவில்லை
ஏதேனும் மாற்றம் தெரிகிறதா எம்மில்?
கைவிட்டுப் போனவர்கள் வந்து
காணி வாங்குகின்றனர்.
விலகியிருந்தவர்கள் வந்து
காணி வாங்குகின்றனர்.
விலகியிருந்தவர் வந்து வீடுகட்டுகின்றர்
எமக்கொன்றும் கைசேரலையே பிள்ளாய்
நீ தலைவாரியுள்ளாய் அவ்வளவே
அதற்கே இத்தனை ஆனந்தமா உனக்கு?
உலகம் வல்லவர் கையில் உருள்கிறது
அவர்கள் எப்போதும் கெட்டிக்காரர்கள்.
தங்களுக்குத் தேவையெனில்
தலைவாரச் சீப்புத்தருவார்கள்,
பூசவென எண்ணை தருவார்கள்,
பளபளப்பான பவுடர் தருவார்கள்
வடிவுக்குரியன தந்து வசமாக்கிவிடுவர்.
**U.N.O** தொடக்கம்
**U.S.A** வரையும் இது தான் மரபு.
நீ நீயாக நிமிர நிச்சயம் விடமாட்டார்.
அலங்காரக் கண்ணாடி முன்னே
மயங்கமாட்டாய் என்பது தெரியும்
ஆயினும் கலக்கமாக இருக்கிறது எனக்கு.
வாழ்வைப் பறித்தவர்களுடன் கைகுலுக்கி
பேசுவது பிழையில்லை.
பேச்சுவார்த்தை மூலமும்
பிறக்கலாம் புதிய ஒளி.
சாட்சிகள் அதற்கு உண்டு.
பிரமஞானியும்
அருகருகாய் உள்ள தளபதிகளும்
வென்று வரவேண்டுமென விரும்புவோம்.
அவர்கள் விடிவு கொண்டு வரலாம்
விடிவு கொண்டு வராவிட்டாலும்
ஒரு முடிவு கொண்டு வருவார்கள்.
அப்போது அந்த முடிவிலிருந்து முளைக்கவேண்டும்
தயாராக இருப்பதே அதற்குரிய தகுதி.
தலைவன் எடுக்கின்ற எந்த முடிவுக்கும்
தோள் கொடுக்கச் சூடாக இருப்போம்.
சூரியன் சுட்டும் திசையில்
சுட்டெரிக்கத் துணிவாக இருப்போம்.
தளர்வின்றி இருப்பதே வளரும்
சோர்ந்து போனால் நூர்ந்து போகும்.
போரெனினும்
அமைதியெனினும்
தன்னிலை இழத்தல் தகுதியல்ல.
கொஞ்சம் நிதானித்து நின்று பார்
"சுதந்திரத்துக்கு நாம் கொடுத்த விலை" என
சுட்டிக்காட்டச் சுவடேதும் உண்டா எம்மிடம்?
**A9** தெருவுக்கு எத்தனைபேரை இழந்தோம்
அட; ஆனையிறவுக்கு எத்தனை ஆயிரம் பேர்?
இன்றிந்த இடங்களில் ஏதேனும் இருக்கிறதா?
வருவோருக்குத் தெரியுமா இதன் வரலாறு?
சந்தைக்கு வருகின்றனர் எல்லோரும்
நாங்கள் சாமான் நிறுத்துக் கொடுக்கின்றோம்.
"முடிந்து போனது" என்ற முகப்பாத்தி பலருக்கு
உனக்கும் அதுவென்றால் எப்படி உருப்படுவாய்.
புயலும் மழையும் அடித்த புதுக்காட்டில்
இன்று ஒளியும் இருளும் கலந்த வைகறை.
விடிவிலிருந்து புலரலாம் ஒரு பொழுது.
தேவதைகள் வரம்தர மறுத்தால்
மீண்டும் புயலும் மழையுமென்றாகலாம்.
"பட்டு வேட்டிக்கனவிலிருந்தால்
கட்டிய கோவணத்தையும் உருவிவிடுவார்கள்"
கவனம்.
விடுதலை ஒன்றே விரிவானம்
சிட்டுக்குருவியாய் சிறகடிக்க வேண்டும்.
சுதந்திரமொன்றே சுடர்நெருப்பு
உலையேற்றி விருந்துண்ண வேண்டும்.
தமிழரென இருப்போம்.
தாரக மந்திரத்தை உச்சரிப்போம்.
கொடுத்த விலையைக் குறித்துக் கொள்வோம்.
மலைவரினும் தலைசுமக்கும் துணிவில்
பேச்சுக்குப் போனவர் திரும்பும் வரை
சோதிப்பிளம்பாகத் தோன்றுவோம்.
விடிவோ ஒரு முடிவோ வரும் வரை
காத்திருப்பதில் எந்தக் களங்கமுமில்லை.
தலைமை தளராது
உன் நிலைமையை நிறுத்துக் கொள்.
அவர்கள் ஆமென்றால்
அணைத்துக் கொள்வோம்.
இல்லையெனில் இடித்துக் கொள்வோம்.
"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"